விலை : 20.00
பக்கங்கள்: பதினாறு+பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284)
(சி-2822)

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 13 ஞாயிற்றுக்கிழமை (29.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345

# அரசியல் கைதிகளை விரைந்து விடுவியுங்கள்

## மனித உரிமைகள் ஆணையகம் சட்டமா அதிபரிடம் வலியுறுத்து

(கொழும்பு)

**பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகால சட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்குமாறு கூறியுள்ள மனித உரிமைகள் ஆணையகம், நம்பிக்கைக்குரிய சாட்சியங்கள் இல்லாமல் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளது.**

பயங்கரவாதத் தடைச் சட்டததின் கீழும் அவசரகால சட்டவிதிமுறைகளின் கீழும் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் உரிமைகள் தொடர்பில் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக கூறியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபருக்கு கடிதம் மூலம்

15ஆம் பக்கம் பார்க்க

## காற்றமுத்த தாழ்வுநிலை

(கொழும்பு)

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை காரணமாக நாட்டின் வடக்கு பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலையால் தமிழகம் மற்றும் இலங்கையின் வடக்கே அடுத்த 48 மணி நேரத்தில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## அரச மருத்துவர்கள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு தழுவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக அரச மருத்துவர்கள் சங்கம எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற அவசர கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதன் செயலாளர் டாக்டர் நலிந்த ஹேரத் தெரிவித்தார்.

அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் திருத்தம் செய்யாமை மற்றும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளுக்கு வரிச் சலுகை வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம்

16ஆம் பக்கம் பார்க்க

## O/L Exam

## ஜனாதிபதி இன்று

## ஜனாதிபதிக்கு நோபல் பரிசு?

## குண்டு துளைக்காத

கிழும் அவசரகால சட்டவிதிமுறை
களின் கீழும் தடுத்துவைக்கப்பட்டு

தொடர்பில் ஆழ்ந்த கவலையட
நதுள்ளதாக கூறியுள்ள இலங்கை

15ஆம் பக்கம் பார்க்க

எள்ளது. (செ-12)

16ஆம் பக்கம் பார்க்க




## ஜனாதிபதி இன்று பிரான்ஸ் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன இன்று மோல்டாவிலிருந்து பிரான்ஸ் நோக்கி பயணமாகவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மோல்டா சென்றுள்ள ஜனாதிபதி

15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு நோபல் பரிசு?

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு நோபல் பரிசு வழங்கு வது தொடர்பாக சர்வதேச ரீதியில் ஆலோசனை இடம்பெற்று வருகி ன்றதென அமைச்சர் ஜோன் அமர துங்க தகவல் வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத் தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரை யாற்றியபோதே மேற்கண்டவாறு தகவலை வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

15ஆம் பக்கம் பார்க்க

## குண்டு துளைக்காத கார் வேண்டும்

(கொழும்பு)

குண்டு துளைக்காத கார் ஒன்றை தனக்கு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவி டம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு தொலைபேசி

16ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் படைத் தளபதி இன்று கொழும்பு வருகை



(கொழும்பு)

இலங்கைக்கு ஐந்து நாள் அதி காரபூர்வ பயணத்தை மேற்கொண்டு இந்திய படைத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹாக் இன்று ஞாயிற்றுக கிழமை கொழும்பு வரவுள்ளார்.

இலங்கையில் வளர்ந்து வரும் சீனாவின் செல்வாக்கைத் தடுக்கும் புதுடில்லியின் ஒரு முயற்சியாகவே

16ஆம் பக்கம் பார்க்க

## மிதிபலகையில் செல்லத்தடை

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் முத லாம் திகதி தொடக்கம் தூர இடங்க ளுக்கு செல்லும் புகையிரதங்க ளின் மிதிபலகையில் பயணிக்கத் தடை என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில்வே சட்டத்தின்படி மிதி பலகையில் நின்றோ அல்லது இரு ந்தோ செல்வதற்கான பயணத்தடை

16ஆம் பக்கம் பார்க்க

## வருடாந்த நிதி கூற்றறிக்கை வடக்கு சபையால் அங்கீகரிப்பு

### 2015ஐ விட 2016க்கு அதிக நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி கூற்றறிக்கை மாகாணசபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை காட்டிலும் 2016ஆம் ஆண்டுக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் கேட்கப்பட்ட நிதி வழங் கப்படவில்லை என முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபைகளின் சட்டத் தின்படி ஒவ்வொரு நிதி ஆண்டின தும் நிதி கூற்றறிக்கை குறித்த நிதி ஆண்டு தொடங்குவதற்கு ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன் னர் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபை யினால அங்கீகரிக்கப்பட வேண்டும். இதற்கமைய நேற்று வட மாகாண

15ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளராக பற்றீசியா

### கமலேஷ் சர்மாவின் பதவிக்காலம் மார்ச்சுடன் நிறைவு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப் பின் புதிய பொதுச் செயலாளராக பரோனெஸ் பற்றீசியா ஸ்கொட்ல ன்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமை ப்பின் தற்போதைய பொதுச் செயலா ளராக பணியாற்றி வரும் கமலேஷ் சர்மாவின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறை வடையவுள்ள நிலையிலேயே,



15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.ஆயரின் திருநிலைப்படுத்தல் சடங்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்மறைமாவ ட்ட புதிய ஆயராக நியமனம் பெற்று ள்ள ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்ட கையின் திருநிலை ப்படுத்தல் சடங்கு நேற்று 28 ஆம்திகதி யாழ்.புனித மரிய

15ஆம் பக்கம் பார்க்க

## ராஜிதவிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

குற்றப்புலனாய்வு பிரிவினர், அமைச்சர் ராஜித சேனாரத்னவை ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்கள விசாரணைக்கு உட்படுத்தி வாக்கு மூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அவன்கார்ட் தலைவரிடம் பணம பெற்றுக்கொண்டதாக குற்றஞ்சாட் டப்பட்டுள்ள நிலையிலேயே இந்த விசாரணை நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தீ அனர்த்தம் பொருட்கள் நாசம்

(யாழ்ப்பாணம்)

கணனி விற்பனை நிலையம் ஒன்றின் களஞ்சிய பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

கணனி விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் ஏற்பட்ட தீயினால் அங்கு கணனிகள், கணனி உதிரிப் பாகங்கள், திருத்த வேலைகளுக்காக வைக்கப்பட்டிருந்த கணனிகள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் என்பன தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இத் தீ அனர்த்தம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இலுப்பையடிச் சந்திக்கு அண்மையிலுள்ள கணனி விற்பனை நிலையம் ஒன்றிலேயே இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு நின்றவர்களும் தீயணைப்பு வீரர்களும் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும் அங்கு ஏற்பட்ட பெருமளவு பொருட் சேதத்தை தடுக்க முடியவில்லை. மேலும் இச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளும் இடம் பெற்று வருகின்றன. (செ-12)

# இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 2011ம் ஆண்டு உயர்தர மாணவர்களால் நடத்தப்படும் (Smash 2015) மேசைப்பந்தாட்டம், கரம் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் அழைக்கப்பட்ட அனைத்துப் பாடசாலையும் உரிய நேரத்தில் சமுகமளிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர். (க-12-23)


## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**

30.11.2015 முதல் 06.12.2015 வரை
7 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்



ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகன் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

(C-2814)

**நாதன் இன்**

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

## ஏல விற்பனை

பாவனைக்கு உட்படுத்த முடியாத 5 பாலர் மேசைகளும் 15 பாலர் கதிரைகளும் 04-12-2015 ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணியளவில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளன. (C-2825)

அதிபர்
யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## YOGIS

INSTITUTE OF BEAUTY THERAPY
HAIR DRESSING & HOME SCIENCE (pvt) Ltd.

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாட்கள் மட்டும்

2015 December 12th, 13th, 14th திகதிகளில் காலை 10 மணி முதல் ஆரம்பம்.

இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும், செய்யக்கூடிய 5 கேக் வகைகள், 5 பேஸ்ரி வகைகள் (Pastries), 5 Sweets வகைகள்

**வகுப்புக்களில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.**


(C-2817)

T. Phone:
0212222796
0777164923

75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## இலங்கையின் முதல்தர உயர் கல்வி நிறுவனம் இப்பொழுது யாழ் மண்ணில்..

ICBT CAMPUS JAFFNA






புதிய பிரிவுகள் ஆரம்பம்
**December - 2015**

(C-2826)

- HND in Computing
- HND in Business Management
- HND in Civil Engineering
- HND in Quantity Surveying

**DIPLOMA ENGLISH / IT**

**MBA** March Intake

ICBT CAMPUS JAFFNA

No : 580,
Hospital Road,
Jaffna.
021 4 777 888

076 928 9784
076 928 9810
piroshaan@icbtcampus.edu.lk

# நினைவுச் சின்னங்களை அழித்தாலும் நினைவுகளை அழித்துவிட முடியாது

## மாவீரர் நாள் நிகழ்வில் ஐங்கரநேசன் உரை

(இத்தாவில்)

**தமிழினத்தின் விடுதலைக்காக உயிர் துறந்த உத்தமர்களின் நினைவாலயங்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. ஆனால், நினைவுச் சின்னங்களை அழித்தாலும் மக்கள் மனங்களில் இருந்து அவர்களது நினைவுகளை எவராலும் அழித்துவிட முடியாது. அவர்களின் நினைவாக மரங்களை நாட்டிப் போற்றுவோம் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

மாவீரர் தினமான நேற்று முன்தினம் உயிர் ஈகம் செய்த போராளிகளை நினைவு கொள்ளும் முகமாக இத்தாவில் பகுதியில் பொதுமக்களால் நேற்று முன்தினம் மரநடுகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உயர் துறந்தவர்களின் நினைவு நாட்களை அனுஷ்டிப்பது உறவுகளின் மரபார்ந்த உரிமை. அதுவும், எமது அரசியல் விடுதலைக்காக உயிர் துறந்தவர்களின் நினைவை அனுஷ்டிப்பது எங்கள் எல்லோரதும் கடமை. கூட்டுப் பிரார்த்தனைக்கு வலு அதிகம். அதுபோன்றுதான், வெவ்வேறு காலப்பகுதிகளில் உயிர் துறந்தவர்களின் நினைவையும் கூட்டாக அனுஷ்டிக்கும்போது அதற்குக் கிடைக்கும் வலு அதிகம். அதனால்தான், அரசாங்கம் மாவீரர் தினத்தைக் கொண்டாட முடியாது என்று தடைவிதிக்கிறது. இந்தத் தடைகளுக்குப் பயந்து பணிவோமாக இருந்தால், நாம் தொடர்ந்தும் அடுத்தவர்களுக்கு அடிபணிந்தவர்களாகவே எப்போதும் வாழ நேரிடும்.

நாம் எவருமே இன்னுமொரு யுத்தத்தை விரும்பவில்லை. இது வரையில் நாம் கொடுத்த உயிர்ப் பலிகள் போதும். எமது இளைய தலைமுறை மீண்டும் ஒருபோதும் வன்முறைப் பாதைக்குத் திரும்பக் கூடாது. ஆனால், அவ்வாறு நேர்ந்து விடுமோ என்று இப்போது அஞ்ச வேண்டியுள்ளது. அரசியல் கைதிகளின் விடயத்தில் அரசாங்கம் காட்டி வரும் அலட்சியம் காரணமாக ஒரு மாணவன் அநியாயமாகத் தன்னுயிரை மாய்த்துக் கொண்டிருப்பது சாதாரண ஒரு விடயமல்ல. அரசாங்கம் இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்து தொடர்ந்தும் அடக்கு முறைகளைப் பிரயோகிப்பதைத் தவிர்த்து தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நினைவாக மரங்களை நடுகை செய்யும் நிகழ்ச்சியில் மாகாணசபை உறுப்பினர்கள் சு. பசுபதிப்பிள்ளை, ப.அரியரத்தினம், இ.ஆனோல்ட், பா.கஜதீபன் ஆகியோரும் பெருமளவான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தார் கள். கலந்து கொண்டிருந்த பொது மக்கள் அனைவருக்கும் தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டதோடு உதவிபொருட்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(இ-4)

## அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும் வரை வழிபடுங்கள்

### இந்து சமயப் பேரவை வேண்டுகோள்

அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும் வரை மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை ஆலயங்களில் அல்லது தத்தம் வீடுகளில் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவன் செந்தூரனின் உயிரிழப்புக்கு அனுதாபம் தெரிவித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ரயில் முன்பாகப் பாய்ந்த கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரன் உயிர் நீத்த செய்தி எம்மைத் துன்பக்கடலில் ஆழ்த்தியுள்ளது. அம் மாணவனின் உறவுகளுக்கு இந்து சமயப் பேரவை சார்பில் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அரசியல் கைதிகளின் விவகாரத்தில் சரியான, தீர்க்கமான , புத்திசாதுரியமான முடிவை அரசு மேற்கொள்ளாத காரணத்தினால் இத்தகைய உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது. ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு சாமானிய வாழ்வுக்கு வருவதற்கு உறுதி பூண்டுள்ள அரசியல் கைதிகளைச் சிறையில் அடைத்து விட்டு வேடிக்கை பார்ப்பது இந் நாட்டின் எதிர் காலத்தை அதல பாதாளத்தினுள் இழுத்து வீழ்த்தும் செயல் என்பதை சகல அரசியற் கட்சிகளும் உணர்ந்து இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கோருகின்றோம். அரசியற் கைதிகள் விவகாரத்தை சாதாரண நாட்டு சட்டங்களுடாகப் பார்த்து வளர்த்துக் கொள்ளக் கூடாது என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டின் இனப்பிரச்சினை விவகாரத்தில் சாத்வீக போராட்ட காலங்களிலும் ஆயுத போராட்டங்களை நிறுத்தி விட்டு சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்ட காலங்களிலும் அவற்றை அரசு உதாசீனம் செய்த சந்தர்ப்பங்கள் பல உண்டு.

எதிர்காலத்தில் மாணவன் செந்தூரனுக்கு நேர்ந்த கதி யாருக்கும் ஏற்படக்கூடாது. இதுபோன்ற முடிவைத் தயவு செய்து எவரும் எடுக்கக் கூடாது என்பதை மிகுந்த விநயத்துடன் கேட்டுக் கொள்வதோடு அனைவரும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும் வரை மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை ஆலயங்களில் அல்லது தத்தம் வீடுகளில் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கலை விழா இன்று

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 30 ஆவது மற்றும் பொற்பதி இந்து அறநெறிப்பாடசாலையின் 4 ஆவது கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சரஸ்வதி முன்பள்ளி, பொற்பதி அறிவாலயம் என்பனவற்றின் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி. சுபாசினி மதியழகன , யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக இந்து கலாசார திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் எஸ.சிவ மகாலிங்கம் ,யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் வே. கமலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5 )

## சைவநெறித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடத்தப்பட்ட தரம் 2 முதல் தரம் 11 வரையான சைவநெறி, தரம் 2 முதல் தரம் 8 வரையான தமிழ் மொழி பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் குழு முறையில் நடைபெறவுள்ளன.


இப்பணிக்கு சைவநெறி, தமிழ் மொழி கற்பிக்கும் தகைமை பெற்றுள்ள ஆசிரியர்கள் உதவும்படியும் இப்பணியில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் பெயர், விபரங்களை பரீட்சைச் செயலாளர், சைவபரிபாலன சபை, இல.66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கடித மூலம் அனுப்பி வைக்கும் படி சபையின் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (இ-5)

## 2503 பேர் உயிரிழப்பு

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் வாகன விபத்துக்களினால் 2ஆயிரத்து 503 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் 2 ஆயிரத்து 326 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக வாகனங்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்தார். கடந்த வருடத்தில் இடம்பெற்ற 2 ஆயிரத்து 37 வாகன விபத்துகளில் 2 ஆயிரத்து 93 மரணங்கள் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஊரெழுப் பகுதியில் வெள்ளப்பாதிப்புக்களை நேரில் சென்று பார்வையிட்டார் சித்தார்த்தன்



யாழ். ஊரெழுப் பகுதியில் வெள்ளம் காரணமாக பல வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்திருக்கின்றன. இதனை புளொட் தலைவரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்று முன் தினம் அப்பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை பார்வையிட்டார்.

கிராம சேவை யாளர் சிவானந்தன் அந்தப் பகுதிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினரை அழைத்துச் சென்று பாதிப்புக்களைக் காண்பித்து அவர்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். உடனடியாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கோப்பாய் பகுதி பிரதேச செயலர் பிரதீபனுடன் தொடர்புகொண்டு அடுத்து வரவிருக்கின்ற வீட்டுத் திட்டத்தில் அந்தப் பகுதிக்கும் வீடுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவ்விடயத்தை தான் நிச்சயம் கவனத்தில் எடுப்பதாக பிரதேச செயலர் இதன்போது உறுதியளித்தார். ஊரெழுப் பிரதேச மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பாடசாலையில் தங்கியிருந்தபோது அவர்களுக்கு நிவாரண உதவிகளும் வழங்கிவைக்கப்பட்டிருந்தன. (இ)

## முதலமைச்சரின் நிதியொதுக்கீட்டின் கீழ் கொத்துக்கட்டி பகுதியில் வீடு அமைப்பு

முதலமைச்சரின் நிதி மற்றும் முதலமைச்சரின் அமைச்சின் வீடமைப்பு திட்ட நிதியின் கீழ் 7 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியில் கட்டப்பட்ட புதிய வீடு ஒன்று நவாலி கொத்துக்கட்டி எனும் கிராமத்தில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது.



வடக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களை தெரிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முதலமைச்சரின் அமைச்சின் வீடமைப்பு திட்ட நிதியின் கீழ் இந்த வருடம் 8.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 14 வீடுகள் தலா 6 இலட்சம் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்படுகின்றன.

அந்த வகையில் யாழ் மாவடடத்தில் 8 வீடுகளும், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 2 வீடுகளும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா ஒவ்வொரு வீடும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அமைக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் இந்த வருட இறுதிக்குள் பயனாளிகளிடத்தில் கையளிக்கப் படவுள்ளது. (இ-9)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் இருப்பிடமாய் - நற்பண்புகளுடன்
எம் வாழ்வுக்கு வழிகாட்டி - எமக்காகவே
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுகளுடன்
என்றும் வாழ்கின்றோம்.

பிறப்பு
20-06-1948

இறப்பு
10-12-2014

கடந்த 10/12/2014 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி **அமரர் சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி** அவர்களின் முதலாம் ஆண்டு திவசம் 29/11/2015 இன்று ஞாயிற்றுக்கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
**சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி**

(இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(2607)

கணவர், பிள்ளைகள்
மருமகன், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## திருமதி
## நடராசா கனகம்மா



இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், பாடசாலை வீதி, தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா கனகம்மா நேற்று முன்தினம் (27.11.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முதலித்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை மற்றும் தம்பிஐயா, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பூமணி, ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, செல்லம், இராசமணி, முத்துப்பிள்ளை தங்கரத்தினம், ஆச்சிப்பிள்ளை பரமு ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பரமேஸ்வரனின் (பிரதி அதிபர் - யாழ்.இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும், சுகிதாவின் (ஆசிரியை - கொக்குவில் நாமகள் வித்தியாலயம்) பாசமிகு மாமியாரும், சாயீஷன், ஸ்ரீகரி, பூர்வஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற குஞ்சிதபாதம் மற்றும் மனோன்மணி தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் கிரியைகள் இன்று (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்களுக்காக முற்பகல் 11 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே இல.: 0774168554

பாடசாலை வீதி,
தாவடி, கொக்குவில்.

(2610)

## பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும் இன்று

யாழ்.அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை வெளிஅரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

## வடமராட்சி கிழக்கில் வட்டாரக் குறைப்பு!

யாழ். குடாநாட்டில் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கடந்த கால யுத்தம் காரணமாக மிகவும் பாதிப்படைந்துள்ள வடமராட்சி கிழக்குப் பகுதியில் நான்கு வட்டாரங்கள் என தேசிய எல்லை நிர்ணயக் குழு அறிவித்துள்ளமை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கும்போது, வடமராட்சி கிழக்குப் பகுதியானது சுனாமி உட்பட இயற்கை அனர்த்தங்களாலும், கடந்த கால யுத்தத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். இப் பகுதி பாரிய அபிவிருத்திப் பணிகளுக்கு உட்பட வேண்டியுள்ளது. எனவே, இதனை முதன்மைப்படுத்திய நடவடிக்கைகளே அவசியமாகும். இந்த நிலையில் ஐந்து வட்டாரங்களாக கொண்டிருக்க வேண்டிய இப் பகுதிக்கு நான்கு வட்டாரங்கள் என நிர்ணயித்திருப்பது ஏற்றுக்கொள்ள இயலாதுள்ளது.

குடத்தனை, நாகர்கோவில், செம்பியன்பற்று, உடுத்துறை, முள்ளியான் என ஐந்து வட்டாரங்களை இப் பகுதிக்கென வகுப்பதன் ஊடாக இப்பகுதியின் அபிவிருத்திப் பணிகளை இலகுவாக முன்னெடுக்க முடியும்.

அதே நேரம், வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு தனியானதொரு பிரதேச செயலகம் இருப்பதைப் போன்று, பிரதேச சபை ஒன்றையும் ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் அவசியமாகும் என்றும் டக்ளஸ் தேவானநதா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com


### நிர்வாகிகள் தெரிவு

வடக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் 27 ஆம் திகதி கைதடியிலுள்ள திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு,

தலைவர் த. கிருபாகரன், செயலாளர் வே. தபேந்திரன், பொருளாளர் வி. சண்முகநாதன், உப தலைவர் திருமதி.ஜே. மரியப்பிள்ளை, உப செயலாளர் நா.ராஜமனோகரன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் நடவடிக்கைகளை மாவட்டங்கள் ரீதியாக ஒருங்கிணைப்பதற்காக மாவட்ட இணைப்பாளர்களாக யாழ்ப்பாணம் வே.சிவராஜா, கிளிநொச்சி சு. ஜெயானந்தராஜா, முல்லைத்தீவு கே.குண சிங்கம், வவுனியா திருமதி. வி.பிரேமநிதி, மன்னார் எஸ்.ரி. சந்திரபோஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-254)

### சான்றிதழ் வழங்கல்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சான் றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது என இலங்கைத் திற ந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

### வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாள்ர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 05.12.2015 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு :- நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்.

**பிரதம ஆசிரியர் , வலம்புரி.**


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:24 செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5264 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 24செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5286 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 51<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5265 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 49<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/5287 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 54 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர் லண்டன்<br>தொ.இ: B/5267 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 29<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்:BSC<br>தொ.இ: G/5288 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 54செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/5269 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 15.75 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5289 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மேடம்:** சகோதர ஒற்றுமை மேலோங்கும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்.

**இடபம்:** உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், வாய்ப்புக்கள் தேடிவரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை<br>இரவு 11.09 இற்கு<br>கட-சந் | | |
| | | | குரு |
| | சூரி, புத<br>சனி | | ராகு<br>செவ்<br>சுக் |

29.11.2015
(கார்த்திகை 13, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.00 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 5.26 மணிவரை
இராகுகாலம் 4.43-6.13 மணிவரை
சுபநேரம் 9.13-10.43 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
சுபமுகூர்த்த தினம்

வளவன்

**கடகம்:** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மகரம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள் முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் புகழ்கூடும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** உறவினர்கள் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காண வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** உங்களின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** செல்வாக்கு மேலோங்கும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

## காணாமற்போனோரை மீட்டுத்தரக்கோரி

# விண்ணீர் பொழியக் கண்ணீருடன் வீதியில் விழுந்து கதறிய உறவுகள்

### நல்லாட்சி எனும் நரியாட்சியை இனியும் நம்பமுடியாது!

**(யாழ்ப்பாணம்)**

**காணாமற்போகச் செய்யப்பட்டோரினை உடனடியாக கண்டறியக் கோரியும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கக்கோரியும் யாழ். நகரில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.**

நேற்று காலை 9 மணியளவில் மழையின் மத்தியிலும் நடைபெற்ற இப்போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். நல்லாட்சி அரசாங்கம் என தம்மை கூறிக் கொள்பவர்கள் எம்மை ஏமாற்றி விட்டனர் என கதறியழுதனர்.

சமவுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற இப்போராட்டத்தில் தமிழ், சிங்கள மக்கள் மற்றும் பிக்குகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய், காணாமற்போகச் செய்யப்பட்டோரை கண்டறி, நல்லாட்சி என வேடம் போட்டவர்களே எங்கள் உறவுகளைத் தா, இராணுவ பிரசன்னத்தை உடனடியாக அகற்று, நல்லாட்சி எனும் நரியாட்சியை இனியும் நம்ப முடி யாது எனப் பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகை களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டத்தின் போது தாயொருவர் எனது மகனை விடுதலை செய்யுமாறு நிலத்தில் வீழ்ந்து அழுதார். இதனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அனைவரும் கண்கலங்கினர்.

நல்லாட்சி அரசு எங்களை நம்ப வைத்து ஏமாற்றி விட்டதே என விரக்தியுடன் தாய்மார்கள் கதறிய ழுதனர். சுமார் ஒரு மணிநேரம் மழையின் மத்தியில் நடைபெற்ற போராட்டம் முற்பகல் 10.30 மணி யளவில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (இ-4)












(படங்கள்:-உ.சாளின்)

## முன்பள்ளி சிறார்களின் கலை விழா நாளை

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் பாலர் கல்விக்கழக நிர்வாகத்துடன் இயங்கும் ஞானக்குழந்தை இல்ல அறிவொளி முன்பள்ளிக் சிறார்களின் கலை விழா நாளை திங்கட்கிழமை ஆறுகால் மடம் அறிவொளி கலையரங்கத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கலை விழாவில் பிரதம விருந்தினராக ஸ்ரீ வைத்திலங்கம் வித்தியாலய அதிபர் திருமதி புஸ்பவதி சண்முகராசா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை முன்பள்ளியின் பொறுப்பாசிரியர் திருமதி லிங்கேஸ்வரன் உஷாதேவி நிகழ்த்தவுள்ளார். (இ-5)

## ஒளிவிழாவும் பரிசளிப்பும்

யாழ். மாரீசன் கூடல் றோ.க.த்.க பாடசாலை ஒளி விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் ம.மகேந்திரன் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி செபமாலைநாயகி தேவராஜ் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக மாதகல் பங்குத் தந்தை அருட் தந்தை கை.பீ. கனிசியஸ்றாஜ், மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலய ஆசிரியர் திருமதி. கொ.மா. டான்சன்பயஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை பழைய மாணவர் அ.செபஸ்ரியாம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

இதன் போது ஆசியுரையினை மாரீசன் கூடல் பங்குந் தந்தை அருட் பணி யே.அ. அருள்தாசன் அடிகளார் நிகழ்த்தவுள்ளார். (இ-5)




### அரச ஊழியர்களுக்கான கடுகதி பேருந்து சேவை

இலங்கை போக்குவரத்துச் சபை வடபிராந்திய யாழ்.சாலை அரச ஊழியர்களினதும் பொதுமக்களது நன்மைகருதி மிருசுவில் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி காலை 7.15 மணிக்கு கடுகதி பேருந்து சேவை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதேபோல மாலை 4.30 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மிருசுவில் நோக்கிப் புறப்படும். இப்பேருந்து சேவை சாதாரண கட்டணத்திலேயே சேவை யாற்றப்படவுள்ளது.

இப்பேருந்து மிருசுவில், கொடிகாமம், புத்தூர் சந்தி, மீசாலை சந்தி, சங்கத்தானை, சாவகச்சேரி, 190 ஆம் கட்டை, நுணாவில், கைதடி நுணாவில், கைதடி, நாவற்குழி, அரியாலை, கச்சேரி, மடத்தமடி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மட்டுமே நிறுத்தப்படும் என யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ

## யாழ்.பிரதம தபால் நிலையத்தில் முக்கிய ஆவணங்கள் தேக்கம்

யாழ். பிரதம தபால் நிலையத்தில் பெருமளவிலான அடையாள அட்டைகள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தேங்கியுள்ளதாக விநியோகப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் பிரதம தபால் நிலையத்திற்கு வருகை தந்து அவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

வதிவிட முகவரி நேர்த்தியானதாக இல்லாத காரணத்தினாலும் பெயர் சரியாக இல்லாத காரணத்தினாலும் முகவரி மாற்றத்தினாலும் உரியவர்களுக்கு அடையாள அட்டைகளையும் சாரதி அனுமதிப்பத்திரங்களையும் விநியோகம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் இவற்றுக்கு விண்ணப்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்கப் பெறாதவர்கள் வார நாட்களில் அவற்றை வந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் இப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தும் கிடைக்கப் பெறாதவர்கள் தபால் நிலையத்திற்கு வந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-4)

## வீடமைப்புக்கு உதவி வழங்கல்

அகில இலங்கை ரீதியில் வீடமைப்பு திணைக்கள அதிகார சபையினூடாக வழங்கப்பட்டு வருகின்ற வீட்டுத்திட்ட உதவிகளில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகளுக்கு இவ்வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி வீடமைப்பு திணைக்கள உத்தியோகத்தர் சோ.கனகநாதன் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் ஒரு பயனாளிக்கு 10 ஆயிரம் ரூபா அல்லது 10 சீமெந்து பைக்கற்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நாளை திங்கட்கிழமை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகளுக்கு இவ்வுதவி வழங்கப்படவுள்ளது. (இ-5-60)

# ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீளவும் இயக்குவதால் தொழில்வாய்ப்பைப்பெற முடியும்

## பொதுமக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதன் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்களை பெற முடியும் எனவும் இதனை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை கடந்த கால யுத்தம் காரணமாக சேதமடைந்து, செயலிழந்து காணப்படுவதனால் இதனை நம்பி வாழ்ந்த தொழிலாளர் குடும்பங்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

மக்கள் மீள்குடியேறி ஆறு வருடங்களாகியுள்ள நிலையிலும் இதனை இயங்க வைப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் இதனை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1968 மே மாதம் 20 ஆம் திகதி ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது. அக்காலத்தில் 74 நிரந்தர ஊழியர்களும் நூற்றுக்கும் மேற்பட்ட தற்காலிக பணியாளர்களும் கடமையாற்றி வந்தனர். 200 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கிய ஓட்டுத்தொழிற்சாலை, 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக செயலிழந்த நிலையில் இன்றுவரை இயங்கவில்லை.

பலகோடி வருமானத்தை ஈட்டக் கூடிய இந்த ஓட்டுத்தொழிற்சாலையினை இயங்க வைப்பதன் மூலம் பலரது வாழ்வில் ஒளியேற்ற முடியும் எனவும் இதனை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இப்பகுதியில் உள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# கனகாம்பிகைக்குளத்தின் வான்பாயும் பகுதி உடைப்பெடுத்து சீர் செய்யப்பட்டது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தின் வான் பாயும் பகுதியில் நேற்று காலை உடைவு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இராணுவத்தினர், நீர்ப்பாசனத் திணைக்கள பணியாளர்கள், பொது மக்கள் ஆகியோர் இணைந்து உரப்பைகளில் மண் நிரப்பி சீர் செய்தனர்.

இவ்வுடைவினால் குளத்திற்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லையென இரணைமடு நீர்ப்பாசன குள பொறியியலாளர் ரி.செந்துரான் அறிவித்துள்ளார். (2-277)

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள் உதவி



(பனிக்கன்குளம்)

கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த முல்லைத்தீவு மக்களுக்கான உதவிகளை பெற்றுத் தரும் பொருட்டு மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களால் வெள்ள நிவாரண பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சேகரிக்கப்பட்ட பொருட்கள் முல்லைத்தீவுக்கு எடுத்துவரப்பட்டு அனைத்து பொருட்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் முத்தையன் கட்டுகுளம், திருமுறிகண்டி, இந்துபுரம் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு போதுமான உலர் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் உடைகள் என்பன கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# அறநெறி ஆசிரியர்களுக்கு பரிசளிப்பு நிகழ்வு

வவுனியா மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலைப் பேரவையால் செப்டெம்பர் மாதம் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சைவநெறிப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது.

இப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஆசிரியர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் ஆகியன வழங்கும் நிகழ்வு அடுத்த மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஸ்ரீ சிந்தாமணி பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் காலை 9மணிக்கு ஸ்ரீ சிந்தாமணி பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை நடத்தும் அறநெறி விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

எனவே அறநெறி ஆசிரியர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுமாறு இந்து அறநெறிப் பேரவைச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் 077 069 1582 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (2)

# குறைநிவர்த்தி நடமாடும்சேவை

வடக்கு மாகாண சபையும் கரைதுரைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் பிரிவும் இணைந்து நடத்தும் குறைநிவர்த்தி நடமாடும் சேவை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் இருந்து மாலை 5 மணிவரை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இதில் முல்லைத்தீவு மாவட்ட விவசாய திணைக்களம் சார்பாக விவசாயம்சார் தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கும் முகமாக பயிர்ச்சிகிச்சை முகாம், பிரதேசத்திற்குப் பொருத்தமான விவசாய இயந்திரங்களைக் காட்சிப்படுத்தலும் செயல்முறை விளக்கமளித்தலும் பெறுமதி சேர் பொருட்களைத் தயாரித்தலும் அவை பற்றிய செயல்முறை விளக்கமளித்தலும் பல்வேறு தொழில்நுட்ப விடயங்களைக் காட்சிப்படுத்தலும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் விவசாய பிரசுரங்கள், விதைகள் மற்றும் நடுகைப்பொருட்களின் விற்பனையும் நடைபெறும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார்.

எனவே இந் நடமாடும் சேவையில் அனைத்து விவசாயிகளையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# பல்லவராயன்கட்டு பொதுநூலகத்தினால் நடத்தப்படும் பரிசளிப்பு விழா நாளை

(முல்லைத்தீவு)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொதுநூலகத்தினால் நடத்தப்படும் பரிசளிப்பு விழா நாளை காலை 8.30 மணிக்கு பல்லவராயன்கட்டு பொதுநூலக மண்டபத்தில் பூநகரி பிரதேச சபை செயலாளர் திருமதி மேரி மக்டலின் சிவகுமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.செல்வநாதன், பூநகரி கோட்டக் கல்வி பணிப்பாளர் சு.தர்மரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சோலை பல்லவராயன்கட்டு சிவஸ்ரீ மகேந்திரக் குருக்கள், முழங்காவில் வணபிதா ஆனந்தகுமார் அடிகளார், ஜெயபுரம் றூட் நிறுவன அருட்சகோதரி கிளாரி ஜெயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்களுக்கு இடையில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கட்டுரை, பேச்சு, மொழித்திறன், கணிதம் விஞ்ஞானம் சஞ்சிகை, நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

அத்துடன் வாசகர்களுக்கான விநாடிவினாப்போட்டியும் பல்லவராயன்கட்டு உப அலுவலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையிலான போட்டியும் நடைபெற்றது.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடத்தப்படவுள்ளதாக பல்லவராயன் கட்டு பொதுநூலகப் பதில் நூலகர் அறிவித்துள்ளார். (2)

# உயிரை மாய்த்த மாணவன் செந்தூரனுக்கு கிளி.மாவட்ட பிரஜைகள் குழு அனுதாபம்

(கிளிநொச்சி-1)

நீதி நியாயமற்ற முறையில் அரசியல் கைதிகளாக்கப்பட்டு சிறையில் வாடும் எம் இனிய உறவுகள் குடும்பத்துடனும் சமூகத்துடனும் வாழவேண்டும் என்பதற்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த பாடசாலை மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனுக்கு கிளிநொச்சி மாவட்ட மக்களின் சார்பில் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவினர் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்துகின்றனர்.

செந்தூரனின் உயிரிழப்பு தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பல முறைகள் இருந்த போதும் இவரது அர்ப்பணிப்பானது அவரது குடும்பம், அயலவர்கள்,நண்பர்கள், பாடசாலைச்சமூகத்திற்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற உணர்வினையும் ஏற்படுத்தியுள்ளது.

இந் நிகழ்வானது துரதிர்ஷ்டமானதும் துன்பியல் நிறைந்ததுமாகும். காலம் காலமாக ஏமாற்றப்படுவதற்கான இறுதி முடிவாக இச் சம்பவம் அமைய வேண்டும் என பிரஜைகள் குழு வலியுறுத்துகின்றது. இத் துயர சம்பவத்தினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது மனதை உருக்கும் அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் செந்தூரனின் இறுதி விருப்பம் நிறைவேறி அவரது ஆத்மா சாந்தியடையவும் குடும்பத்தினர் இத்துயரினை தாங்கிக் கொள்வதற்கான சக்தியைப் பெறவும் இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-277)

# நியமனக் கடிதங்கள் வழங்கல்

கல்வி அமைச்சின் சமூக நல்லிணக்கம் மற்றும் சமாதானக் கல்விப்பிரிவின் 2008/15 சுற்றறிக்கைக்கு அமைவாக மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் 60 மாணவர்களை பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.

இதில் 80 மாணவர்கள் போட்டியிட்டு 60 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதைத்தொடர்ந்து அம்மாணவர்களில் பிரதமர், சபாநாயகர் உட்பட 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்ட அதே வேளை சத்தியப்பிரமாணம் எடுக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தில்லையம்பலம் வரதன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து நியமனக் கடிதங்களை அமைச்சர்கள் பெற்றுக்கொண்டனர். ஆலோசனைக் குழுக்களாக ஆசிரியர்களிடமிருந்து 10 அமைச்சின் செயலாளர்கள், 10 பிரதி அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் முதலாம் திகதி முதலாவது பாராளுமன்ற அமர்வு நடைபெறவுள்ளது. இதில் 2016 இற்காக செயற்படுத்தவுள்ள திட்டங்கள் முன்வைப்பும் விவாதங்களும் நடைபெறும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (2)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து மு/உடையார்கட்டு குரவில் தமிழ் வித்தியாலயத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. (படம்-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# ஒரே நாளில் 55 கைதிகளின் தலையை வெட்டி தண்டனை

தீவிரவாத குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறி ஒரே நாளில் 55 கைதிகளின் தலையை வெட்டி சவுதி அரேபிய அரசு மரண தண்டனை நிறைவேற்றவுள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

சவுதி அரேபியாவில் வெளியாகும் Okaz என்ற பத்திரிகை சவுதி அரேபிய அரசு இந்த தண்டனையை அடுத்த சில நாட்களில் நிறைவேற்றவுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது.

தேச துரோக செயல்களில் ஈடுபட்டது, தீவிரவாதத்திற்கு உதவியது, சவுதி அரேபிய பாதுகாப்பு அதிகாரிகளை கொலை செய்தது உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக 55 கைதிகளுக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 55 கைதிகள், 100 அப்பாவி மக்களையும் 71 பாதுகாப்பு அதிகாரிகளையும் கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனினும், இந்த தண்டனை எந்த குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றப்படும் என்ற தகவல்கள் வெளியாகாத நிலையில், வெள்ளிக்கிழமை தொழுகைக்கு அடுத்ததாக மரண தண்டனை நிறைவேற்றப்படும் என கூறப்படுகிறது.

அண்மையில் வெளியான இந்த அதிரச்சி செய்தியைத் தொடர்ந்து, சர்வதேச மன்னிப்பு சபையான அம்னிஸ்ட்டி கடும் கண்டனங்களை தெரிவித்துள்ளது.

தீவிரவாதத்திற்கு எதிராக போராடுகிறேன் என்ற பெயரில் அரசியல் லாபத்திற்காக இந்த மனித உரிமை மீறல்களை நிறைவேற்ற உள்ளதாக சவுதி அரேபிய அரசிற்கு கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தாண்டு தொடக்கம் முதல் 150 கைதிகளை சவுதி அரேபிய அரசு பொது இடங்களில் மரணதண்டனையை நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# மின்சார விநியோகம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்தம் மின்விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கையின் மின்சாரசபை அறிவித்துள்ளது.

அந்த வகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ பிரதேசத்தில் உடுப்பிட்டி V.C. இலந்தைக்காடு, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை, ஆலடி, நெடியகாடு, வெள்ளறோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பராக்கல்லூரி, அண்ணா சிலையடி, மண்டான், சுன்னாகம் ஒரு பகுதி, ரொட்டியாலடி, மருதனார்மடம், அல்லைப்பிடடி, மண்கும்பான், மண்டைதீவு, யாழ். நகரம், ரில்கோ விடுதி, பல்கலைக்கழக தங்கு விடுதி, யாழ். தேசிய சேமிப்பு வங்கி, கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ். வைத்திசாலை (மூன்று மாடிக் கடடத் தெர்குதி), யாழ் போதனா வைத்தியசாலை, சுகாதார திணைக்களம், யாழ். இலங்கை வங்கி, மண்கும்பான் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு வெலுசுமண இலங்கை கடற்படை முகாம, மருதனார்மடம் - யாழ். நுண்கலைப்பீடம் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் சுண்டிக்குளம், தர்மபுரம், கல்மடு, புளியம்பொக்கணை கோவில பிரதேசம், விசுவமடு, விசுவமடு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில வட்டுப்பித்தன் மடுவிலிருந்து புதுக்காமம் வரையான பிரதேசங்களிலும மினசார விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

விவசாயத் திணைக்களத்தின் 2016/ 2017 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பத்தில் ஒருவருட தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு (NVQ Level - 5) சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிங்களம/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தியை அல்லது விசேட சித்தியைப் பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி அல்லது விவசாயம் அல்லது வரலாறு, வாழ்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது ஒன்றில் திறமைச் சித்தி உட்பட மொத்தமாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் தாவரவயல், இரசாயனவியல், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறைவாகவோ அல்லது 25 வயதிற்கு மேற்படாமலோ இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர், விரிவாக்க மற்றும் பயிற்சிப் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும

மேலதிக தகவல்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)



# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

29 11.2015

- 1781 - கூலிகளை ஏற்றிச்சென்ற சொங் (Zong) என்ற கப்பல் மாலுமிகள் காப்புறுதிக்காக 133 ஆபிரிக்கர்களை கொன்று கடலுக்குள் எறிந்தனர்.
- 1830 - போலந்தில் ரஷ்யாவின் ஆட்சிக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1855 - துருக்கியில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது.
- 1877 - தோமஸ் அல்வா எடிசன் போனோகிராஃப் என்ற ஒலிப்பதிவுக் கருவியைக் முதற்தடவையாகக் காட்சிப்படுத்தினார்.
- 1915 - கலிபோர்னியாவில் சாண்டா கட்டலீனா தீவின் பல முக்கிய கட்டடங்கள் தீயில் எரிந்தன.
- 1922 - ஹவார்ட் கார்ட்டர் பண்டைய எகிப்தின் துட்டன்காமுன் மன்னனின் கல்லறையை பொதுமக்களின் பார்வைக்கு திறந்துவிட்டார்.
- 1929 - ஐக்கிய அமெரிக்காவின் ரிச்சார்ட் பயேர்ட் தென்முனை மேல் பறந்த முதல் மனிதரானார்.
- 1945 - யூகொஸ்லாவிய சமஷ்டி மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1947 - பாலஸ்தீனத்தைப் பிரிப்பதென ஐநா பொதுச் சபை முடிவெடுத்தது.
- 1950 - வட கொரியா மற்றும் சீனப் படைகள் ஐநா படைகளை வட கொரியாவிலிருந்து வெளியேறும்படி செய்தனர்.
- 1961 - நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 5 விண்கலம் சிம்பன்சி ஒன்றை ஏற்றிக்கொண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது பூமியை இரு தடவைகள் சுற்றிவந்து புவேர்ட்டோ ரிக்கோவில் இறங்கியது).
- 1963 - 118 பேருடன் சென்ற கனடாவின் விமானம் மொன்ட்ரியாலில் விபத்துக்குள்ளாகியது.
- 1982 - ஐ.நா பொது அவை சோவியத் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து உடனடியாக விலகும்படி சோவியத் ஒன்றியத்தைக் கேட்டது.
- 1987 - கொரிய விமானம் தாய்-பர்மிய எல்லைக் கருகில் வெடித்துச் சிதறியதில் 155 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - அணுவாயுதங்களை எடுத்துச் சென்று 700 கி.மீ தூரம் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய ஷாகீன் 1 என்ற ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது.

**பிறப்புகள்**

- 1889 - எட்வின் ஹபிள், வானிலையாளர் (இ. 1953)
- 1908 - என். எஸ். கிருஷ்ணன், தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர் (இ. 1957)
- 1913 - எஸ். வி. சகஸ்ரநாமம், நாடகக் கலைஞர், திரைப்பட நடிகர் (இ. 1988)
- 1936 - ஆ. வேலுப்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர் (இ. 2015)

**இறப்புகள்**

- 1989 - மருதகாசி, திரைப்படப் பாடலாசிரியர் (பி. 1920)
- 1993 - ஜே. ஆர். டி. டாடா, இந்தியாவின் முதன்மையான தொழிலதிபர்களுள் ஒருவர், இந்திய வானூர்திப் போக்குவரத்தின் முன்னோடி (பி. 1904)
- 2008 - ஜோர்ன் அட்சன், டென்மார்க் கட்டடக் கலைஞர் (பி. 1918)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 170 | 200 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 750 | 800 | 800 | 700 |
| தக்காளி | 150 | 150 | 120 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 20 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 160 | 130 | 160 | 200 | 180 |
| கரட் | 150 | 160 | 140 | 200-380 | 280 | 200 |
| பூசணி | 60 | 40 | 35 | 60 | 60 | 40 |
| புடோல் | 140 | 120 | 100 | 140 | 120 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-140 | 120 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 100 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 350 | 450 | 250 | 600 | 400 | 320 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 100 | 120 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 100 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 300 | 220 | 200-300 | 240 | 400 |
| லீக்ஸ் | 100 | 160 | 140 | 120-160 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | — | — | 200 | 80 |
| கறிமிளகாய் | 400 | 300 | — | 800 | 320 | 500 |
| முருங்கைக்காய் | 350 | — | — | 500 | 320 | 500 |
| போஞ்சி | 450 | 280 | — | 300 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 120 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 30 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 300 | 200-300 | 150 | 200-300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-55 | 30-40 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | 250 |
| முள்ளங்கி | 150 | — | — | 120 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | — | 15 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 10 | — | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 50 | 80-120 | 50 |

# நன்கொடைப்பணம் வழங்கலும் சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களினது 2015 ஆம் ஆண்டுக்கான மூலதன நன் கொடைப் பணம் வழங்கலும் 2016ஆம் ஆண்டிற்கான சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.

சகல சனசமூக நிலையங்களும் 2016 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை தெரிவை மேற்கொள்வதற்கு முன்னோடியாக உடன் நிர்வாக சபையினை கூட்டி கணக் கறிக்கை, பொருட்பதிவெடு போன்ற விடயங் களை ஒழுங்குபடுத்திய பின் எதிர் வரும் 31.01. 2016 இற்கு முன் பொதுக்கூட்டத்தினை கூட்டி உரிய உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவையாளர் முன்னிலையில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்து புதிய நிர்வாக சபை தெரிவு விபரத்துடன் (தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரது பெயர்,வீட்டு முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள்), வங்கி கணக்கு இலக்கம் போன்ற விபரங்களையும் யாழ். மாநகர சபைக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.2015 ஆம் ஆண்டிற்கான நன்கொடைப் பணம் வழங்கும் நிகழ்வு நாளை 30ஆம் திகதி திங்கட்கிழமை முதல்வர் மாநாட்டு மண் டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெற வுள்ளது.

அன்றையதினம் தங்கள் நிலையத்துக் குரிய நன்கொடைப்பணம் 10ஆயிரம் ரூபா விற்கான காசோலையை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வருகை தரும் சனசமூக நிலையத்தினர் தமது நிலையத்துக்குரிய நிலைய இறப்பர் முத்திரையையும் எடுத்து வரல்வேண்டும் என்பது அவசியமானதாகும்.

இதன்போது சுற்றும்முற்றும் மாற்றம் - நாங்களும் பொதுமக்களும் என்ற தலைப்பிலான கலந்துரையாடலும் இடம்பெறும். (இ-5)

# மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டமும் இலவச ஆயுர் வேத வைத்திய சேவைகளும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது? என்று
எண்ணுகின்றீர்களா...
(2276)

எம்முடன் பேசுங்கள்

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored By Enlightnment Circle, UK

## கடை விற்பனைக்கு

யாழ் நகரில் ஸ்ரான்லி றோட்டில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கடை விற்பனைக்கு உண்டு.
(C-2808)

தொடர்புகளுக்கு :-
0779107242


## எம் நெஞ்சத்து நினைவுகளில் நீங்கா ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
11
01
1948

இறைவன் அடியில்
10
12
2014

## பத்மலோஜினி கனகலிங்கம்




எங்கள் அன்புத் தெய்வமே!
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
எமதுள்ளம் நீ நிறையும் கோயிலம்மா!
எம் மனதைவிட்டகலுமா என் ராணியின் பிரிவின் துயரம்
பண்பின் பிறப்பிடமாய், அன்பின் உறைவிடமாய்
விளங்கிய எங்கள் குலவிளக்கே!
அன்போடும் பண்போடும் எம்மை நேசித்த
எங்கள் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்ட எங்கள் தெய்வமே!
எங்கள் இதயங்களில் என்றும் நீர் வாழும் தெய்வமம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும்
பிரார்த்திக்கின்றோம்.

தர்மலிங்கம் கனகலிங்கம்
67/45, தர்மலிங்கம் அவெனியூ,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
021 222 7796,077 935 2583

நித்தம் உமது நினைவுடன் வாழும்
அன்புக்கணவன் , மக்கள் ,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(2599)

# மரண அறிவித்தல்



## தாமோதரம்பிள்ளை லோகநாதன்

யாழ்.கச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை லோகநாதன் அவர்கள் 27.11.2015 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-சின்னம்மா (பெரிய பிள்ளை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- அன்னபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், லோகேஸ்வரி (வவா) அவர்களின் அன்பு கணவரும், சுகன்யா (சுபத்திரா), சியாமா (லண்டன்), காலம் சென்ற கோகுலன் (கவாஸ்கர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுந்தரம் (வரதன்- ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி) அவர்களின் ஆருயிர் அண்ணனும், புஸ்பமலர் அவர்களின் அன்பு மைத்துனரும்,

அலெக்ஸ் நிக்சன் (ஆசீர் வணிக நிலையம்-யாழ்ப்பாணம்),செல்வரூபன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும்,ஜோசப் செல்வநாயகம் ( ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்) காலஞ்சென்ற புஸ்பராணி தம்பதிகள், காலஞ்சென்ற கந்தசாமி- மகேஸ்வரி தம்பதிகள் ஆகியோரின் அன்புச் சம்பந்தியும்,கந்தசாமி (இலிகிதர்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு பெறாமகனும், சுசீந்திரன் (கண்ணன் - மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர், யாழ்ப்பாணம்), சுமந்திரன் (கௌதமன் -லண்டன்), சீதா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், கதிர்காமநாதன் (சுவிஸ்), தவராணி (இந்தியா), ரங்கேஸ்வரி (சுவிஸ்), பாலமோகன் (சுவிஸ்), காலஞ்சென்ற வசந்தி ஆகி யோரின் அன்பு அத்தானும், சந்திரவதி (சுவிஸ்), செல்வராசா (இந்தியா), தெய்வேந்திரம் (சுவிஸ்), சுபோதினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும்,ஹரிஸ் (யாழ். இந்துக் கல்லூரி), அக்ஷயா, ரோஷன், ரேஸ்மி (யாழ். ஜோன் பொஸ்கோ), அபிலாஷ், அபிஷா, அபிஷன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காயத்திரி (சாவகச்சேரி), கல்பனா (லண்டன்) , துஸ்யந்தி (கனடா), சாருலதா(கொழும்பு), ஹரிச்சந்தர் (கனடா), உதயசந்தர் (சாவகச்சேரி) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 29.11.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

58/11, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. -021 222 4546
077 772 1740

(2603)

தகவல்
அலெக்ஸ் நிக்சன்
(மருமகன் - ஆசீர் வணிக நிலையம்)
202 , கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

# சாட்சியாளர்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படக்கூடாது

## ஜனாதிபதி ஆணைக்குழு எச்சரிக்கை

**ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் எதிரில் சாட்சியமளிக்கும் சாட்சியாளர்களுக்கு அழுத்தங்களையோ அச்சுறுத்தல்களையோ சம்பவங்களுடன் தொடர்புடைய ஏதேனும் ஓர் தரப்பினர் அல்லது நிறுவனங்கள் மேற்கொண்டால் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்க நேரிடும் என ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற நீதவான் பிரதி பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார்.**

தொலைபேசி மூலம் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்த தகவல்கள் திரட்டப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் விடுக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டால் பத்தாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என ஆணைக்குழுவின் மற்றுமொரு நீதவான் கிஹான் குலதுங்க தெரிவித்துள்ளார்.

தெங்கு ஆய்வு நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நடத்தப்பட்டுவரும் விசாரணைகளின்போது சாட்சியளிப்போருக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக அரச தரப்பு சட்டத்தரணி சுதர்சன டி சில்வா ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

இந்த கருத்து தொடர்பிலேயே நீதவான்கள் மேற்கண்ட எச்சரிக்கைகளை விடுத்துள்ளனர்.

தெங்கு ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் முன்னாள் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, அவரது மனைவி நாலிகா தனுஜா உள்ளிட்ட சிலரிடம் நேற்றுமுன்தினம் விசாரணை நடத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இஸ்ரேல் தூதரகம் அமைக்க இலங்கையில் எதிர்ப்பு

இலங்கையில் இஸ்ரேல் தூதரகம் நிறுவப்படுவதனை எதிர்ப்பதாக கூட்டு எதிர்க்கட்சி, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சயிட் சாகீல் ஹுசெய்னிடம் தெரிவித்துள்ளது.

அண்மையில் கூட்டு எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை சந்தித்துள்ளனர்.

இலங்கையில் இஸ்ரேல் தூதரகம் திறக்கப்படுவதனை நாம் எதிர்க்கின்றோம் என கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு குறித்து நாம் வருத்தமடைகின்றோம். எமது அரசாங்க ஆட்சிக் காலத்தில் பாலஸ்தீனம் சுயாதீனமான நாடாக இயங்குவதனை விரும்பி செயற்பட்டோம். பாலஸ்தீன மக்களின் கனவுகளை மெய்படச் செய்ய அப்போதைய ஜனாதிபதி



மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.

இதன் காரணமாக பாலஸ்தீன தலைநகரின் நகரமொன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பெயர் சூட்டப்பட்டது.

முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வரும் பெரும்பாலான அரபிய நாடுகள் எமக்கு உதவிகளை வழங்கியிருந்ததாக முன்னாள் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ-7)

## மாணவர்கள் மீதான தாக்குதல்; 5 பொலிஸார் குறித்து விசாரணை

உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பாடநெறியை தொடரும் மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் ஐவர் தொடர்பில் மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் நேற்று முன் தினம் பொலிஸ் ஆணைக்குழு ஆழமாக ஆராய்ந்ததாக அதன் செயலாளர் ஆரிய தாஸ குரே தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போதே பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட விசாரணை குழுவினர், சம்பவத்துடன் தொடர்புடைய 05 பொலிஸ் அதிகாரிகள் மீதான விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு பரிந்துரை செய்துள்ளனர்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தொடர்பாக எதிர்வரும் கலந்துரையாடல்களின் போது தீர்மானம் எடுப்பதாக செயலாளர் ஆரியதாஸ குரே தெரிவித்தார் (இ-7-10)

## திருகோணமலை நிலக்கீழ் முகாம் காலனித்துவ ஆட்சிக் காலத்துக்குரியது

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

திருகோணமலை நிலக்கீழ் முகாம் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது என கடற்படைத் தளபதி விளக்கம் அளித்துள்ளார்.

திருகோணமலை கடற்படை முகாமில் காணப்படும் நிலக்கீழ் முகாம் தொடர்பில் இலங்கை கடற்படையினர் தெளிவுபடுத்தியுள்ளனர்.

திருகோணமலை கடற்படை முகாமில் இரகசிய சிறைக்கூடமொன்று அமைக்கப்பட்டு இயங்கி வந்ததாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கை பிரிட்டன் காலணித்துவ ஆட்சியில் இருந்தபோது இந்த நிலக்கீழ் முகாம் நிர்மாணிக்கப்பட்டது.

பிரிட்டன் ஆட்சியாளர்களினால் நிர்மாணிக்கப்பட்ட நான்கு நிலக்கீழ் ஆயுதக் களஞ்சியங்கள் திருகோணமலை கடற்படை முகாமில் காணப்படுகின்றன.

கடற்படை முகாமின் பாதுகாப்பிற்காக இந்த ஆயுதக் களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் பீரங்கி வெடிகுண்டுகளை களஞ்சியப்படுத்தவும் அந்தப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் தங்கவும் ஆயுதக் களஞ்சியம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விமானப்படை முகாம் வான் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக் கடற்படையினர் இந்த நிலக்கீழ் முகாமினை பொருட்களை களஞ்சியப்படுத்த பயன்படுத்தியுள்ளனர்.

மேலும் இந்த முகாமை பார்வையிடுவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றில் விசாரணையொன்று நடத்தப்பட்டு வருகின்றது என கடற்படையின் தளபதி, கொழும்பு ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கடற்படையினர் இரகசிய சித்திரவதை கூடமொன்றை நடத்தி வந்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிராகரிக்கும் வகையில் இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

## 5 கோடி ரூபா நட்டஈடு கோரி கொண்டயா மனுத்தாக்கல்



ஐந்து கோடி ரூபா நட்டஈடு கோரி கொண்டயா எனப்படும் துனேஸ் பிரியசாந்த உச்சநீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் இந்த நட்டஈடு கோரப்பட்டுள்ளது.

மினுவான்கொட கொட்டாதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த சேயா சௌவ்தம்னி என்ற ஐந்து வயதுச் சிறுமி கொலையுடன் எவ்வித தொடர்பையும் பேணாத தம்மை சில நாட்கள் தடுத்து வைத்து மனிதாபிமானமற்ற ரீதியில் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நட்டஈடு வழங்க வேண்டுமென கோரியுள்ளார்.

பொலிஸ்மா அதிபர், புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் பீ.ஆர். என்.ஆர். நாகஹாமுல்ல, புலனாய்வுப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் லசந்த ரட்நாயக்க, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

32 வயதான குறித்த நபரை பொலிஸார் சித்திரவதைக்கு உட்படுத்தி கொலைக் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் இந்தக் குற்றச்செயலை செய்யவில்லை என பல தடவைகள் கூறியபோதிலும் அதனை பொலிஸார் ஏற்றுக்கொள்ளவில்லை என துனேஸ் பிரியசாந்த தமது மனுவில் சட்டத்தரணி ஊடாக தெரிவித்துள்ளார். (இ-7)

## நிதி மோசடி விசாரணைப்பிரிவுக்கு புதிய கட்டடம்

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு புதிய கட்டடம் ஒன்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 54 செதம் வீதி கொழும்பு-1, என்ற முகவரியில் உள்ள சென்றல் பொயின்ட் கட்டடத்தில் இந்த நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் புதிய கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு 204 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் அவற்றில் 100இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

மேலும் 27 முறைப்பாடுகள் சம்பந்தமான விசாரணைகள் முடிவடைந்துள்ளதுடன் விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் ருவான் குணசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் ஏற்படுத்தப்பட்ட நிதி மோசடி விசாரணைப் பிரிவு இதுவரை கொள்ளுப்பிட்டியில் கட்டடம் ஒன்றில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பட்ஜெட் முன்மொழிவுகள்

## சொந்த வாகனம் வைத்திருக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கு பணம்

(தொடர்ச்சி...)

### பொது நிர்வாகம்

இவ்வரசாங்கமானது, நாட்டின் அரசாங்க ஊழியர்கள் சுதந்திரம் மற்றும் கௌரவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு உறுதி அளிக்கின்றது. ஒரு சுதந்திரமான அரச சேவை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அரசியல் மயமாக்கப்பட்ட அரச துறை என்பது இறந்த காலவிடயமாகும்.

இலங்கை வரலாற்றில் அரச ஊழியர்களுக்கு அதிகூடிய சம்பள அதிகரிப்பான 10 ஆயிரம்ரூபாவை வழங்குவதாக•உறுதி அளித்திருந்தோம். அதேபோல நாங்கள் அவ்வுறுதிமொழியை நிறைவேற்றினோம். இது அரச ஊழியர்கள் தமதுசேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான நேரமாகும். எமது மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். நான் கவலையுடன் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், அரசதுறை சேவை வழங்கலானது, கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றது. இது சீர்செய்யப்படல் வேண்டும். உற்பத்தித் திறனானது தொடர்ந்தும் சிக்கலாகவே காணப்படுகின்றது. அது நாட்டின் முழு மொத்த பொருளாதார வளர்ச்சியையும் பாதித்துள்ளது. உத்வேகமாக செயலாற்றக் கூடிய அரச பணித்துறையே எப்போதும எதிர்கால செயற்பாடாக இருத்தல் வேண்டும்.

இந்தப் பின்னணியில், மேலதிக ஆளணியினரைக கொண்ட நிறுவனங்களில் இருந்து ஊழியர்களைப் பெற்று ஒரு அரச ஊழியர் குழுமம் ஒன்றை உருவாக்கி ஊழியர்கள் பற்றாக்குறையான நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படுவர.

அரசாங்கமானது வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தலுக்கு பெருமளவு பணத்தை செலவு செய்கின்றது. ஆகவே வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு பதிலாக செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்மொழிகின்றேன்.

இதன்போது குத்தகையில் பராமரிப்புச் செலவு, காப்புறுதி, கட்டணம் மற்றும் வாகனம் தொடர்பான ஏனைய கட்டணங்களையும் அவரே செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், தனது சொந்த வாகனத்தை பாவிக்க விரும்பும் அரச ஊழியர்களுக்கு அதிகூடிய கொடுப்பனவாக எரிபொருள் கொடுப்பனவிற்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 50 ஆயிரம் பெற்றுக் கொடுக்கப்படும். இந்த புதிய முறையானது வருடாந்தம் ரூபா 10 ஆயிரம் மில்லியனை சேமிக்க உதவும்.



அரச துறை சேவை வழங்கலானது எவ்வித பயனையும் தருவதாக இல்லை. அரச நிறுவனங்களுக்குவரும் கடிதங்கள் பதில் அளிக்கப்படாமல் பல மாதங்களாக கிடக்கினறன. ஆகவே, கிடைக்கப் பெற்றகடிதங்களுக்கு 5வேலை நாட்களுக்குள் தெரியப்படுத்தல் வேண்டும். இது பொது நிர்வாக மற்றும் பொது முகாமைத்துவ அமைச் சினால் கண்காணிக்கப்படும்.

வெளிநாடுகளில் காணப்படும் எமது தூதராலயங்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இத்தூதராலயங்கள் சேவை செய்யும் ஊழியர்களுக்கு விரிவான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன் மொழிகின்றேன். அதேபோல தூதுவர் சேவை அதிகாரிகள் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதற்கான செலவில் 75 சதவீதத்தை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்வதோடு, 25 சதவீதத்தை ஊழியர்கள் தாங்கிக் கொள்ள வேண்டும். முதலாவது குழந்தையின் இரண்டாம் நிலைக் கல்விக்கான முழுச்செலவினையும் இரண்டாவது குழந்தையில் இருந்து 80 சதவத்த்தை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கும் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 150 மில்லியன்களை ஒதுக்கீடு செய்கின்றேன்.

அரச துறை பதவியணியானது நவீன உலகில் முன்வைக்கப்படும் பல சவால்களை முகம் கொடுப்பதற்குத் தயார் இல்லை என்பதனை நான காண்கின்றேன்.

ஆகவே, அரச துறை பதவியணியானது ஒவ்வொரு 5 வருட காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்படல்வேண்டும் என்பது எமது அரசாங்கத்தின் கருத்தாகும்.

மோட்டார்சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்காக முற்பணம் செலுத்திய அனைத்து அரச ஊழியர்களுக்கும் அவை பெற்றுக் கொடுக்கப்படும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

ஜூலை வேலை பகிஷ்கரிப்பாளர்களுக்கு ஒரு முறைக் கொடுப்பனவாக ரூபா 2 இலட்சத்து 50 ஆயிரம் வழங்குவதற்கு முனமொழிகின்றேன்.

### நீதித்துறை

எமது நீதிமன்றங்கள் பல வருடங்களாக காணப்படும் வழக்குகளினால் நிரம்பி வழிகின்றன. இந்நிலைமையானது அனைத்து நீதிமன்றங்களிலும் காணப்படுவதோடு, தீர்ப்புகளும் காலதாமதமாகின்றன. காலதாமதமான நீதி, நிராகரிக்கப்பட்ட நீதியாகும். நாங்கள் வர்த்தக நீதிமன்றங்களின் செயற்பாடுகளை துரிதப்படுத்தினோம். வர்த்தக நீதிமன்றங்கள் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதில் சிறப்பான பங்களிபபை செய்துள்ளது. வழககுகளை துரிதப்படுத்தி ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்குள் தீர்ப்பினை வழங்குவதற்கு வர்த்தக நீதிமன்றங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த வகையில் செவிப்புல பதிவுகளைப் பயன்படுத்தி தன்னியக்க வழக்கு முகாமைத்தது முறைமையினையும் நீதிமன்ற நிர்வாகத்தினையும் மேம்படுத்துவதற்கும் அதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

தற்போது எமது நீதிமன்றங்கள் ஒரு நாளைக்கு இருமுறை கூடும் முறைமையை கொண்டதாக இல்லை. ஒரு நாளைக்கு இருமுறை வழக்குகளை விசாரிக்கும் முறைமையை அறிமுகம் செய்வதன் மூலம் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக தீர்க்கலாம்.

தற்போது காணப்படும் சட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் காணும்படி நான் நீதியமைச்சை வேண்டிக்கொள்கின்றேன். சட்ட மறுசீராக்கங்களுக்காக ரூபா 500 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன்வருகின்றேன்.

நீதித்துறை பயிற்சி நிறுவகத்தின் இயலளவை கட்டியெழுப்புவதற்கு ரூபா 500 மில்லியன்களை முன்மொழிகின்றேன். இதன்மூலம் நீதித்துறை ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் சட்டமா அதிபர் காரியாலயம், சட்ட வரைவுகள் மற்றும் அரச பகுப்பாய்வு திணைக்களம் என்பவற்றின் இயலளவு கட்டியெழுப்பப்படும்.

இலங்கை ஒரு மத்தியஸ்த மத்திய நிலையமாக அமைப்பதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்றன என நான் நம்புகின்றேன். நான் அதிகாரிகளிடத்தில் வேண்டிக் கொள்வது என்னவென்றால் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி பிணக்கு தீர்வுகள் மற்றும் மத்தியஸ்த செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

### ஓய்வூதிய நிதிகள்

ஓய்வுபெற்ற தொழிற்படை அங்கத்தவர்கள் அவர்களின் சுறுசுறுப்பான வேலைக காலத்தில் அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு செய்த பங்களிப்பை கருத்திற்கொண்டு அவர்களுடைய எஞ்சிய வாழ்க்கைக் காலத்தை மிகவும் சந்தோசமான சூழலில் கழிப்பதை அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும்

2014 ஆம் ஆண்டின் போது நாட்டில் 168,900 அங்கத்தவர்களைக் கொண்ட 156 அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதிகள் மற்றும் பங்களிப்பு செய்யும் ஓய்வூதிய முறைகள் காணப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியின்போது இவற்றின் மொத்த சொத்துக்கள் மற்றும் முதலீட்டின் பெறுமதியானதுமுறையே ரூபா 151 பில்லியன் மற்றும் 115 பில்லியன்களாகும்.

தொழில் ஆணையாளரினால் முகாமை செய்யப்படும் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள் மற்றும் பங்களிப்புச் செய்யும் ஓய்வூதியத் திட்டங்களின் ஒழுங்குபடுத்தல மற்றும் மேற்பார்வைகள் நலிவானதாகக் காணப்படுகின்றது. அதனால் இவ்வாறான நிதிகளின் அங்கத்தவர்களின் சேமிப்புக்களானது ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. ஆகவே, இத்தகைய நிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமுகமாக வெளிப்படையான நிர்வாக தரங்களுடன்கூடிய புதிய மேற்பார்வை மற்றும்ஒழுங்குபடுத்தல் முறைமைகள் தேவைப்படுகின்றன. அதனால் இவ் ஓய்வூதிய நிதியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இலங்கை ஒழுங்குபடுத்தல் நிறுவகமொன்றிற்கு சாட்ட விரும்புகின்றேன். ஓய்வூதிய நிதியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அவசியமான சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான முன்மொழிகின்றேன்.

அரசாங்கத்தின் தற்பொழுது காணப்படும் நிதியளிக்கப்படாத ஓய்வூதிய முறைமையின் கீழ் ஓய்வூதியத்திற்கான செலவினம் கடந்த வருடாங்களின் போது குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. அதிகரித்து வரும் முதியோர் சனத்தொகை மற்றும் அதனுடன் தொடர்பான அபிவிருத்திகள் இவ்விடயத்தினை மேலும் மோசமாக்கியுள்ளது. இதனால் தற்பொழுது காணப்படும் ஓய்வூதியத்தினை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியது முதன்மையானதாகும். எனவே தற்பொழுது காணப்படும் ஓய்வூதிய முறை தற்பொழுது சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்கு தொடர்ந்து நடை முறைப்படுத்தப்படுவதுடன் 2016 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து புதிதாக அரசாங்கத்துறைக்கு சேர்ததுக் கொள்ளப்படும் ஊழியர்களுக்கு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுவதுடன் அவர்களது இளைப்பாறலின போது ஓய்வூதியம் உறுதிப்படுத்தப்படும். இவ்வாறான பங்களிப்பு அரசாங்க ஓய்வூதிய நிதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பிரதமரது பொருளாதார கொள்கைக் கூற்றில் குறிப்பிட்டதன் பிரகாரம் ஊழிய சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகிய இரண்டும் ஒன்றிணைக்கப்படவுள்ளன. அத்தகைய உபாயமொன்று அரசாங்கத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இணக்கப்பாடு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரம் அமுல்படுத்தப்படும் என்பதனை இப்பாராளுமன்றத்திற்கு நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்கள் மாதமொன்றுக்கு 100 ரூபாவினை பங்களிப்பாக செலுத்துவதன் மூலம் அவர்களது சிறுவர்களுக்கு (18வயது வரை) விபத்து, தீராத நோய் மற்றும் சத்திரசிகிச்சை என்பவற்றை உள்ளடக்கிய சுகாதார காப்புறுதியாக ஆகக கூடியது ஒரு இலட்சத்து 50 ஆயிரம்ரூபாவினை வழங்குவதற்கு நான் முன்மொழி கின்றேன்.

(தொடரும்...)

# கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

## பாடம்:-கணிதம் பகுதி I நேரம்:- 2 மணித்தியாலம்

### பகுதி B

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

01.(a) சுருக்கி எழுதுக $\left(2\frac{3}{5} - 1\frac{1}{2}\right) \div \frac{11}{15}$

(b) வீடு ஒன்றிலுள்ள நீர்த்தாங்கியில் 5/8 பங்கிற்கு நீர் உள்ளது. முதல் நாள் அந்நீரில் 2/5 பங்கு பாவனைக்கு எடுக்கப்பட்டது.


I. முதல் நாள் தாங்கியின் கொள்ளளவின் என்ன பங்கு நீர் பாவனைக்கு எடுக்கப்பட்டது.

II.இரண்டாம் நாள் எஞ்சியுள்ள நீரின் பின்னம் யாது?

III.இரண்டாம் நாள் $300\ l$ நீர் எஞ்சிக் காணப்பட்டால் தாங்கியின் கொள்ளளவு யாது?

IV.முதல் நாள் தாங்கியில் எத்தனை லீற்றர் நீர் காணப்பட்டது.

02.ABCD என்பது 14cm பக்கமுடைய சதுரவடிவான மாபிள் கல் ஆகும். 14cm ஆரையுடைய இரு ஆரைச் சிறைப் பகுதிகளைக் கொண்டு அலங்காரம் ஒன்று வடிவமைக்கப்பட்டது.




I.ABCD என்னும் சதுரத்தின் பரப்பளவு யாது?

II.BED என்னும் வில்லின் நீளம் யாது?

III.நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?

IV.நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?

V.நிழற்றிய பகுதியின் பரப்பளவிற்கு சமனாக BCDX என்னும் சரிவகம் ஒன்றை தரப்பட்ட உருவில் வரைக. DX இன் நீளம் யாது?

03.பாடசாலை ஒன்றிலுள்ள மாணவர்களில் தரம் 11A இல் பெண்கள், ஆண்கள் ஆகியோருக்கிடையிலுள்ள விகிதம் 3:4 ஆகவும் தரம் 11B யில் 5:6 ஆகவும் காணப்பட்டது.

I.தரம் 11A இலுள்ள மாணவர்கள் 21பேர் ஆயின் அவ்வகுப்பிலுள்ள ஆண்கள் எத்தனை பேர்?

II.11B இல் 18 ஆண்கள் உள்ளனர். ஆயின் மாணவிகளின் எண்ணிக்கை யாது?


B.வகுப்பிலிருந்து சில மாணவர்களை A வகுப்பிற்கு மாற்றுவதன்மூலம் இரு வகுப்புகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை சமனாக்கப்பட்டது. மேலும் மாணவிகளின் விகிதமும் 1:1 ஆகக் காணப்பட்டது.

III.தற்போது வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

IV.வகுப்பு ஒன்றிலுள்ள பெண்கள், ஆண்கள் ஆகியோரின் எண்ணிக்கையை விகிதமாக எழுதி அதனை எளிய வடிவில் தருக?

04.30 பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரம் ஒன்றுக்கு மாணவர்கள் விடையளித்த விதம் பற்றிய தகவல்களை அட்டவணை காட்டுகிறது. (இங்கு (0-5) என்பது $\{x:0<x\leq5\}$) ஆகும்.

| விடையளித்த வினாக்ளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை (வரவுக்குறி) | மீடிறன் | திரள் மீடிறன் |
|---|---|---|---|
| 0 - 5 | //// | 4 | 4 |
| 5 - 10 | ~~////~~ / | 6 | 10 |
| 10 - 15 | ~~////~~ ~~////~~ | ............ | ............ |
| 15 - 20 | ................ | 7 | 27 |
| 20 - 25 | ~~////~~ / | 6 | 33 |
| 25 - 30 | // | 2 | ............ |




I.வெற்றிடங்களை நிரப்புக

II.தரப்பட்ட ஆள்கூற்றுத் தளத்தில் மேலேயுள்ள தகவல்களுக்கான திரள்மீடிறன் வளையியை வரைக.


III.வளையியின் மூலம் முதலாம் மூன்றாம் காலணைகளைக் காண்க.

IV.காலணை இடைவீச்சு யாது?

05.கோடாத சதுரமுகித் தாயக்கட்டை ஒன்றில் 1,2,3,4 குறித்த முகங்கள் சிவப்பு நிறத்தாலும் 5,6 குறித்த முகங்கள் நீல நிறத்தாலும் நிறம் தீட்டப்பட்டுள்ளது. இத் தாயக்கட்டை ஒருமுறை சுண்டப்படுகின்றது.


I.சிவப்பு நிறம் தீட்டப்பட்ட எண் கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?

II.சிவப்பு நிறம் தீட்டிய எண் கிடைக்கும் நிகழ்ச்சிகளின் தொடை R எனவும் இரட்டை எண் கிடைக்கும் நிகழ்ச்சிகளின் தொடை E எனவும் கொண்டு கீழே தரப்பட்ட வென்னுருவைப் பூரணப்படுத்துக.




III. "நீலநிற ஒற்றை" எண் கிடைக்கும் பிரதேசத்தை நிழற்றுக.

IV.மேலே கூறிய தாயக்கட்டையானது இருமுறை சுண்டப்பட்டால் பேறுகளைக் காட்டும் பூரணப்படுத்தப்படாத மரவரிப்படம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பூரணப்படுத்தி நிகழ்தகவுகளை கிளைகளில் குறித்துக்காட்டுக.




V.நீல நிற எண் ஒரு தடவையாவது கிடைக்கும் நிகழ்தகவு யாது?

## பாடம்:-கணிதம் பகுதி II நேரம்:- 2 மணி 30 நிமிடம்

பகுதி A யிலிருந்து 5 வினாக்களையும் பகுதி B யிலிருந்து 5 வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் 10 வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒவ்வொரு வினாவிற்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்

அடியின் ஆரை r ஆகவும் உயரம் h ஆகவும் உடைய செவ்வட்ட உருளை ஒன்றின் கனவளவு $\pi r^2 h$ ஆகும்.

r ஆரையுடைய கோளம் ஒன்றின் கனவளவு $4/3\pi r^3$ ஆகும்.

### பகுதி A

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01.(a)மதிப்பிட்ட ஆண்டுப் பெறுமானம் ரூ.32,000 ஆகவுள்ள வீடு ஒன்றுக்கு ஆண்டுக்கு 5% இறைவரியாக உரிமையாளர் செலுத்துகின்றார்.

(i).ஓர் ஆண்டுக்கு வரியாகச் செலுத்துப் பணம் எவ்வளவு?

(ii).காலாண்டு வரி யாது?

மாதம் ஒன்றுக்கு ரூ.5000 வீதம் வாடகைக்கு மேற்குறித்த வீடு கொடுக்கப்பட்டு மாத வாடகையின் 12% பராமரிப்பிற்காகவும் ஒதுக்கப்படுகின்றது.

(iii)வாடகையாகப் பெற்ற பணத்திலிருந்து வரியைச் செலுத்துவதுடன் பராமரிப்பிற்கும் ஒதுக்கப்பட்டால் ஒரு வருட கால முடிவில் உரிமையாளரிடம் எஞ்சிய பணம் எவ்வளவு?

(iv).எஞ்சிய பணமானது வருடாந்த எளிய வட்டிக்கு வங்கியொன்றில் வைப்புச் செய்யப்படுகின்றது. வங்கி ஒரு வருட முடிவில் ரூ.7680 ஐ வட்டியாக வழங்குகின்றது. வழங்கிய வருட வட்டி வீதம் யாது?

(v).குறித்த விலையிலிருந்து 20% கழிவு கொடுத்து ரூ.1600 ஆக விற்பனை செய்யப்படும் பொருள் ஒன்றின் குறித்த விலை யாது?

02.$y=3-x(x+2)$ என்னும் சார்பின் வரைபை வரைவதற்காக பூரணப்படுத்தப்படாத அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| $x$ | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | -5 | 0 | 3 | -4 | ---- | 0 | -5 |

(i).x=0 ஆகும் போது y இன் பெறுமானம் யாது?

(ii).x,y அச்சுக்களில் 10 சிறிய சதுரங்களை ஒரு அலகாகக் கொண்டு மேற்படி சார்பின் வரைபை வரைக.

(iii).சார்பின் உயர்வுப் பெறுமானம் யாது?

(iv).சார்பு நேராகவுள்ள x இன் பெறுமான வீச்சு யாது?

(v).வரைபை உபயோகித்து $x^2+2x-3=0$ இன் மூலகங்களைக் காண்க.

(vi).வரைபானது x இன் நேர்த்திசையில் 1 அலகு நகர்த்தப்பட்டால் புதிய வரைபின் சமன்பாடு யாது?

03.(a) தீர்க்க $\frac{1}{x-1} - \frac{1}{2} = \frac{3}{1-x}$ (இங்கு $x \neq 1$)

(b)செவ்வக வடிவ தோட்டம் ஒன்றின் அகலம், அதன் நீளத்தின் இரு மடங்கிலும் 4 மீற்றர் குறைவானதாகும்.

(i).நீளமானது x மீற்றர்கள் ஆயின் அகலத்தை x இன் உறுப்புகளில் காண்க.

(ii).தோட்டத்தின் பரப்பளவு $12m^2$ ஆயின் x ஆனது $x^2-2x-6=0$ இனால் திருப்தி செய்யப்படுகின்றது எனக் காட்டுக.

(iii).வர்க்கப்பூர்த்தியாக்கல் மூலமாகவோ அல்லது வேறு முறை மூலமோ சமன்பாட்டின் தீர்வுகள் $1\pm\sqrt{7}$ எனக்காட்டுக.

(v) $\sqrt{7}=2.65$ எனில் தோட்டத்தின் நீளத்தைக் காண்க.

04.(a). படத்தில் தரப்பட்ட தகவல்களையும் திரிகோணகணித விகிதங்களையும் உபயோகித்து

(i).$C\hat{A}D$ இன் பருமனைக் காண்க

(ii).CD யின் நீளத்தை இரு தசம தானங்களில் காண்க.

(b)கிடைத்தரையில் P என்னும் புள்ளியிலிருந்து $060^\circ$ திசைகோளில் குறித்த தூரத்தில் Q என்னும் வீடு ஒன்று காணப்பட்டது. R என்னும் வீடு P யிலிருந்து $310^0$ திசைகோளில் காணப்பட்டது.

(i).மேலே உள்ள தரவுகளை பருமட்டான படம் ஒன்றில் வரைந்து காட்டுக.

(ii).$P\hat{R}Q=20^\circ$ ஆகும். R இலிருந்து Q இன் திசைகோளைக் காண்க.

(iii).மேற்படி அளவிடைப்படம் 1:50 000 என்னும் அளவிடையில் வரையப்பட்டது எனில் QR இன் நீளமானது 4.8 cm ஆகக் காணப்படின் இரு வீடுகளுக்கும் இடைப்பட்ட தூரத்தை km இல் காண்க.

(தொடரும்)

தண்ணீருக்குள் இறங்காமல் நீச்சல் கற்க முடியாது.

– ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சியை வழங்கும் திட்டம் அவசியம் தேவை

கடலில் குளிக்கச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி மரணம்; குளத்தில் நீராடிய இளைஞன் பலி; கிணற்றில் வீழ்ந்த சிறுவன் பரிதாப மரணம் இப்படியான துன்பம் மிகு செய்திகள் நாளாந்தம் ஊடகங்களில் வந்த வண்ணம் உள்ளன.

இத்தகைய இழப்புகள் குறித்து நாம் கரிசனை கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். நீச்சல் தெரிந்திருந்தால் இத்தகைய மரணங்களை தவிர்க்க முடியும் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனினும் பொதுவில் நீச்சல் பயிற்சி பற்றி நாம் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் மேலை நாட்டவர்கள் பிள்ளை பிறந்து ஒரு வருடத்தை நெரு ங்குகின்ற போதே பிள்ளைக்கு நீச்சல் பயிற்சி கொடு க்க ஆரம்பித்து விடுவர். மேலை நாட்டில் நீச்சல் பயி ற்சி என்பது கட்டாயமானது. ஒவ்வொரு பிள்ளையும் நீச்சல் பயிற்சியை கட்டாயம் கற்றிருக்க வேண்டும்.

நீச்சல் பயிற்சி என்பது உயிர் ஆபத்தில் இருந்து பாதுகாப்பதுடன் உடல் ஆரோக்கியத்துக்கு மிகச் சிறந்த உடற்பயிற்சியாகக் கருதப்படுகின்றது. எனினும் நீச்சல் பயிற்சி குறித்து நாங்கள் கரிசனை கொள்வதேயில்லை. இதனால் விபரீதமான சம்பவங்கள் நடந்து விடுகின்றன.

எங்கள் மண்ணில் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட 90 வீதமான மரணங்களுக்கான காரணம் நீச்சல் தெரியாமையாகும். எனவே, எமது பிள்ளைகளுக்கு நீச்சல் பயிற் சியை வழங்குவதன் ஊடாக உயிராபத்துக்களில் இருந்து எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்ற முடி யும்.

நீச்சல் பயிற்சி என்பது சிறுபராயத்தில் வழங்கப்படுவதும் முக்கியமானது என்பதால் பாடசாலை மட்டங்களில் நீச்சல் பயிற்சியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளுக்கு நீச்சல் பயிற்சியை கற்றுக் கொடுப்பது என்பது நடைமுறைச்சாத்தியமாகாது என்பதால், பாடசாலைகள் இது விடயத்தில் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகியுள்ளது.

அதே சமயம் மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சியை வழங்குவதற்கு தேவையான நீச்சல் தடாகங்கள் உரிய பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட வளங்களை மாகாணக் கல்வி அமைச்சு வழங்குவது குறித்தும் ஆராயப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகம் யாழ்ப்பாணத்து மாணவர்கள் நீச்சல் பயிற்சியை பெற்றுக் கொள்வதற்கான சிறந்த வளமாக இருந்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக அந்த நீச்சல் தடாகம் இயங்குநிலையில் இல்லாமல் போயுள்ளது.

ஆகவே, காலத்தின் தேவை கருதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை மீளவும் புனரமைத்து மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.

இவை யாவற்றுக்கும் அப்பால் ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகள் மீது அதீத கவனம் செலுத்துவது அவசியம்.

ஒரு குறிப்பிட வயதுப் பிரிவினர் ஒன்று சேர்ந்து குளத்திலும் கடலிலும் நீராடச் சென்று விபரிதமான சம்பவங்களுக்கு ஆளாகி விடுகின்றனர்.

எனவே, இது விடயங்களில் பெற்றோர்கள் தம் கவனிப்பை அகலப்படுத்துவது அவசியம். இதன் மூலம் விபரிதமான விளைவுகளை–மரணங்களை தவிர்க்க முடியும்.

## 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் - ஐ.நா

(கொழும்பு)

இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் பெண்களில் பெரும்பாலானவர்கள் 16 வயதுக்கும் குறைந்த பாடசாலை செல்லும் வயதில் உள்ள சிறுமிகள் என ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பெண் பிள்ளைகளில் 6.5 வீதமானவர்கள் 19 வயதை பூர்த்தி செய்யும் முன்னரே கர்ப்பமாவது அல்லது பிள்ளையை பெற்றெடுப்பதாக குறித்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் இந்த நிலைமை அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம், ஆண், பெண் பாலினம் குறித்தும், பாலியல் கல்வி தொடர்பாக ஆண், பெண் சிறார்களுக்கு மாத்திரமல்லாது வயது வந்தவர்களுக்கும் தெளிவுப் படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளது.

அதிகரித்து வரும் இந்த நிலைமையை கட்டுப்படுவதற்கு இது முக்கியமானது எனவும் அந் நிதியம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## சூதாட்டம் 6 பேர் கைது

(கரணவாய்)

மயானத்தில் சூதாடிய ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சுருவில் சுடலை மடத்தில் உள்ள மயானத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இக் கைதுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மயானத்தில் ஆறுபேர் கொண்ட குழு சூதாட்டம் ஆடுவதாக கிடைத்த தகவலையடுத்து மயானத்துக்கு விரைந்த ஊர்காவற்துறை பொலிஸார் குறித்த ஆறு பேரை கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிள் ஆட்டோ மற்றும் பதின் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் பணத்தினையும் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12,60)

## ஓய்வுபெற்ற செயலாளர் சின்னத்தங்கம் காலமானார்

(யாழ்ப்பாணம்)

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற செயலாளரும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் ஓய்வு பெற்ற விரிவுரையாளருமான திருமதி சின்னத்தங்கம் பரமநாதன் கடந்த 26-ம் திகதி காலமானார்.

இவர் அரச சார்பற்ற நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான மக்கள் குழுவின் செயலாளருமான எஸ்.பரமநாதனின் பாரியாரும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணியளவில் பலாலி வீதி உரும்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (இ-5)

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்**

**யாழ்.சமூக செயற்பாட்டு மையம்**

**(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)**

JSAC

16

2015

குடும்பத்தில் சமத்துவம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமவாய்ப்பு. சலனமற்ற சமூகமாய் சமைத்திடுவோம் சம அந்தஸ்தினை

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 2015**

''மரம் போன்ற ஒரு அழகான கவிதையை ஒருபோதும் காணமாட்டேன் என நினைக்கிறேன்''

–ஜெய்சி கில்மர் (அமெரிக்க எழுத்தாளர்)

## பரமபிதாவின் வழிகாட்டலில் ஆயர் தந்தையுடன் சேர்ந்து நாமும் சிறு பிள்ளைகளாய் வழிநடப்போம் வாரீர்!

மனித முன்னேற்றத்தின் இக்காலத்திலே மனித வாழ்வின் எழுச்சிகள், வளர்ச்சிகள் மேலோங்கிய போதிலும், கத்தோலிக்கர்கள் மத்தியில் மனித மாண்பியல் வீழ்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது என்றே சொல்ல வேணடும். இவ்வேளை இந்நிலையை எழுச்சியுடையதாக்க யார் வருவார் என்பது பலரது உள்ளக்கேள்வியாக இருந்தது. இந்நிலையில் மனித மாண்பைப் பேணும் அச்சாணியாக, இப்பணிக்கு யாழ்.மறைமாவட்டத்தில் பொருத்தமானவர் அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட ஞானப்பிரகாசம் ஆண்டகையே என கடந்த ஐப்பசிமாதம் 13ஆம்


### பரமபிதா காட்டிய பாதை

திகதி அறிவிக்கப்பட்டுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசத்தின்படி ஆயர்கள் இறைவனால் தெரிவு செய்யப்பட்டு எமக்காக எம்மிடையே ஆயனாக பணிபுரிய அனுப்பப்படுகின்றவர்களே. இவ்வாறு 'உன்பெயர் சொல்லி அழைத்ததும் நாமே. உன்னை உள்ளம் கையில் பொறித்ததும் நாமே. தாயின கருவில் உன்னை அறிந்தோமே. நீ உருவாகும் முன்பே தெரிந்தோமே." பைபிளில் ஏரேமியா புத்தகத்தில் காணப்படும் இந்த இறை வார்த்தைகளின்படி எமக்காக யாழ். மறைமாவட்டத்தினபுதிய ஆயராக ஆற்றல்மிக்க அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை இறைவன் தெரிந்து கொண்டமையால் இவர் நேற்றையதினம் திருநிலைப்படுத்தப்பட்டு எம்மை வழிநடத்துவதற்கு இறைவனால் அனுப்பப்பட்டுள்ளார்.

எமது ஆயர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு 41 வருடங்கள் சமய சமூகப் பணியுடன் கல்விப்பணியிலேயே பலவருடங்கள் தன்னை இணைத்துள்ளார். அத்துடன் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஆன்மீக தலைவராக, வழிகாட்டியாக வாழ்ந்து காட்டுகிறார். தேர்ச்சிபெற்ற ஆங்கில அறிவும் ஆழ்ந்த கல்வி அறிவும் கொண்டவர். இறையியல் மெய்யியல் துறைகளின் விரிவுரையாளர். அடக்கமான ஆளுமையும் அன்பொழுக உற்று நோக்கும் பார்வையும், தோற்றத்தில் கம்பீரமும் செயற்பாட்டில் கண்ணியமும், பேச்சில் கனிவும், வழிநடத்தலில் தலைமைத்துவமும், கடமையில கட்டுப்பாடும், முகாமைத்துவத்தில் முன்னுதாரணமும் தற்துணிவில் வீரமும் கொண்டவர். எண்ணத்தில் தூய்மையும் உள்ளத்தில் ஏழ்மையும் வாழ்வில் எளிமையும், ஒழுக்கத்தில் தனக்கென்றே தனித்துவத்தையும் கொண்டவர். மதவாதி என்றோ மிதவாதி என்றோ வகையின்றி அனைவரையும் அன்பொழுக நோக்குபவர் எமது ஆயர. ஆயர் அவரது வரவால் 'நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப்பாய்ந்து வருக" என ஆமோஸ் இறைவாக்கினர் பைபிளில் உரைத்த சமூக நீதிக் கொள்கைகள் எம் மண்ணிலே குறிப்பாக கத்தோலிக்கர்கள் காணக்கூடியதாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

தந்தை அவர்களின் மறையுரைகள் ஆழ்ந்த அர்த்தத்தை கொண்டிருந்தாலும் மிகவும் சுருக்கமானதாகவும் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். பல்வேறுபட்ட மொழிப் புத்தகஙகளை வாசித்து பன்முக அறிவினை தாம் பெற்று எம் வழமான வாழ்விற்கு தேவையான அறிவுரைகளை வழங்குவதில் அவருக்கு இணையானவர் இன் னும் இந்த மண்ணிலே பிறக்கவில்லை என்றுதான கூற வேண்டும். அதிகாரத்தாலும், அடக்கு முறைகளாலும் நசுக்கப்படும் நீதியற்ற அரசியலினால் நிலை தடுமாறும் எம்நாட்டில் தற்போது ஏழைகளாய், ஏதிலிகளாய் நின்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல் பொருளாதார நிலையிலும் உலக வல்லரசுகளின் நயவஞ்சக வலைக்குள் சிக்காமல் சரித்திரம் படைக்க சறுக்கான பாதைவழியே சரியாக எம்மை வழிநடத்தக்கூடியவர். எமக்கேயுரித்தான மனிதவியல் உரிமைகளை, பெற்றுத்தரக்கூடிய மதிநுட்பமுள்ள தூரநோக்கு சிந்தனையால் நீதியின் செயல்களை நிறைவேற்றும் கதி ரோனாய் திகழவல்ல வர்.



இ ன் று சமய வேறுபாடுகள் இன்றி பழி பாதக செயல்கள், பாவ காரியங்கள் எங்கும பரந்து ஆன்மீக வறுமை எம்மை அழிவு நிலைக்குள் அலைக்களிக்கின்ற போது தவறி உடைந்து போன உள்ளத்தோரை எதற்கும் விலை போகா விடிவெள்ளியாய் இருந்து குணப்படுத்த வல்லவர்.

எல்லாச் சமயங்களுடனும் புரிந்துணர்வுடன் நல்ல இணக்கத்தை ஏற்படுத்தி அனைத்து சமய தலைவர்களையும் மதிக்கும் மனப்பக்குவம் கொண்டவர். அத்துடன் எம் சமூகத்திலே சமதர்ம சகோதரத்துவ உறவை மிளிரச்-செய்யக்கூடிய செம்மல். தெற்குக்கு நல்லமைதியை எடுத்துச் செல்லும் நற்செய்தியாளர். ஆண்டகையின் காலத்தில் 'நீதி தழைத்தோங்குவதாக, நிலா உள்ள வரையில் மிகுந்த சமாதானம் நிலவுவதாக" 'ஒடுக்கப்பட்டோர் மீண்டும் ஆண்டவரில் மகிழ்ச்சி பெறுவர், மானிடரில் வறியவர். இஸ்ரயேலரின் தூயவரில் அகமகிழ்வர் என்ற பைபிள் வார்த்தைகளில் எமது நம்பிக்கையை வைத்து பேதங்கள் இன்றி சாதனைகள் புரிய தந்தையுடன் சேர்ந்து நாமும் சிறு பிள்ளைகளாய் வழிநடப்போம். அவர் எமது எல்லாவிதமான எழுச்சிக் கும் வளர்ச்சிக்கும் உழைத்திடவும் இறைவன் ஆன்மீக, உள, உடல்நலன்களை நிறைவாக பொழிந்திட இறையாசீர் வேண்டுவோம். இறைவன் இவரை பேராயர் நிலைக்கு உயர்த்த செபிப் போமாக.

**ம.பிரான்சிஸ்க்**

**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

# இருபது-20 கிரிக்கெட் போட்டி யாழ். ஜொனியன்ஸ் முதலாமிடம்








யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இரு ந்து தொடர்ந்து 6 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்வில் 01. 01.15 இல் இருந்து இன்று வரை 60, 20 ஓவர் போட்டிகள் நடை பெற்று முடிந்தன. யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக 56 போட்டிகளும் ஹாட்லியைற்ஸ் இரு பது-20 வெற்றிக்கிண்ணத்திற்காக 4 போட்டிகளும் நடைபெற்றன. அவ ற்றிற்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.ஜொனியன்ஸ் 9 போட்டிகளில் பங்குபற்றி 06 போட்டிகளில் வெற்றிபெற்று 36.82 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத் திலும் கே.சீ.சீ.சீ.அணி 10 போட்டி களில் பங்குபற்றி 6 போட்டிகளில் வெற்றிபெற்று 35.88 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் சென்ற லைட்ஸ் அணி 7 போட்டிகளில் பங்கு பற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 34.29 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளனர்.

ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,

யாழ்.சென்றல் 32.57 (10/04), சிறிகாமாட்சி 30.63 (07/05), ஹாட்லியைற்ஸ் 28.55 (08/04), திருநெல்வேலி சீ.சீ. 28.54 (08/04), விங்ஸ் 24.59 (07/04), யூனி யன்ஸ் 18.89 (06/03), கிறாஸ் கொப்பர்ஸ் 19.49 (06/03), ஸ்கந் தாஸ்ராஸ் 19.29 (06/03), ஜொலி ஸ்ரார் 18.32 (05/03), நியூஸ்ரார், 14.99 (03/02), டிறிபேக்ஸ்ரார், 9.73(03/01), ஸ்ரான்லி 9.70 (03/01), பற்றீசியன்ஸ் 8.25 (05/00), திருநெல்வேலி ymha 6.95 (02/01), மூளாய் விக்ரோறி 6.82 (03/00), மானிப்பாய் பரீஸ் 6.40 (02/01) யங்ஸ்ரார் 4.07 (03/00), அரியாலை சென்றல் 3.86 (02/00), ஓல்ட் கோல்ஸ் 2.20 (01/00). (க)

## இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து

# இயான் ஹூமே ஹாட்ரிக் கோல் அரையிறுதியில் கொல்கத்தா







இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து தொடரில் புனே அணிக்கு எதிரான லீக் போட்டியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அரையிறுதிக்கு முன் னேறியுள்ளது.

இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து (ஐ.எஸ்.எல்.) இரண்டாவது தொட ரின் லீக் சுற்றின் 48 ஆவது லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் அட் லெடிகோ டீ கொல்கத்தா- புனே சிட்டி அணிகள் மோதின.

கொல்கத்தாவில் நடந்த இந்தப் போட்டியில் உள்ளூர் ரசிகர்களின் முன் களமிறங்கிய கொல்கத்தா 9 ஆவது நிமிடத்திலேயே கோல் அடித்து அசத்தியது.

அந்த அணியின் அரட்டா இசூமி தட்டிக்கொடுத்த பந்தை, சக வீரர் இயான் ஹூமே எளிதில் கோலாக மாற்றினார்.

பின்னர் தொடர்ந்து 48 மற்றும் 83 ஆவது நிமிடங்களிலும் இயான ஹூமே கோல் போட்டு இந்த சீசனில 2 ஆவது முறையாக 'ஹாட்ரிக்' சாதனை புரிந்தார்.

இதற்கு பதிலடி கொடுக்க போரா டிய புனே அணியின் அட்ரியன்முது 86 ஆவது நிமிடத்தில் ஆறுதல் கோல் போட்டார்.

கடைசி நிமிடத்தில் கொல்கத் தாவின் டெஜான் லெகிச் மேலும் ஒரு கோல்போட்டு அசத்தினார். ஆட் நேர முடிவில் கொல்கத்தா அணி 4-1 என்ற கோல் கணக்கில் புனேயை தோற்கடித்து வெற்றி பெற்றது.

இந்த வெற்றி கொல்கத்தா அணிக்கு 7 ஆவது வெற்றி ஆகும். இதன் மூலம் கொல்கத்தா முதல் அணியாக அரையிறுதிக்குள் அடி யெடுத்து வைத்தது. (கீ)

# வருடாந்த நிதி கூற்றறிக்கை...

சபையின் விசேட அமர்வு ஒழுங் கமைக்கப்பட்டிருந்தது.

இந்த அமர்விலேயே 2016-ம் ஆண்டுக்கான நிதி கூற்றறிக் கையினை முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் சபையில் முன்மொ ழிந்த நிலையில் சபையில் எதிர்ப் புக்கள் எவையுமில்லாமல் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமாகாணசபை செல வீனங்களுக்காக, நிதி ஆணைக் குழு தேசிய வரவுசெலவு திட்ட திணைக்களத்திற்கு சிபார்சு செய யப்பட்டிருக்கும் ஒதுக்கீடுகள் இவ் வாறு அமைகின்றது.

மீண்டுவரும் செலவீனம் ரூ.18, 404.23 மில்லியன், உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கான முத்திரை தீர்வை கட்டணம் ரூ. 0.3 மில்லியன், மூலதன செலவீனங் களுக்காக ரூ. 4665.65 மில்லியன் இதில் பிரமாண அடிப்படையிலான கொடை ரூ.475 மில்லியன், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை ரூ.3199.30 மில்லியன். பாடசாலை கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாக மாற் றும் செயற்றிட்டம் ரூ.465 மில்லி யன்,

சுகாதாரதுறை அபிவிருத்தி கருத்திட்டம் ரூ.365 மில்லியன், யுனிசெப் கருத்திட்டம் ரூ.11.35மில்லி யன், மாகாணசபை கட்டிடம் கைதடி ரூ.150 மில்லியன், மேலும் மற்றைய திட்டங்களுக்கான ஒதுக்கீடாக ரூ.4152.35 மில்லியன் என அமைந்துள்ளது.

இதில் மீண்டும் செலவீனங் களுக்காக சிபாரிசு செய்யப்பட்ட தொகையான ரூ.18404.23 மில்லி யனில், மத்திய அரசால் தொகுதி கொடையாக ரூ.16174.23 மில்லி யனும்,

மத்திய அரசு வருமானமாக ரூ.1830 மில்லியனும், மாகாணசபை வருமானமாக ரூ.400 மில்லியனும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படு கின்றன. இந்நிலையில் மேற்படி ஒதுக்கீட்டு தொகைகளுக்கு அமை வாக மாகாண அமைச்சுக்கள் மற் றும் திணைக்களங்கள் ரீதியாக அவற்றின் முன்னுரிமை தேவை களின் அடிப்படையில் வருடாந்த நிதி கூற்றறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன எனவும், நியாய மான காலத்திற்குள் 2016-ம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் சபையில் முன்வைக்கப் படும் என முதலமைச்சர் தனது முன் மொழிவில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒப்பீட்டளவில் 2015-ம் ஆண் டுக்கான நிதி ஒதுக்கீட்டை விடவும் 2016-ம் ஆண்டுக்கான ஒதுக்கீடு அதிகம் என்றபோதும், மாகாண சபையினால் கேட்கப்பட்ட நிதி ஒதுக கப்படவில்லை என நேற்று சபை முடிவில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு முதலமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார். (செ-4)

## யாழ். ஆயரின்...

ன்னை மரியன்னை பேராலயத் தில் காலை 8.30 மணிக்கு நடை பெற்றது.

குறித்த திருநிலைப்படுத்தல் சடங்கிற்கு இலங்கையின்அனைத்து மாவட்டங்களினதும் ஆயர்கள், கர் தினால்மார்கள், குருக்கள், அருட் சகோதரிகள், அரசியல் பிரமுகர் கள், அனைத்து மாவட்டங்களில் இருந்து வருகை தந்த பெருந்திர ளான பொதுமக்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை இவர் யாழ். மறை மாவட்டத்தின் 11 ஆவது ஆயர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர்கள், வடக்கு மாகாண முதல மைச்சர் மற்றும் உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## அரசியல் கைதிகளை...

அறிவித்துள்ளது.

அவ்வாறு தடுத்துவைக்கப்பட் டுள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆணைக்குழு சட்டமா அதிபரை கேட்டுக்கொண்டுள்ளது.

குற்றச்சாட்டுக்கள் இன்றியும், நம்பகமான ஆதாரங்கள் இன்றி யும் நீண்டகாலமாக தடுத்துவைக் கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என் றும் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்ட வர்கள் மீதான வழக்குகளை மீளாய்வு செய்யுமாறும் பொலிஸா ருக்கு அளிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அடிப் படையாகக் கொண்டு தொடரப்பட்ட வழக்குகளையும் நம்பகமான ஆதா ரங்கள் இல்லாத வழக்குகளையும் ஒப்பீட்டளவில் சிறுகுற்றங்களுக் கான வழக்குகளையும் மீளப் பெறுமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுக்கொண் டுள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அடுத்த கட்டமாக புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக கூறப்படு கின்ற நடவடிக்கைகள் தொடர்பில் உள்ள கவலைகள் பற்றியும் சட் டமா அதிபருக்கு மனித உரிமை கள் ஆணைக்குழு தெரியப்படுத்தி யுள்ளது. (செ-12)

## ஜனாதிபதிக்கு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக் கிரம சிங்க இணைந்து கருத் தொரு மைப பட்டு தேசிய அரசு அமைக் கப்பட்டு நாட்டின் நல் லாட்சி ஏற் படுத்தப்பட் டுள்ளது.

தடைசெய்யப்பட்டுள்ள ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை அடுத்த வருடம் மீண்டும் கிடைக்கவுள்ளது.

இவ் வாறாக தடைகள் நீக்கப் பட்டுள்ளமைக்கு நல்லாட்சி தொடர் பில் உலகம் எம்மை புகழ்ந்து பாராட்டுகின்றது.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நோபல் பரிசு வழங்குவது தொடர் பாக சர்வதேச ரீதியில் பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன.

இது நாமும், எமது நாட்டு மக்களும் பெருமைப்படக்கூடிய விடயமாகும் என்றார். (செ-12)

## ஜனாதிபதி...

மைத்திரிபால சிறிசேன, ஐ.நா. சபை நிகழ்வொன்றில் கலந்து கொள்ள பிரான்ஸ் செல்லவுள் ளார்.

காலநிலை மாற்றம் தொடர் பான ஐக்கிய நாடுகள் சபையின் உலகத்தலைவர்களுக்கான கருத் தரங்கு இம்முறை பிரான்ஸில் நடை பெறவுள்ளது.

1992ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட காலநிலை மாற்றம் தொடர் பான ஐக்கிய நாடுகள் சபையின் 21ஆவது உச்சிமாநாடு இதுவாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன உள்ளிட்ட உலகின் எண்பது நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள னர்.

இதுவரை காலமும் நடை பெற்ற காலநிலைமாற்றம் தொடர் பான உச்சிமாநாடுகளில் கலந் துரையாடலின் பின்னர் கலைந்து செல்லும் வழக்கத்திற்கு மாற்றமாக இம்முறை செயல்பாட்டு ரீதியான நிகழ்வுகள் இந்த உச்சிமாநாட்டில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. (செ-12)

## பொதுநலவாய நாடுகள் அமைப்பின்...

பரோனஸ் பற்றீசியா இந்தப் பதவிக் குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மோல்டாவில் நடைபெறும் பொதுநலவாய அரசி யல் தலைவர்களின் உச்சி மாநாட் டில் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவர் பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பத வியை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம முதலாம் திகதி பொறுப்பேற்கவுள்ளார்.

டொமினிக்காவில் பிறந்து பிரித் தானியாவில்குடியேறிய இவர்கோடன் பிறவுண் அரசாங்கத்தில் சட்டமா அதிபராக பணியாற்றியிருந்தார்.

பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளராக பொறுப் பேற்கவுள்ள முதல் பெண்மணி இவர் என்பதும், முதலாவது பிரித் தானியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தில் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல் கள் தொடர்பாக விசா ரிக்க பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், விசா ரணையாளர்கள், வழக குத்தொடுநர்களின் பங்களிப்புடன் விசா ரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண் டும் என்று வலியுறுத் தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுநலவாய அமைப் பின் புதிய பொதுச்செய லாளராக பிரித்தானி யாவைச் சேர்ந்த சட்ட நிபுணரான பரோ னஸ்பற்றீசியா பொறுப் பேற்கவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (செ-12)

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமஹ

### கலாபூசணம் சின்னத்தம்பி நாகராசா (A.S.N.R)

(சிற்பாச்சாரியார், சோதிடர், தவில் கொட்டு உற்பத்தியாளர், பேரீ வாத்ய விஸ்வப்பிரம்மன்)



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் ஆசாரிவீதி கோண்டாவில் மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்தம்பி நாகராசா கடந்த வெள்ளிக்கிழமை (27.11.2015) அன்று காலமானார்.

அன்னார் வட்டுக்கோட்டையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியினரின் மூத்த புதல் வனும், கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற சரஸ்வதியின் பாசமிகு கணவரும், தில்லைநாதன், நாகேஸ்வரி அவர்களின் அன்பு சகோதரனும், சசிகலா (DAM), றஞ்சிதகலா (Canada), சாந்தினி (France), வாசுகி (Canada), றஞ்சகுமார் (London), ஈஸ்வரகுமார் (France), தாட்சாயினி (Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணராசா, விஜயகுமார் (Canada), ஜெகானந்தன் (France), ரூபகலா (London), குபேந்தினி (France), டன்ஸரன் (Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவமணி, காலஞ்சென்ற நடராசா, சிவபாலசுந்தரம், சரவணபவானந்தன், காலஞ்சென்ற நடராசசுந்தரம், இராமநாதன், காலஞ் சென்ற இராசலிங்கம், கதிர்காமசுந்தரம், கணேசலிங்கம், பரமேஸ்வரன், காலஞ்சென்ற கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சங்கீர்தா, சந்தோஷ், வைஷ்ணவி, ப்ரீத்தி, விகாஷ், சாணுஜன், சமிரா, டிலுஜா, சஜித், கவிஷ், அய்ஜெய், அக்ஷி, ரோகித், றொமிஷா ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆசாரி வீதி, தாவடி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (2608)

தகவல் - குடும்பத்தினர்


SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,300/- | LONDON | 94,300/- |
| MADURAI | 18,600/- | TORONTO | 155,100/- |
| TRICHI | 26,400/- | MALDIVES | 24,100/- |
| BOMBAY | 32,800/- | PARIS | 88,300/- |
| BENGALURE | 30,900/- | NEWYORK | 118,800/- |
| KOCHI | 25,600/- | MELBOURNE | 103,300/- |
| DELHI | 46,800/- | CANTON | 68,900/- |
| MALAYSIA | 33,400/- | PERTH | 93,900/- |
| SINGAPORE | 33,800/- | NARITA | 73,800/- |
| BANGKOK | 31,800/- | AUCKLAND | 109,300/- |
| ONEWAY: CHENNAI - 12,500/- | | SYDNEY | 104,800/- |

*Condition Apply

VISA CARD ACCEPTED.

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT (C-2821)

DUBAI -15,900/-, DOHA -19,800/-, SHARJAH -15,900/-

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83,84,85,86,89,90

நீங்கள் எதிரபாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் அனைத்து நாடுகளுக்குமான விமானப்பயண டிக்கட்டுகளை உங்கள் கணனியில் இருந்தவாறே இன்றே பதிவு செய்யுங்கள்...!

www.sbairfares.com | www.sbtravels.lk

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence


## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தங்கம் பரமநாதன்



சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான
மக்கள்
குழுவின் செயலாளர்
சுப்பிரமணியம் பரமநாதனின்
அன்பு மனைவி
திருமதி **சின்னத்தங்கம் பரமநாதன்**
அவர்களின் மரணச்செய்தி அறிந்து
துயரடைகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர், பணியாளர்
தியாகி அறக்கொடை நிறுவனம், யாழ்ப்பாணம். (C-2827)

## ராஜிதவிடம்...

அவன்கார்ட் தலைவர் நிஷங்க சேனாதிபதியிடமிருந்து நிதி பெற்றுக்கொண்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில், உண்மை எது, பொய் எது என்பதனை கண்டறியுமாறு அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடொன்றை கையளித்தனர்.

இதன்படி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டுவிட்டதாக அறிவித்துள்ள இரகசிய பொலிஸார், அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிடம் விசாரணை நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளனர். (செ-12)

## மிதிபலகையில்...

விதிக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே போக்குவரத்து கட்டுப்பாட்டு பிரதி முகாமையாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

பயணிகளின் பாதுகாப்பிற்காகவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் இது அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (செ-12)

## குண்டு துளைக்காத...

அழைப்பு ஒன்றை எடுத்து, முன்னாள் ஜனாதிபதி இந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டு வருவதால், தனக்கு குண்டு துளைக்காத கார் ஒன்று இருக்க வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ கூறியதாக தெரிய வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை விட அதிகளவான பாதுகாப்பும் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் அவர் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் பயன்படுத்தி வந்த குண்டு துளைக்காத வாகனத்தை அவர் தன்னுடன் எடுத்துச் செல்ல விரும்புவதாக குறிப்பிடப்படுகின்றது. (செ-12)

## இந்தியப் படைத்...

இவரின் இலங்கைக்கான பயணம் கருதப்படுகின்றது.

இவ்விஜயத்தின் போது இலங்கையின் படைத்துறை அதிகாரிகளுடன் பழைய போர் விமானங்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகள் மற்றும் டாங்கிகளை தரமுயர்த்துவது தொடர்பாக அவர் கலந்துரையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவர் தனது இலங்கைக்கான பயணத்தின்போது சிறி ஜெயவர்த்தனபுர கோட்டேயில் அமைக்கப்பட்டுள்ள இந்திய அமைதிப் படையினருக்கான நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இந்திய அமைதிப் படையினர் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில்இவர்திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## அரச...

ரத்து செய்யப்பட்டமை உள்ளிட்ட காரணங்கள் தொடர்பாக இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் தினங்களில் அரச தரப்பில் இருந்து சாதகமான பதில்கள் கிடைக்கப் பெறாவிட்டால் நாடு தழுவிய் ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக அரச மருத்துவர்கள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் நலிந்த ஹேரத் தெரிவித்தார். (செ-12)


### அனுமதி

தரம் 3,4,5,6 மாணவர்களுக்கான புதிய ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனுமதிக்கு அழையுங்கள்.

**Writing, Grammar, Spoken**

தொடர்புகளுக்கு:- 077 055 6375

### 2015 O/L பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சிச் செயலமர்வு

பாடம்
தமிழ்மொழியும் இலக்கியமும்

22 T I, II, III பகுதிகளுக்கான முழுமையான மீட்டல்

நடைபெறவிருக்கும் இடங்கள்

**அகரம் கல்வி நிலையம்**
மல்லாகம் (காங்கேயன் வெதுப்பகம் முன்பதாக)
29/11/2015 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் மாலை 3.00 மணிவரை (மதிய உணவை எடுத்துவர வேண்டும்)

**றோயல் அக்கடமி யாழ்ப்பாணம்**
30/11/2015 மாலை 2.30 முதல் 5.30 வரையும்
01/12/2015 மாலை 2.30 முதல் 5.30 வரையும்
நடைபெறும்.

பயிற்சிக் கையேடுகள் விடைகளுடன் வழங்கப்படும்.

"வழிகாட்டல் இல்லாத எதுவும் வழிப்படுவது கடினம்"

(2597)

வளவாளர்
திரு.இல. நிஷாந்தன்
ஆசிரியர்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கட்டணம் ரூபாய் 300 மட்டுமே.

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகர் பகுதியில் பஸ் நிலையம் அருகாமையில் சகல வசதிகளும் உடைய மூன்று அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0771520674

(சி-2815)

### வேலை வாய்ப்பு

யாழ், கிளிநொச்சி, சாவகச்சேரி நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் கணினிப்போதனாசிரியர் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தொடர்புகளுக்கு - 0773614572

(சி-2809)

### நடமாடும் மிருகவைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில், மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு

0779738802
0212242502

(2606)

காலை 9-12
நாவலர் றோட், நல்லூர்.

### வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வியாபாரக் கட்டிடத் தொகுதியில் முதலாம் மாடியில் 426 சதுர அடிப் பரப்பளவு கொண்ட (நீளம் 44' X அகலம் 12') முற்றிலும் தரை ஓடு பதிக்கப்பட்டு, உள்ளக மலசல, குளியலறை மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

(நிறுவனங்களின் பாவனைக்கும் உகந்தது)

தொடர்புகளுக்கு:-
0768716793, 0727773222

(சி-2813)

### Branded கணனி பிரியர்களே...

மிகக்குறைந்த விலையில் Lenovo, Dell, Hp கணனி, Laptop களை பெற்று கொள்ளலாம்.



Rs.8750/- இல் இருந்து

Warranty 06 Months

Micro System Manipay
077 2487082
021 2256165

(c-2823)

### யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD

**P.ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:-384, A, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோயில் அருகில் நல்லூர்)
தொலைபேசி:-021 221 7944

கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி,
தொலைபேசி:-011 258 6180/ 011 258 6208

(2609)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-2816)

### FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

FALC

பிரெஞ்சு மொழி வகுப்பு



Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1013 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

| No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 05.12.15 சனி 8 மணி | பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 07.12 @ 4pm. | கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 09.12 @ 4pm |
|---|---|---|

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

(சி-2811)

### அசல் SONY இலத்திரனியல் உபகரணங்களை இலங்கையில் சந்தைப்படுத்துபவர்கள்

**SINGER Plus**




3 வருட சிங்கர் உத்தரவாதம் (நிபந்தனைக்கு உட்பட்டது)

SONY 40" LED தொலைக்காட்சியுடன்
SONY Home Theatre
ஒன்று இலவசம்



DAV - TZ 140 - Rs.26,X50 - இலவசம்

SINGER Plus காட்சியறைகள்...

| யாழ்ப்பாணம். | பருத்தித்துறை | கொடிகாமம் | மானிப்பாய். | சங்கானை | சுன்னாகம். | நெல்லியடி. | சாவகச்சேரி | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 226 3411 | 0774643424 | 021 225 5343 | 021 225 1100 | 021 224 0555 | 021 226 4937 | 021 227 0197 | 021 228 0199 | 076 8622213 | 021 229 0180 |

(சி-2812)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 29.11.2015 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 42





# தமிழ் இளைஞர்களை வதைக்கும் அரச வக்கிரங்கள்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

இது பிள்ளையார் கதைப் பூசைக்காலம். ஆலடிப் பிள்ளையார் கோயிலில் காலைப்பொழுதில் பிள்ளையார் கதைப் படிப்பு நடக்கும்.

ஒன்று இரண்டு வயது போனவர்கள் பிள்ளையார் கதையைப் படிப்பர். முன்பென்றால் பிள்ளையார் கதை கேட்க ஏகப்பட்ட சனங்கள். விரதமிருந்து பிள்ளையார் கதை படிப்பது ஒரு கட்டாயமாகக் கருதப்பட்டது. இப்போதெல்லாம் அந்த நிலைமை கிடையாது. கால மாற்றம். சனங்களுக்கு நேரமில்லை. பிள்ளையார் கதையை விடத் தொலைக்காட்சிகளில் வருகின்ற தொடர் நாடகங்கள் எங்களுக்குப் பிரியமாப் போய்ச்சு. அதால மாலைப்பொழுதில் மட்டும் ஆலடிப் பிள்ளையார் கோயிலுக்கு அடியார்கள் வருவினம். அந்தப் பிராக்கில ஆலடி மாநாடும் நடந்து முடியும்.

பண்டிதர் பரமலிங்கத்தின் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

**பண்டிதர்:** சிறைகளில் வாடுகிற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரன் ஓடுகிற புகையிரதத்திற்கு முன் பாய்ந்து தன்ர உயிரைத் தியாகம் செய்துள்ளான். அந்த மாணவனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம்.

(பண்டிதரின் அறிவிப்போடு ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்)

கற்றாரை யான் வேண்டேன்... என்ற திருமுறையை வாத்தியார் ஓதினார்.

எல்லாம்வல்ல பரமபிதாவே மாணவன் செந்தூரனுக்கு உம் கருணையைக் காட்டி அருளும். மாணவன் செந்தூரனின் இழப்பால் துயருறும் அந்த மாணவனின் குடும்பத்திற்கு உம் அளப்பெரும் கருணையால் ஆறுதலைக் கொடுத்தருளும்.

மூப்பரின் செபத்துடன் மௌன அஞ்சலி நிறைவு பெற்றது.

**விதானையார்:** பண்டிதர் ஐயா மாணவன் செந்தூரன் ஒரு தமிழ்ப்பற்றாளன். சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த அந்த மாணவன்ர குடும்பத்திற்கு செந்தூரன்ர மரணம் பேரிழப்பு. அந்த மாணவன்ர குடும்பத்திற்கு நிதியுதவி உள்ளிட்ட உதவிகளை எங்கட புலம் பெயர் தமிழ் சகோதரர்கள் செய்யவேணும். இதுவிடயத்தில் சமூகப் பொறுப்போட நாங்கள் கொள்வது மிகவும் அவசியம்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் சரி. இன்றைய எங்கட சூழ்நிலையில மாணவன் செந்தூரன் செய்த தியாகத்தை எவரும் குறைத்து மதிப்பிடக் கூடாது. தேர்தல் காலங்களில ஒரு லப்டொப், ஒரு நாளுக்கு ஆயிரம் ரூபா, கொத்து ரொட்டி, போதாக்குறைக்கு குடிவகை என்பவற்றுக்காக தேர்தல் பிரசாரம் செய்து இலாபம் தேடிய ஒரு சில மாணவர்கள் இருக்கின்ற எங்கட மண்ணில மாணவன் செந்தூரன் தியாகியோ இல்லையோ!

**மூப்பர்:** கங்காணி சொல்லுறது சரிதான். எனக்குத் தெரியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில படிக்கிற ஒரு சில மாணவர்கள் லப்டொப் கொம்பியூட்டருக்காக தேர்தல் காலத்தில் செய்த அநியாயங்களை எனக்குத் தெரியும்.



இப்படியான விலை போனவர்கள் இருக்கிற இந்த மண்ணில மாணவன் செந்தூரன் தனித்துவமானவன்; தமிழ் உணர்வு மிக்கவன்; தமிழ்ப்பற்றாளன். இதில எந்த மறுப்புக்கும் இடமில்லை.

**வாத்தியார்:** தமிழ் உணர்வுமிக்க அந்த மாணவனுக்கு பாடசாலை மாணவர்கள் திரண்டு அஞ்சலி செலுத்தியிருக்க வேண்டும். என்ன செய்யிறது. மாணவன் செந்தூரனுக்கு அனுதாபம் தெரிவித்து பாடசாலைகள் நவம்பர் 27ஆம் திகதி மூடப்படும் என்ற அறிவிப்போடு செந்தூரனின் இறுதிச் சடங்கில் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் முறியடிக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல செந்தூரனின் இறுதி ஊர்வலத்தில பாடசாலை மாணவர்களின்ர பாண்ட் வாத்தியமாவது இசைக்கப்பட்டிருக்கலாம் என்ன? செய்யிறது. ஏழை வீட்டுப் பிள்ளைகள் எண்டால் உயர் மட்டத்தின்ர திட்டங்கள் இதுதான்.

**கங்காணி:** அது சரி வாத்தியார், ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் இலங்கைக்கு வந்ததோட யாழ்ப்பாணத்திற்கும் வந்தவரல்லோ. அவற்ற வருகையால தமிழ்மக்களுக்கு ஏதேனும் நன்மை இருக்குமோ?

**வாத்தியார்:** என்ன நன்மை இருக்கப்போகுது. எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா தான் எங்கட பிரச்சினைகளை எடுத்துக் கூறினவராம். அவர் கூறிய கருத்துக்களை ஏற்பதற்கு சமந்தா பவருக்கு விருப்பமில்லை. கொழும்பில தமிழ்த் தலைவர்கள் இலங்கை அரசோட- அமெரிக்க நாட்டோட ஒத்து வருகினம். ஆனால் வடக்கு முதலமைச்சர்தான் கடும்பிடியில நிற்கிறார் என்று சொன்னவாவாம்.

**பண்டிதர்:** இது தெரிந்த விடயம் தானே! கொழும்பு தமிழ் அரசியல் தலைமை அரசாங்கத்தோட ஒத்து ஓட வடக்கின்ர முதல்வர் விக்னேஸ்வரன் ஐயா அதற்குத் தடையாக இருக்கிறார் என்றொரு காட்டாப்பைக் காட்டுவது தானே தமிழ்த் தலைமையின்ர நோக்கம். அதற்கான ஏற்பாடுகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன.

**விதானையார்:** யாழ்ப்பாணத்திற்கு வந்த சமந்தா பவர் ஒஸ்மானியாக் கல்லூரியின் கட்டடத்தைத் திறந்து வைத்தது ஏன்?

**பண்டிதர்:** உலகம் முழுவதிலும் முஸ்லிம் மக்களின்ர தலையில குண்டுகளைப் போடுகிற நாங்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர் என்றொரு காட்டாப்பைக் காட்டுவதற்குத் தான்.

**கங்காணி:** யாழ்ப்பாணத்திற்கு வந்த சமந்தா பவர் எல்லேயுமல்லோ விளையாடியிருக்கிறார்.

**வாத்தியார்:** யாழ்ப்பாணத்தில இப்ப எல்லாம் இயல்பு நிலை ஏற்பட்டு விட்டது. மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எல்லே விளையாடாத குறை ஒன்று தான் என்பதை உலகுக்குக் காட்ட அந்த அம்மா எல்லே விளையாடியிருக்கிறார்.

**மூப்பர்:** அது சரி எல்லே விளையாடுவதன் மூலம் யாழ்ப்பாணத்தில ஒரு இயல்பு நிலை இருக்கிறது. போர்க்குற்றம் தொடர்பில சர்வதேச விசாரணை தேவைப்படாது என்பதைக் காட்டுவதுதான் சமந்தா பவரின்ர நோக்கம். எது எப்படியாக இருந்த போதிலும் எங்கட தமிழ் அரசியல் தலைமைகள் நிதானமாக ஒருமித்த குரலோடு எடுத்துரைத்தால் எல்லாம் சரியாகும். இது என்னடாவென்றால் ஆளுக்கொரு கதை. அப்ப என்னெண்டுதான் உலக நாடுகள் எங்களுக்கு உதவுறது. தமிழர் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஓரணியில் திரண்டு இதுதான் எங்கட முடிவு எண்டால் ஒருத்தரும் எதுவும் செய்யமுடியாது.

இப்படி மூப்பர் சொல்ல அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் லக்ஷ்மன் கதிர்காமர் (கள்)

## கைதிகளை அரசு விடுவித்திருந்தால் செந்தூரன் உயிரோடு இருந்திருப்பான்




தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் தமிழ் அரசியல் தலைமை தோல்வி கண்டுவிட்டதென்றே கூறவேண்டும். தோல்வி என்பதற்குப் பலவாறான வியாக்கியானங்கள், விளக்கங்கள் முன்வைக்கப்படலாம்.

அதில் இலங்கை அரசுகள் ஒருபோதும் தமிழர்களுக்கு நன்மை செய்யப் போவதில்லை என்பதாக இருக்கலாம்.

ஆனால் அந்தக் கருத்து அடிப்படையில் ஏற்புடையதன்று.

ஏனெனில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கியவர்கள் தமிழர்கள். அதேபோல ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான பாராளுமன்ற அரசுக்கும் அடித்தளமிட்டவர்கள் தமிழ் மக்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவை தமிழ்மக்கள் ஆதரிக்கத் தவறியிருந்தால், மைத்திரியின் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதை ஜனாதிபதி மைத்திரியே தனது வாயால் கூறியிருக்கிறார்.

எனவே மிகப்பெரியதொரு ஆபத்தான நிலையில் மைத்திரிபால சிறிசேனவையும் இந்த நாட்டையும் காப்பாற்றியவர்கள் தமிழ்மக்கள் என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகளும் சிங்கள மக்களும் உணர்ந்தாகவேண்டும்.

எனினும் தற்போதைய ஆட்சியும் தமிழ்மக்களை கறிச்சுவைக்கான கறிவேப்பிலையாகவே பயன்படுத்திக் கொள்கிறது. இதற்கான காரணம் என்னவெனில் தமிழ்தலைமையின் உறுதியற்ற தன்மையும் சுயநலம் கொண்ட அரசியல் கொள்கையுமாகும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ்மக்கள் தங்கள் வாக்குகளை வழங்கி ஜனாதிபதியாக்கியதால் சர்வதேச விசாரணை என்பது சாத்தியமற்றுப் போனது.

வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தது போல மைத்திரிபால சிறிசேனவைத் தமிழ்மக்கள் ஆதரித்தமையானது அவர்களின் இராஜதந்திரமற்ற அரசியல் போக்கையே காட்டுகிறது.

உண்மையில் தமிழ்மக்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து மீண்டும் அவரை ஜனாதிபதியாக்கியிருந்தால், சர்வதேச விசாரணை மகிந்தவின் குரல் வளையை நசுக்கி இருக்கும்.

இப்படி அந்தப் பிரதிநிதி கூறிய கருத்து இங்கு கவனிக்கத்தக்கது. தேர்தல் முடிவுக்கு பின்னதாக அந்த வெளிநாட்டுப் பிரதிநிதி கூறிய கருத்தை தேர்தலுக்கு முன்னர் நம்மவர் சிலர் கூறியிருந்த போதிலும் அதற்குக் கொடுக்கப்பட்ட விமர்சனம் வேறுவிதமாக இருந்தது.

ஆக, விழுந்த பாட்டில் குறிவைக்கும் எங்கள் அறியாமைக் கலாசாரமும் அரசியல் இராஜதந்திர நீதியான வெற்றிக்குத் தடைபோட்டு விடுகிறது. நிலைமை இதுவாக இருக்க தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்து அவரை மடக்கிவிட்டனர்.

எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டாம். அந்தப் பதவிக்காகவா 30 ஆண்டுகாலப் போராட்டம் நடத்தினோம். எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நான் பெறுவது விடுதலைப் போரில் மரணித்த மாவீரர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதாக இருக்கும். நாங்கள் உங்களை ஆட்சியில் அமர்த்தினோம்.

எனவே எந்தவித நிபந்தனைகளும் இன்றி எங்கள் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள். தமிழ்மக்களின் வாழ்விடங்களில் இருக்கக்கூடிய படையினரை வெளியேற்றி மீள்குடியமர்வை உறுதிப்படுத்துங்கள். போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை முன்னெடுங்கள். இப்படித்தான் கூறியிருக்கவேண்டும்.




ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் ஆசை கொண்ட இரா.சம்பந்தர் அந்தப் பதவியைப் பெற்றுக் கொண்டதோடு அமைதியடைந்தார்.

இப்போது தமிழ்மக்களின் வாக்குகளால் ஆட்சிப்பீடமேறியவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்தமாட்டோம்.

அவருக்குத் தண்டனை கொடுக்க விடமாட்டோம் என்று கூறிவருகின்றனர்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் உரையாற்றிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மின்சார நாற்கா லியில் இருந்து மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றினேன் என்று கூறியிருந்தார்.

ஆக, தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த மைத்திரி- ரணில் அரசு தமிழ் மக்களைக் கொன்றொழித்த முன்னைய ஆட்சியாளர்களைக் காப்பாற்றும் பணியை கனகச்சிதமாகச் செய்து முடித்திருக்கிறது.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியில் இருந்து காப்பாற்றிய அரசால் தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்புக்கொடுக்க முடியவில்லை என்றால் எப்படியிருக்கிறது நிலைமை.

ஜெனிவாவுக்குச் சென்று இலங்கை அரசைக் காப்பாற்றிய தமிழ்ப்பிரதிநிதிகள் இப்போது சொல்வது என்ன? தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தால் அருமந்த மாணவன் செந்தூரனின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும். ஆக., தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய லக்ஷ்மன் கதிர்காமர்(கள்) தமிழ் இளைஞர்களை மறைமுகமாக அழிக்கும் வேலையைச் செய்வர்.

எதுவாயினும் மாணவன் செந்தூரனின் உயிர்த்தியாகத்தை எவரும் குறைத்து மதிப்பிடலாகாது. இன்று ஓடும் புகையிரத வண்டி முன் பாய்ந்தால் நாளை தமிழ்மக்களுக்குத் துரோகம் செய்த தமிழ் அரசியல்வாதிகள் முன் பாயும் நிலைமையும் உருவாகலாம் என்பதால் தமிழ்மக்களை கொதிநிலையில்; உணர்ச்சி வசப்படக்கூடிய சூழ்நிலையில்; போர்க்காலத்தை மறக்க முடியாதவர்களாக இருக்கின்ற நிலைமையை மாற்ற வேண்டும்.

எனவே கைதிகளின் விடுதலை, மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல விடயங்களில் அரசு நடவடிக்கை எடுக்கத் தவறினால் நிலைமை மிக மோசமாக மாறுவது தவிர்க்கமுடியாததே.



**விதுரன்**




# சிறுவர் அரங்கம்

## டில்லி அரசரை வென்ற கதை



ஒருமுறை டில்லி அரசர், பாபர் தெனாலி ராமனின் திறமையைக் கேட்டு அவனை நேரில் காண விரும்பினார். அவனது திறமையைச் சோதிக்க விரும்பினார். எனவே, தெனாலிராமனை டில்லிக்கு அனுப்புமாறு விஜயநகரத்திற்கு ஓலை அனுப்பினார்.

கிருஷ்ணதேவராயரும் தெனாலிராமனை அழைத்து "இதோ பார்ராமா! இங்கே எப்படியோ உன் திறமையைக் காட்டி எங்களைச் சிரிக்க வைக்கிறாய். ஆனால் , அதுபோல் பாபரிடம் நடக்காது.

உன் திறமை அவரிடமும் பரிசு பெறு வதில் தான் உள்ளது. அவரிடம் நீ பரிசு பெற்று வந்து விட்டால் நானும் உனக்குப் பரிசு தருவேன் உன்னைத் திறமைசாலி என்றும் ஒப்புக்கொள் கிறேன். இல்லையேல் உனக்குத் தண்டனை தப்பாது.தெரிகிறதா!'' என்றுஎச்சரித்துஅனுப்பினார்.

டில்லி வந்து சேர்ந்த தெனாலிராமன்பாபரின் அரண்மனைக்குச் சென்றான். சபையில் தான் செய்யும் அகடவிகடத்திற்கு யாரும் சிரிக்காதது கண்டு திகைத்தான். எவரும்சிரிக்கக்கூடாது என பாபர் முன்னரே கட்டளை இட்டிருப்பார் என யூகித்தான். இந்தச் சூதினை எப்படியும் முறிய டிப்பது என முடிவு செய்து கொண்டான். மறுநாள் முதல் ராமன் அரண்மனைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டான். பாபர், ராமன் சொல்லா மலேயே நின்றுவிட்டானே சரியான தோல்விதான் அவனுக்கு என மகிழ்ந்தார்.

ஒருநாள் பாபர் தன் மந்திரியுடன் உலாவச் சென்றார். வழக்கம்போல அரண்மனைச்சேவகன் ஒருவன் சில பொன்முடிப்புகளைச் சுமந்து வந்தான். மன்னர் குதிரையை மெதுவாக நடத்திச் சென்று கொண்டிருந்தார். பாதை ஓரத்தில் முஸ்லிம்கிழவர் ஒருவர் தள்ளாடியபடியே ஏதோ செடிகளை நட்டுக்கொண்டிருப்பதைப்பார்த்தார். அவரருகே சென்று தன் குதிரையை நிறுத்தினார். "பெரியவரே! இந்தத் தள்ளாத வயதில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?''

"நல்ல மாங்கன்றுகளை நட்டுக் கொண்டி ருக்கிறேன்.'' இதை அவர் மிகவும் சிரமப் பட்டுக் கூறினார்.

"ஏனய்யா! இந்தத் தள்ளாத வயதில் இது உமக்கு ஏன் இந்தத் தொல்லை! அத்துடன் இது காய்த்துப் பின் பழுத்து அந்தப் பழத்தை நீர் உண்ணப் போகிறீரா?'' என்று சிரித்தார்.

"அரசே! நாம் உண்ணும் மாங்கனிகள் நம் முன்னோர் நட்டதுதானே! அவர்கள் மரங்களை நட்டதால் தானே நாம் இன்று மாங்கனிகளை உண்ணுகிறோம்! அவர்கள் நடாமல் இருந்திருந் தால் நமக்கு ஏது மாம்பழங்கள்?

எனவே வரும் தலைமுறையினர் உண்ணவே இம்மரங்களை நான் நடுகிறேன்''

"ஆஹா! சரியான பதில் நல்லவிளக்கம் மிக்க மகிழ்ச்சி!'' உடனே மந்திரியார் ஒரு பொன் முடிப்பைப் பரிசாக அளித்தார். அதைப் பெற்றுக் கொண்ட கிழவர் சிரித்தார். "அரசே! அல்லா பெரியவர்.

எல்லோருக்கும் மரம் பழுத்த பிறகே பலன் தரும். ஆனால், பாபரின் ஆட்சியில் மரம் நட்டவுடனே பலன் கொடுத்து விட்டதே!''

பாபர் மனம் பெரிதும் மகிழ்ந்தது. "ஆகா! சரியாகச் சொன்னீர்கள் பெரியவரே!'' என்றபடியே மந்திரியைப் பார்க்க அவர் இன்னொரு பொன் முடிப்பை அளித்தார். அதையும் பெற்றுக்கொண்ட பெரியவர், "அரசே! இந்த மாங்கனிகள் பழுத்துப் பின் பலனளிப்பது ஆண்டுக்கு ஒரு முறைதான். ஆனால் , தங்களின் மேலான குணத்தினால் நட்டவுடனே இருமுறை எனக்குப் பலனளித்து விட்டது. என்னே அல்லாவின் கருணை?'' என்றார். "நன்றாகச் சொன் னீர்கள் பெரியவரே!'' என்று கூறியவர் மீண்டும் ஒரு பொன் முடிப்பையும் அளித்தார். பின் மந்திரியைப் பார்த்து "மந்திரியாரே! சீக்கிரம் இங்கிருந்து சென்று விட வேண்டும். இல்லையேல் சாதுர்யமாகப் பேசி நம் பொக்கிஷத்தையே காலிசெய்து விடுவார் இந்தப் பெரியவர்.'' என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் பாபர்.

"சற்று நிற்க முடியுமா அரசே?'' என்று சொன்ன பெரியவர் தன் தாடி மீசையைக் களைந்து விட்டுத் தெனாலிராமனாக நின்றார். பாபர் திகைத்தார். சற்று நேரத்திற்குள் மூன்று பரிசுகளைப் பெற்றவன் தெனாலிராமனா?

தெனாலிராமன் பணிவுடன் கூறினான். "அரசே, மன்னிக்கவேண்டும். எங்கள் மன்னர் கிருஷ்ண தேவராயர் தங்களிடம் நான் பரிசு பெற்று வர வேண்டும் எனக் கட்டளையிட்டு அனுப்பினார். இன்று அவரது கட்டளைப் படியே தங்களிடம் பரிசுகளைப் பெற்று விட்டேன். இனி ஊர் திரும்பத் தாங்கள் அனுமதி அளிக்க வேண்டும்.''

"தெனாலிராமா! உண்மையிலேயே நீ திறமை சாலிதான். உங்கள் மன்னருக்கு என் வாழ்த்துக் களையும் தெரிவி. நாளைக்கு அரச மரியாதை யையும் பெற்றுக் கொண்டு விஜயநகரம் செல்ல லாம்.'' என்றார் அரசர். பின் மகிழ்ச்சியுடன் அரண் மனைக்குத் திரும்பினார்..

வெற்றியுடன் ஊருக்கு வந்து சேர்ந்த தெனாலி ராமனைப் பார்த்த கிருஷ்ணதேவராயர் நடந்தவை களைக் கேட்டறிந்தார். தான் சொன்னபடியே தெனாலி ராமனுக்குப் பல பரிசுகளையும் கொடுத் தார். தன் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றிய ராமனை மன்னரும் மக்களும் போற்றிப் புகழ்ந்தனர்.

## வியாழனும் மனிதனும்



பூமியின் இயற்கை வளங்களை விழுங்கி ஏப்பம் விட்ட மனிதனின் பார்வை இப்போது பூமியைச் சுற்றி இருக்கும் கிரகங்களின் மீது திரும்பி இருக்கிறது. உலகில் பூமியைப் போலவே வாழத் தகுதியான கிரகங்கள் ஏதாவது இருக் கிறதா எனத் தன் அறிவியல் மூளையால் ஆராயத் தொடங்கி பல ஆண்டுகள் ஆகின்றன.

அதில் குறிப்பிடத்தக்க இலக்குகளை அடை யவும் தவறவில்லை. தற்போது சனி மற்றும் வியாழன் ஆகிய கிரகங்களைச் சுற்றும் குளிர்ச்சி யான சந்திரன்களில் மனிதன் வாழ்வதற்கான சூழல் இருக்கிறதா என்பது குறித்து விஞ்ஞானி கள் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து இருக்கி றார்கள்.

ரோமானியக் கடவுளான ஜூபிடரின் பெயரால் அழைக்கப்படும் வியாழன் கிரகம், சூரிய குடும் பத்திலேயே மிகப்பெரிய கிரகமாகும். வியாழன், சூரியனிலிருந்து ஐந்தாவதாக உள்ளது. இது 88,736-மைல் அதாவது 1,42,800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. வியாழனின் சுற்றளவு பூமியைப் போல 11 மடங்கு அதிகம். வியாழன் கிரகத்திற்கு உள்ள நிலவுகளில் இதுவரை 28 கண்டறியப்பட்டுள்ளன. 1610ம் ஆண்டில் நான்கு நிலவுகளை கலிலியோ கண்டு பிடித்தார்.

வியாழன் கிரகம் முழுவதும் வாயுக்களால் நிரம்பி உள்ளது. இந்த வாயுக்களின் பிரதி பலிப்பால் சூரியன், நிலா, வெள்ளி ஆகிய வற்றுக்கு அடுத்த படியாக இது பிரகாசமாகத் தெரிகிறது. இந்த அதிகப்படியான வாயுக்களால் இக்கிரகத்தில் கடுமையான அழுத்த நிலை காணப்படுகிறது. ஆனால், ஹைட்ரஜன், ஹீலியம் போன்ற கனமற்ற வாயுக்கள் நிரம்பி யிருப் பதால் பூமியை விட வியாழன் அடர்த்தி குறை வானதாக உள்ளது.


கடந்த 1995ம் ஆண்டு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா அனுப்பிய கலிலியோ விண்கலத்தில் இருந்து சென்ற ஆய்வுக்கலம், வியாழன் கிரகத்தின் உள்பகுதி படங்களை எடுத்து அனுப்பியது. வியாழன் கிரகத்தில் நிலவும் கடுமை யான அழுத்தத்தால் நசுக்கப்பட்ட ஆய்வுக் கலத்தால் அங்கு ஒரு மணிநேரமே தாக்குப்பிடிக்க முடிந்தது. ஆனால் அதற்குள் அக்கலம் பல முக்கியமான தகவல்களை பூமிக்கு அனுப்பி விட்டது.

பூமியின் புவியீர்ப்பு விசையைக் காட்டிலும் சந்திரனின் ஈர்ப்புவிசை ஆறு மடங்கு குறைவு. பூமியில் ஈர்ப்பு விசை இருப்பதால்தான் அந்த விசை காற்று மண்டலத்தை இழுத்துப்பிடித்து வைத்து இருக்கிறது. அத்தகைய விசை சந்திரனுக்கு இல்லாததால் அங்கே காற்று இல்லை. சந்திர னோடு ஒப்பிடும்போது செவ்வா யின் ஈர்ப்பு விசை கொஞ்சம் பரவாயில்லை. பூமியின் ஈர்ப்பு விசை யில் பாதியளவு உள்ளது. இதன் காரணமாக அங்கே கொஞ்சம் காற்று உள்ளது. ஆகவே தான் அங்கு உயிர்கள் வாழ வாய்ப்பிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக் கின்றனர். ஆனாலும் விண்வெளியில் தொழிற்படும் காஸ்மிக் கதிர் வீச்சு மனித மூளையைப் பாதிக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருப் பதால் இதிலிருந்து பாதுகாக்கவல்ல விண் கலம் தேவை என தற்பொழுது ஊகிக்கப் பட்டுள்ளது.

வியாழன் கிரகத்தின் ஈர்ப்பு விசை பூமியைக் காட்டிலும் 350 மடங்கு அதிகம். இந்த ஈர்ப்பு விசைக்கு உட்பட்டு நாள்தோறும் விண்கற்கள் வியாழனில் விழுந்து கொண்டேயிருக்கின்றன. வால்நட்சத்திரங்களும் அடிக்கடி வந்து மோது வது உண்டு. இந்த அபாயகரமான ஈர்ப்பு விசையால் வியாழனில் மனிதன் உயிர் வாழ இயலாது என்கிற கருத்தும் நிலவுகிறது.

ஆனால், வியாழனின் நிலவுகளில் இத்த கைய அபாயம் இல்லை என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இதேபோல சனி கிரகத்திலும் ஒரு நிலவை 'வாழத் தகுந்த சூழல் இருக்கும் இடம்' எனக் கருதுகிறார்கள். சனியின் மிகப் பெரிய நிலவான 'டைடான்' அது! வியாழனின் நிலவுகளில் கடல்போன்ற சூழல் உள்ள *யுரோபா*, *கனிமெட்*, மற்றும் *கலிஸ்டோ* ஆகிய வையே அவை!


ஐரோப்பிய விண்வெளிக் கழகம், ஏர்பஸ் நிறுவனத்துடன் இணைந்து இந்த நான்கு நிலவு களையும் ஆராய்ச்சி செய்ய உள்ளது. வியாழ னின் பனிக்கட்டி நிலவுகள் ஆராய்ச்சி எனும் பொருள்படும்விதமாக இதற்கு 'ஜூஸ்' (Juice - Jupiter Icy Moons Explorer) என பெயர் சூட்டப்பட்டுள்ளது. வரும் 2022ம் ஆண்டு இந்த ஆய்வுக்கான விண்கலம் செல்லும். இது சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கு நான்கு நிலவுகளை யும் ஆராய்ச்சி செய்யும். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதுபோல- அருமையான பூமியை அழகாகவும் அமைதியாகவும் வைத்திருக்க முடியாமல்- யுத்தஉலகமாக்கிவிட்ட மனித னுக்கு வியாழனின் நிலவு தேவைப்படுகிறதாம்..!!!



வியாழனைச் சுற்றி காணப்படக் கூடிய 63 நிலவுகளின் அளவுப் பிரமாணம்




வியாழனைச் சுற்றி பல நிலவுகள். அவற்றில் அருகிலுள்ள பெரிய நிலவுகளுடன் அது.






# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**றெசிலிங் பற்றி கொஞ்சம் சொல்லுங்க?**

**மாவீரர் தினத்தை கொண்டாட மகிந்த மறுப்பது ஏன்?**

**நடிகர் விக்ரமுக்கு திருமணம் ஆகிவிட்டதா?**

டெரி — யாழ்ப்பாணம்

**சம்சாரியான நீங்கள் சந்நியாசி போல பதில் எழுதுகிறீர்?**

தம்பி டெரி சீனியின் சுவை எப்படி இருக்கும் எனக் கேட்டால் இனிப்பாக இருக்கும். சுப்பர், அந்தமாதிரி, சொல்லி வேலையில்லை இப்படி எல்லாம் சொல்லலாமே தவிர அதன் சுவையை உணர்த்திவிட முடியாது. சம்சாரியத்தை அனுபவித்துப்பாரும் அதன்பின் சந்நியாசிபோல பதில், ஏன் என்பது புரியும்.

பலேந்திரன் — கோண்டாவில்

**உங்கள் வருங்கால இலட்சியம் என்ன?**

அரசியலுக்கு வந்து ஆட்டையைப் போடும் எண்ணம் எதுவும் சத்தியமாக இல்லை.

தனுஸ் — வயாவிளான்

**றெசிலிங் பற்றி கொஞ்சம் சொல்லுங்க?**

ஆட்டம் ஆரம்பிக்க முன்னரே வெல்லுபவரை தெரிவு செய்துவிட்டு விளையாட ஆரம்பமாகும் ஒரே ஒரு விளையாட்டு இது போலத் தெரிகிறது.

அகிலன், குலம்

**பெண்கள் ஆண்களை அமத்துவது எதற்காக ஐயா?**

அமத்தினால் அமர்ந்துவிட்டுப் போக வேண்டியது தானே. அதைவிட்டுவிட்டு அமத்துவது எதற்காக என்று கேள்வி வேறு. அமந்து பாரும் அதன் அருமை புரியும்.

கௌரீஸ் — கரவெட்டி

**வரவு செலவுத்திட்டம் எப்படி?**

அதைப்பற்றி தமிழன் கவலைப்படமாட்டானே. ஒரு கிலோ அரிசி ஆயிரம் ரூபாய் விற்றாலும் ஹலோ என்றால் பத்து கிலோவுக்கு காசு வருமே.

வரவு செலவுத் திட்ட அறிக்கை யில் அப்பமும் தேநீரும் எவ்வளவு முன்னி லைப்படுத்தப் பட்டிருக்கிறதென்றால் அது அவர்களின் பாரம் பரியத்தில் பின்னிப் பிணைந் திருப்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எதற்கும் சடுதியென பழக்கப்படும் நாம் பெரும்பான்மையிடமிருந்து நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்.

ரத்னகுரு — அல்வாய்

**மாவீரர் தினத்தை கொண்டாட மகிந்த மறுப்பது ஏன்?**

சிங்களவர் மத்தியில் தன்னை மாவீரனாய்க் காட்டிக்கொள்ள.

கிருஷா — வரணி

**சில கோவில்களில் நடைபெறும் மிருக பலியிடலைப் பற்றி?**

கடவுளுக்கு மிருகங்களை நேந்துவிடும் என தருமை சகோதரர்களே! அடுத்தவருட வேள்விக்கு உங்கள் பிள்ளைகளை நேந்து கோவிலில் வைத்து வெட்டிவிடுங்கள் பார்க்கலாம். வாயில்லா ஜீவன் என்றால் என்னவும் செய்யலாம் எனும் சிந்தனை, வீட்டில் செல்லமாக வளர்க்கப்பட்ட மிருகங்களை வதை செய்வதில் முடிந்துவிடுகிறது.

சோபி — கொக்குவில்

**அரசியல் என்பது இராஜதந்திரமா?**

இராஜதந்திரம் என்பது கல் கிடைக்கும்வரை நாயுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுதான். இதை எம் அரசியல்வாதிகள் புரிந்து கொண்டு எதிரி கல் எடுக்க முன்னம் கவ்விப் பிடிப்பது நன்று, மிக நன்று. பிடிப்பார்களா இல்லை கல்லடி படுவார்களா?



முழுக்க முழுக்க சுடுகாட்டிலேயே படம் எடுத்திருக்காங்களாமே... படத்துக்கு என்ன பேரு வெச்சிருக்காங்க? எரிக்கவிடலாமா..?

*அன்பு வாசகர்களே!*

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS)**

**021 567 1532**

வேல்நந்தன் — புலோலி

**வேதாளமா, புலியா என அடிபடும் எம் இளைஞர்கள் பற்றி?**

ஐயா தம்பிகளா!
அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி புகையிரதத்தின் முன் பாய்ந்து உயிர்த் தியாகம் செய்கிறான் ஒரு தியாகி. நீங்களோ புலிக்குப் பசுப்பால் ஊற்றி வேதாளத்துக்கு வேண்டுதல் செய்கிறீர்கள். உங்களைத் திருந்தச் சொல்லி சொல்லவில்லை; ராசாக்களே உணர்ந்து கொள்ளுங்கள் அது போதும்.

சமீதரன் — நயினாதீவு

**நடிகர் விக்ரமுக்கு திருமணம் ஆகிவிட்டதா?**

அடப்பாவி 17, ஏப்ரல் 1965இல் பிறந்த விக்கிரமுக்கு இப்ப வயது 50 ஆகிட்டு அவரோட அன்பு மனைவி பெயர் சைலஜா, உன்னோட சைஸ்சில ஒரு மகனும் கல்யாண வயசில ஒரு பொண்ணும் இருக்கப்பா...

மயூரதன் — கந்தரோடை

**வியா! லவ் பெயிலியர் ஆனா தாடி வளர்க்கலாமா?**

லவ் பெயிலியர் ஆனா தாடி மட்டும் வளர்த்தா போதும். அதே லவ் சக்சஸ் ஆனா பொண்டாட்டி, புள்ளைகள சேர்த்து வளர்க்கனும். யோசிச்சு எது வேணுமெண்டு முடிவெடுங்க...

சிவகரன் — பருத்தித்துறை

**செக்ஸ் என்றால் என்ன?**

அடப்பாவி லிங்கம் கூல்பாரில றோலுக்கு சோஸ் கேட்ட மாதிரிக் கேக்கிறியே...

தர்சனன் — நெல்லியடி

**புலியின் வசூல் எவ்வளவு?**

வீரம் நிறைந்த புலியின் வரலாறு பற்றிப் படிக்க வேண்டிய நீ தோல்வியடைந்த புலியின் வசூல் பற்றிக் கேட்கிறாயே?

கோபி — மந்திகை

**அந்தக்காலத்திற்கும் இந்தக்காலத்திற்கும் என்ன வித்தியாசம்?**

தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சேர்ந்து ஆடைகளும் மேல் நோக்கிச் சென்றன. பாவம் எம் கலாசாரமோ தரையில் கிடக்கிறது தூக்கிவிட யாருமின்றி அனாதரவாக.



# கவிதைக் கலசம்

## மழையும் வெயிலும்

போனமாதம் மொட்டை
மாடியில் உடுப்பு காயப்போட்ட
மனைவி வியர்க்க விறுவிறுக்க
வந்து சொன்னாள்
என்னை மாதிரியே சூரியன்
எந்த நேரமும் எரிவதாக!
சூரியனைச் சுட யாருமில்லையே
என்று வேதனைப்பட்டாள்!
என்னையும் சேர்த்து சொன்னாளோ
தெரியாது!
மழை பெய்தால் நன்றாயிருக்குமே
என்று பெருமூச்சு விட்டாள்!
இன்று காலையில் மொட்டை
மாடியில் உடுப்பு காயப்போட
போனவள் சொன்னாள்
இந்த மழைக்கு வேறை
வேலையில்லை
என்னை மாதிரியே
எந்த நேரமும் சலசலப்பதாக!
மழையை மடக்க
யாருமில்லையே என்றாள்!
என்னையும் சேர்த்து சொன்னாளோ
தெரியாது!
சூரியன் வந்தால் எவ்வளவு
சுகமாயிருக்குமென்றாள்
அவளின் தேவைக்கேற்ற மாதிரி
சூரியனாயும் மழையாயும் இருப்பதிலேயே
என் வாழ்நாள் போனாலும் அதிலும்
ஒரு சுகம் இருக்கத்தான் செய்யுது!

**பத்மானந்தன்**

## நாளைய தீர்ப்பு

விடியல்கள் விநாடிகளாய்
கஷ்டப்பட்டுக் கழிகின்றன
நாளையும் விடியுமா என்று
இங்கு விடுகதைகளுக்கு
விடையுமில்லை- தொடர்
கதைகளுக்கு முடிவுமில்லை
சிறுகதைகளுக்கு
தொடக்கமுமில்லை
பிடுங்கப்படும் மொட்டும்
நசிக்கப்படும் சருகுகளும்
தீமூழிக்கப்படும் சிட்டுக்களும்
விடியல் இல்லா விட்டில்களா?
தெருவோரத் தொல்லைகளும்
பாதைவழி சேஷ்டைகளும்
எதிர்காலக் கனவுகளைக்கூட
கலைத்துவிட்டன
துஷ்டர்களிடம் பலியாகி
வாழ்க்கையும் குமுறி அழுகிறது
எம்மையும் காப்பாற்றும்
தீர்ப்புக்களுக்காய்
விடியல் நாளையும் விடியுமா?

**நிஷானா சுகுணதாஸ்**
**யாழ்ப்பாணம்**



## இமயம் தொட

செந்தூரா
உன் தியாகம் தனை
எண்ணும்போது
மெய்சிலிர்த்து விடுகிறது
மண் மீட்புக்காய்
போரிட்ட மறவருடன்
நீயும் இணைந்திட்டாய்
இனி உன் நாமம்
அழியாது அகலாது
விலை போகா தமிழன்
நிலை கொள்ள- நீ
தீயடன் சங்கமமாகினாயே!

மாவை. நா.கஜேந்திரன்

## விறகு

தாங்க முடியாத பழுவால்
என்மீது தவறி விழுந்து விட்டான்
தூக்கென்று பக்கத்தில் ஒருவன்
துணைக்கு வந்து நின்றான்
ஏனண்ணை என்றேன்
இன்று சாப்பிடவில்லை என்றான்
காரணம் புரியாது மீண்டும் கேட்டேன்
அவன் கண்களில் கண்டேன் கண்ணீரை
இடம்பெயர்ந்த நாள் முதல்
இதுதான் எனது தொழில்
நிறைவான உணவும் நீரும்
நிம்மதியும் கண்டு பல நாளானது
வீழ்ந்த மரத்துண்டுகள் எம்
வாழ்வுக்கு உதவுகின்றன
என்றுரைத்து எழுந்து நின்றான்
என்னருகே ஏழை அவன்...

**மயிலை**
**தேவகி மசா**



# மௌனத்தின் தேடல்- 276

## முயன்று பார்

முடியாது என்று ஏதுமில்லை
முயன்று பார்
விடியல் உன் எதிரில்!
ஆண் என்றும்
பெண் என்றும் பேதமில்லை
சாகசம்- சாதனைக்கு
சாதிக்க வேண்டுமென்று
மனம் மட்டும்
எடுத்துவிட்டால் எண்ணம்
வெற்றி உன் கைகளில்
கனிவது திண்ணம்

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## ஏன் இந்த (கொலை) வெறி?

சாதனை நிலை நாட்டவெடுத்த
சாகச விளையாட்டா?
வேதனை தீர்த்திட
பிழைப்பிற்கெடுத்த
வேடிக்கை விளையாட்டா?
தற்பாதுகாத்திடவென
தாவிப்பாய்ந்து செல்லும் பயிற்சியா?
அற்பனே! உயிரின் பெறுமதி தெரியாதா?
அசந்தால் அதளபாதாளம்
ஏன் இந்த வெறி?

பொ.புனிதன்
வரியப்புலம்

## சவால்

மனிதா!
நீ சாதிக்கப் பிறந்தவன்
சிறு துரும்புக் கோழையாய்
உன்னை எண்ணாமல்
வரும் தடைகளைத் தாண்டி
மலைகளை சிறு துரும்பாக எண்ணி
பாயும் புலி போல் கடந்து சென்று
வரும் எதிர்ப்பிலே வாழ்க்கையை
வாழக்கற்றுக்கொள்
ஈர்க்குச்சியாய் இல்லாமல்
தீக்குச்சியாய்..

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்

## தன்னம்பிக்கை

தந்தையின் வழிகாட்டல்
குழி தாண்டி வாழ
இல்லாதான் வாழ்விலும்
பயமே இல்லை
வாழ்வின் வெற்றிக்கு
கல்லாத தந்தையின்
சொல்லும் மந்திரமல்லவா
அன்பின் உன்னத சக்தியால்
உலகை வென்று விடு

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கைகொடுத்துதவு

செய்வதறியாது உதவிக்கு
மெய்வருந்தி அழைப்பவனுக்கு
கைகொடுத்துதவுவதே பண்பு
செய்ந்நன்றி கொன்றவனும்
பொய்பேசிக் கெடுப்பவனும்
தெய்வத்தால் தண்டிக்கப்படுவான்
நீ பயப்படாது துணிந்து தாவு
தடையெதுவரினும் தகர்த்து
தயங்காது தாண்டிச் செல்
துணிவும்
தன்னம்பிக்கையுமிருந்தால்
தொடலாம் இமயத்தையும்

துரை
தென்மட்டுவில்

## நம்பிக்கை

வெந்து மனம் நொந்து
வந்த துயர் போதுமடா
முடமாய் நீ அடங்கிடல்
தொடராய் வலி நீளுமடா
அச்சுறுத்தல் அநீதி என்றுணர்ந்து
அச்சமே இல்லையென
நீயெழுந்து
தடைதனைக் கடந்திட
முயன்று பார்
தரணியில் உனக்காய்
கைகொடுக்க
காத்திருக்கும் உறவுகளும்
வாழ்த்துரைக்கும் மனம் மகிழ்ந்து

சாந்தையூர் வினிஸ்
பண்டத்தரிப்பு

## உயிர் பாதுகாப்பு

என் உயிர் நீ என இருக்கையில்
என் கையில் உன் உயிர்!
என் கையில் உன் கை கொடு!
என்று சொல்லி கை நீட்டி
உயிர் ஆபத்து சாகசத்தை
உயிர் பாதுகாப்பு
சாதனையின் வெற்றி


சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## நட்பு

கை கொடுக்கத் தோழனிருந்தால்
கடந்திடலாம் கடலையே
தோழமை எனும் தோணியிலே
பயணிக்கும் தோழர்களே
தோல்வி தனை மறந்து
வெற்றியெனும்
ஏணிதனில் தினந்தோறும் ஏறிடலாம்

ரி.விஜிதா
மயிலிட்டி

# மௌனத்தின் தேடல் -277




**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 02.12.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# ஈழக்கொள்கையை ஒருபோதும் கைவிடோம்

## திருமா பளீர்...



"தமிழ்நாட்டில் மாற்று அணியைக் கட்டமைக்கவேண்டியது வரலாற்றுத் தேவை. அதற்கு இதுவே சரியான தருணம். தலித்கள், பழங்குடியினர், சிறுபான்மையினர் போன்றோர் ஆட்சி அதிகாரத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக இந்த அணி இணைய வேண்டும் என விரும்பினேன். திராவிடக் கட்சிகளுக்கு மாற்றான இந்தக் கருத்து விதையை நாங்கள்தான் விதைத்தோம்" நம்பிக்கையாகப் பேசுகிறார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன். வைகோ மற்றும் இடதுசாரிகளை உள்ளடக்கிய "மக்கள் நலக் கூட்டணி'யை, எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலுக்கான கூட்டணியாக உறுதிப்படுத்தும் வேலைகளில் மும்முரமாக இருக்கிறார்.

**மக்கள் நலக் கூட்டணியின் திட்ட அறிக்கையில், 'அணு உலை எதிர்ப்பு', 'தனி ஈழம்' போன்ற வார்த்தைகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. நீங்களும் வைகோவும் பிரதானமாகப் போராடுவதே இந்த விவகாரங்களில்தான். ஏன் இந்த சமரசம்?**

"எதிரிகளோடுதான் சமரசம் செய்துகொள்ளக் கூடாது. மகிந்த ராஜபக்ஷவோடு சமரசம் செய்தால்தான் துரோகம். பொதுப் பிரச்சினைகளுக்காக தோழமை சக்திகளோடு இணைந்து பணியாற்றுவது என்ற அடிப்படையில், முரண்பாடு உள்ள சில விடயங்களைத் தவிர்த்திருக்கிறோம். இது விட்டுக் கொடுத்தல்தான்; சமரசம் அல்ல."

**சரி, நாளையே "ஈழம் ஆதரவு', "அணு உலைஎதிர்ப்பு' ஆகிய போராட்டங்களை நடத்தும்போது கூட்டணிக்குள் பிணக்கு வராதா?**

"மக்கள் பிரச்சினைகளில் கட்சியின் கொள்கைக்கு ஏற்ப தனித்தனியே போராட இந்தக் கூட்டணிக்குள் இடம் உண்டு. தனி ஈழம் உட்பட எங்கள் கட்சிக்கான கொள்கை நிலைப்பாடுகளைக் கூட்டு இயக்கத்தின் களங்களில் பேசுவது இல்லை என முடிவெடுத்திருக்கிறோம். அதேபோல உடன்பாடான விடயங்களைப் பேசுவது எனவும் முடிவெடுத்திருக்கிறோம்.

**மக்கள் நலக் கூட்டணியின் திட்ட அறிக்கை, கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை போலவேதான் உள்ளது. இந்தக் கூட்டணி இடதுசாரிகளின் ஆதிக்கத்தில இருப்பதாக எடுத்துக் கொள்ளலாமா?**

"இது தவறான புரிதல். குறைந்த பட்ச செயற்றிட்ட அறிக்கை வெளியிட வேண்டும் எனச் சொன்னதே நான்தான். இதைத் தயாரிப்பதற்கான ஆலோசனையையும் வழங்கினேன். சி.பி.ஐ., சி.பி.எம் கட்சிகள் கொடுத்த அறிக்கை விபரங்களில் முரண்பாடான விடயங்களை மட்டும் நீக்கிவிட்டு, உடன்பாடான விடயங்களை மட்டும் எடுத்துக்கொண்டோம்.

குறைந்தபட்ச செயற்றிட்டத்தில் சாதிய முரண்பாடு, ஈழத் தமிழர் பிரச்சினை, அணுசக்தி விவகாரம் ஆகிய மூன்றும் மிக முக்கியமானவை. இந்த மூன்றிலும் எங்களுக்கும் அவர்களுக்கும் மாற்றுக் கருத்தும், அணுகு முறையில் வேறுபாடும் இருக்கின்றன. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை இன்னும் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும், ஆணவக் கொலைகள் முற்றிலுமாகத் தடுக்கப்பட வேண்டும் என்பனவற்றில் எங்களுடன் இடதுசாரிகள் முழுமையாக ஒன்றுபடுகிறார்கள். ஆனால், சாதி வன்கொடுமைகளுக்கு எதிராக பா.ம.கவுடன் நாங்கள் நேரடியாக மோதுவதைப் போல அவர்களால் இயலாது. அப்படி நாங்கள் எதிர்பார்க்கவும்இல்லை. அதேநேரம், பா.ஜ.க மதவாத சக்தி, பா.ம.க சாதியவாத சக்தி என்ற அடிப்படையில் பா.ம.க புறக்கணிக்கப்பட வேண்டிய கட்சி என்ற முடிவை கூட்டணிக்குள் முன்வைத்தபோது, அதை இடதுசாரிகள் ஏற்றுக் கொண்டார்கள். ஈழப் பிரச்சினையில் "சர்வதேச நீதிபதிகள் விசாரணை நடைபெற வேண்டும்' என்றோம். கம்யூனிஸ்ட்களோ, "இலங்கையின் இறையாண்மையில் தலையிட வேண்டாம்' என்கிறார்கள். பேச்சுவார்த்தையின் இறுதியில் "சர்வதேச நீதிபதிகள் விசாரணை வேண்டும்' என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே, இடதுசாரிகள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதில்உண்மை இல்லை."

**"அ.தி.மு.கவை வீழ்த்த எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார்' என்கிறார் விஜயகாந்த். உங்கள் அணிக்கு அவர் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா?**

"அவர் பேசும் பேச்சுக்கள், அறிக்கைகளை வைத்து ஒரு முடிவுக்கு வரமுடியாது. பா.ம.கவும் ம.தி.மு.கவும் தங்களுக்கு காலம் வழங்கிய வாய்ப்பை எப்படி நழுவவிட்டார்களோ, அதைப் போலவே "திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக விஜயகாந்த் வருவார்' என்ற மக்களின்எதிர்பார்ப்பை நிறைவேற்ற விஜயகாந்தும் தவறிவிட்டார். அவர் செய்த மிகப் பெரிய வரலாற்றுப் பிழை, அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்தது. இது பத்தோடு பதினொன்று என்பதுபோல் ஆகிவிட்டது. விஜயகாந்த் குறித்த மக்கள் எதிர்பார்ப்பின் வீரியம் குறைந்து போனதாகத்தான் நினைக்கிறேன். தனது பத்து ஆண்டுகால அரசியலில், தன் மீதான நம்பிக்கையை அவர் நிலைநாட்டவில்லை. இந்தத் தேர்தலிலும் தி.மு.க., அ.தி.மு.கவோடு அவர் கூட்டணிவைத்தால், தே.மு.தி.கவின் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்பது மட்டும் உறுதி.

**விஜயகாந்த் செல்வாக்கு சரிந்துவிட்டது என்கிறீர்களா?**

"அப்படிச் சொல்லவில்லை. இமேஜ் என்பது வேறு. செல்வாக்கு என்பது வேறு. வாக்கு வங்கியை வைத்து மட்டும் இதை மதிப்பிட முடியாது. தேர்தல் அரசியலில் தொண்டர்களும், வாக்களிக்கும் பொதுமக்களும் வேறு, வேறானவர்கள். விடுதலைச் சிறுத்தைகள் 10 தொகுதிகளில்தான் போட்டியிடுகிறது என்றால், ஏனைய தொகுதிகளில் எங்களுக்கு வாக்கு வங்கி இல்லை என அர்த்தமா? 234 தொகுதிகளில் சராசரியாக 5 ஆயிரம் வாக்கு என்றாலும் அது எங்கள் கணக்கில் வராது. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு இமேஜ் இருக்கிறது. விஜயகாந்த் ஒரு மாற்று சக்தி என மக்கள் நினைத்தார்கள். இப்போது மக்கள் அப்படி நினைக்கவில்லை. அவர் மக்கள் நலக் கூட்டணிக்கு வந்தால், அத்தகைய ஒரு மாற்று சக்தியாக இந்தக் கூட்டணி இருக்கும் தமிழ்நாடு அரசியலில் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும்.

**அப்படியே விஜயகாந்த் வந்தாலும் அவரை முதலமைச்சர் வேட்பாளராக அறிவிப்பீர்களா?**

"அது, கூட்டணிக் கட்சித் தலைவர்கள் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு."

**"மக்கள் நலக்கூட்டணிபெறும் வாக்குகள், அ.தி.மு.கவின் வெற்றியை உறுதிப்படுத்தத்தான் உதவும்' என்ற பேச்சு இருக்கிறதே?**

"இதை எங்களால் யூகிக்க முடிகிறது. நாங்கள் வெற்றிபெற முடியாமல், வாக்குகளைப் பிரிக்கும் சக்தியாக மட்டும் இருந்தால் அது அ.தி.மு.கவின் வெற்றி வாய்ப்புக்கு வழிவகுக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அதற்காக மாற்று சக்திக்கான முயற்சியைச் செய்யாமலே இருக்க முடியுமா? இளைய தலைமுறையினர் மத்தியில், "தமிழ் நாட்டில் வேறு தலைவர்களே கிடையாதா... புதிய அரசியல் தலைமைகள் உருவாகாதா?' என்ற எதிர்பார்ப்புகள் எழுந்திருக்கின்றன. அவர்கள் தங்கள் துயரங்களைப் போக்கவும், நம்பிக்கையான எதிர்காலம் நோக்கி அழைத்துச் செல்லவும் நல்ல தலைமைகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள், மக்கள் நலக் கூட்டணியை வெற்றிபெற வைக்கலாம் என ஏன் நினைக்கக் கூடாது? அப்படி ஒரு வாய்ப்பை உருவாக்கித் தராமல், மக்களின் எதிர்பார்ப்பை எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?

**சரி... தி.மு.க கூட்டணியில் இருந்து நீங்கள் விலகினீர்களா... விலக்கப்பட்டீர்களா?**

"அவர்கள் எங்களை விலக்கவும் இல்லை நாங்கள் விலகி வரவும் இல்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் எது சரி எனப்படுகிறதோ, அதைச் செய்கிறோம். அவர்களோடு எந்த முரணபாடும் இல்லை. கலைஞரோடும் ஸ்டாலினோடும் இதயபூர்வமான உறவு இப்போதும் தொடர்கிறது. காலச்சூழலுக்குத் தகுந்த மாதிரி முடிவு எடுக்கிறோம். அவர்களோடு சண்டை போட்டுக் கொண்டு வெளியே வரவில்லை."

**எப்படிப் பார்த்தாலும் உங்களை சாதியக் கட்சி என்ற முத்திரைக்குள்தானே கொண்டு வருகிறார்கள்?**

"அது உண்மைதான். இரண்டு பிரதான கட்சிகளும், "விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணிக்குள் இருந்தால், தலித் அல்லாதவர்களின் வாக்குகள் கிடைக்காமல் போய்விடுமோ?' எனத் தயங்குகின்றன. இது திட்டமிட்டுக் கிளப்பிவிடப்பட்ட வதந்தி. தொகுதியை ஒதுக்கும் போதும் விடுதலைச் சிறுத்தைகளை ஊக்கப்படுத்தக் கூடாது என நினைக்கிறார்கள். இது ஒரு சமூகச் சிக்கல். இதை எல்லாம் தாண்டித்தான் அரசியல் செய்ய வேண்டியிருக்கிறது."

**மு.க.ஸ்டாலின் நடத்தும் "நமக்கு நாமே" திட்டத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

"ஒரு கட்சித் தலைவர் தனது வீட்டில் இருந்து கட்சி அலுவலகம் செல்வதையே விழாபோல் கொண்டாடும் நிலையில், மக்களை நேரடியாகச் சந்திக்கும் ஸ்டாலின் பயணத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். அவரும் கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு மேலாக அரசியலில் இருக்கிறார். அவரது பயணத்தால் வெற்றி கிடைத்தால் மகிழ்ச்சி."

ஜூனியர் விகடன்

# புலம்பெயர்ந்தோரின் அடையாளம் எது?



புலம்பெயர் மக்கள் தம்மை எவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்கின்றனர் அல்லது அவர்கள் எத்தகைய அடையாளங்களுடன் வாழ்ந்து வருகின்றனர் என்பது புலமையாளர்களதும் கொள்கை வகுப்பாளர்களதும் கவனத்தை ஈர்க்கும் விடயமாக உள்ளது. இந்த அடையாளத்துக்கும் புலம பெயர்ந்து வாழும் ஒருவர் தாம் வாழும் நாட்டின் மீது காட்டும் விசுவாசத்துக்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் கருதப படுவதால் இவ் அடையாளம் குறித்த விடயம் முக்கியம் பெறுகிறது. இதனால் புலம் பெயர்ந்தோரின் அடையாளம் சார்ந்த சில விடயங்களை இவ்வாரப் பத்தி தொட்டுச் செல்கிறது.

புலம்பெயர்ந்தோர் அடையாளங்கள் தொடர்பாகவும் அறிஞர்கள் மத்தியில் பல்வேறு வகையான கருத்துக்களும் விவாதங்களும் இடம்பெற்று வருகின்றன. நோர்வேயின் புகழ்பெற்ற சமூக மானுடவியலாளரான பேராசிரியர் Thomas Hylland Eriksen பண்பாட்டு அடையாளங்களை மூன்று வகையாகப் பாகுபடுத்துகிறார்.

முதலாவதுவகை, தூய அல்லது தனி அடையாளம் (Pure identity) எனப்படுகிறது. இது புலம்பெயர்ந்தவர் ஒருவர் தம்மை தூய அல்லது தனி அடையாளம் கொண்டவராக அடையாளப்படுத்திக் கொள்வதனைக் குறித்து நிற்கும். உதாரணமாக புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தம்மை ஈழத் தமிழர்களாக மட்டும் அடையாளப் படுத்திக் கொள்வார்களாயின் - இவர்களை தூய அல்லது தனி அடையாளம் கொண்டவர்களாகக் கருதலாம். பல முதலாம் தலைமுறைத் தமிழர்கள் இவ்வகையில் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதனை நாம்நடை முறையில் காண்கிறோம்.

அடுத்த வகை, hypenated identity என கூறப்படும்- தம்முடன் இன் னொரு இணைப்பினையும் ஒட்டிக கொண்டு வெளிப்படுத்தி அடையா ளப்படுத்துவது. நாம் மேற்குறிப்பிட்ட வெளிநாட்டவர்கள் பிரித்தானியாவில் குடியேறி தம்மை அடையாளப் படுத்தும் போது - இரட்டை அடையா ளம் வெளிப்படும் வகையில் பயன் படுத்தும் பிரித்தானிய-இந்தியர், பிரித்தானிய-முஸ்லிம் போன்றவை இவ் hypenated identity வகையைச் சேர்ந்தவைதான். நம்மவர்கள் தம்மை பிரித்தானிய - தமிழர் என அழைத்துக் கொள்கின்றனர். Hypen எனப்படும் ஒட்டுக்குறியினைப் (-) பயன்படுத்தி இரண்டு அடையாளங்களை இணைப்பதனால் இவை hypenated identity என்ற இப்பெயரைப் பெற்றன. இரண்டாம் தலைமுறைத் தமிழர்களில் அநேகமானவர்களும் முதலாம் தலைமுறையினரில் கணிசமானவர்களும் தம்மை தாம் வாழும் நாட்டின் அடையாளத்துடன இணைத்து பிரித்தானிய-தமிழர், தமிழ் கனேடியன், தமிழ்-அமெரிக்கன், பிரெஞ்சு-தமிழர், சுவிஸ்-தமிழர், தமிழ் அவுஸ்திரேலியர் - என அடையாளப் படுத்துவதனை நாம் நடைமுறையில் காண்கிறோம். இவையெல்லாம் நாம் இங்கு குறிப்பிடும் hypenated identity வகையைச் சார்ந்தவைதான்.

இவ்வாறு இரட்டை அடையாளத்துடன் தம்மை அடையாளப்படுத்தும்போதும் இரண்டு வகையில் இவ் "ஒட்டு" நிகழ்வதனைக் காண்கிறோம். கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழை முன்னால் ஒட்டிக் கொள்கிறார்கள். உதாரணமாக - தமிழ்-கனேடியன், தமிழ்-அமெரிக்கன், தமிழ்-அவுஸ்திரேலியன் எனத் தம்மை அழைத்துக் கொள்வதைக் குறிப்பிடலாம். தமிழர்கள் மட்டுமல்ல இந்நாடுகளில் வாழும் ஏனைய வெளிநாட்டுப் பின்னணி கொண்டவர்களும் இந் நடை முறையினையே பின்பற்றி வருகிறார்கள். நடைமுறையில் இருந்த பழக்கத்தையே தமிழர்களும் தொடர்கிறார்கள். மறுதலையாக, ஏனைய சில நாடுகளில் தமிழ் என்பது பின்னால் ஒட்டிக் கொள்கிறது. உதாரணமாக பிரித்தானிய-தமிழர், ஜேர்மானிய-தமிழர், நோர்வே-தமிழர் போன்று தாம் வாழும் நாட்டை முன்னாலும் தமிழர்கள் என்பதனை பின்னாலும் இணைத்துக் கொண்டு தம்மை அடையாளப்படுத்துவது.

சில நாடுகளில் முன்னாலும் ஏனைய சில நாடுகளில் பின்னாலும் தமிழ் ஒட்டிக் கொள்வதற்கான காரணங்கள் எவை?

இதற்கு ஏதாவது காரணங்கள் உள்ளனவா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவை தமிழர்கள் எம்மால் தீர்மானிக்கப்பட்ட விடயங்களாகவும் அமையவில்லை. நடைமுறையில் இருந்து வந்த வழக்கத்தையே நாமும் பின்பற்றி வருகிறோம்.

இருப்பினும், நாடுகளின் தன்மைகளை ஒப்புநோக்கும் போது குடியேற்றங்கள் மூலம் நாடுகளாக அமைந்து கொண்ட கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வந்து குடியேறும் வெளிநாட்டுப் பின்னணியினைக் கொண்டவர்கள் தாம் வாழும் நாட்டின் அடையாளத்தை அடியாகவும் தமது. தாயக அடையாளத்தை முன்னால் சேர்த்துக் கொள்கிறார்கள்.

குடியேற்றங்கள் மூலம் நாடாக உருவெடுக்காத ஏனைய நாடுகளில் தாம் வாழும் நாட்டின் அடையாளத்தை முன்னாலும் தமது தாயக அடையாளத்தை பின்னாலும் சேர்த்துக் கொள்கிறார்கள் என்ற அவதானிப்புக்குப் போகலாம். இதற்கான காரணங்கள் மேலும் ஆராயப் படவேண்டியவை. இவ்வகையான இரட்டை அடையாளத்தைக்கொண்டவர்கள் இவ்விரண்டு அடையாளத்தையும் முழுமையாகக் கொண்டிருப்பதோடு தேவையான நேரத்தில் தேவையான அடையாளப் பின்னணியுடன் முழுமையாகப் பங்குபற்றும் ஆற்றலைக் கொண்டிருப்பார்கள் எனவும் இவ் hypenated identity கொண்டவர்கள் தொடர்பாக பேராசிரியர் எரிக்சன் குறிப்பிடுகிறார்.

இவ்விடத்தில் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்த தமிழரான பேராசிரிய நண்பர் ஒருவர் கூறிய கதையொன்று நினைவில் வருகிறது.

ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்னர் பேராசிரிய நண்பரின் மகன் 15 வயதளவில் இருந்தபோது தனது தமிழ் மற்றும் அவுஸ்திரேலிய அடையாளங்கள் தொடர்பாக - இவை எவ்வாறு தனது நாளாந்த வாழ்க்கையில் மாறி மாறி நடைமுறைப் பயன்பாட்டில் இருந்து வருகின்றன என்பது தொடர்பாக தமிழ் மக்கள் சந்திப்பொன்றில் நிகழ்வு ஏற்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எடுத்துக் கூறியிருக்கிறார். எனது பேராசிரிய நண்பரின் மகன் தனது அனுபவங்களை வெளிப்படுத்தியபோது சபையில் இருந்த மூத்தவர் ஒருவர் கேட்டிருக்கிறார்.

"தம்பி! நீர் எத்தனை வீதம் தமிழன்? எத்தனை வீதம் அவுஸ்திரேலியன்?

உடனடியாகவே பதில் தம்பியிடம் இருந்து வந்திருக்கிறது.

"நான் 100 வீதம் தமிழன். 100 வீதம் அவுஸ்திரேலியன்"

பேராசிரியர் Thomas Hylland Eriksen வகைப்படுத்திய hypenated identity இனைக்கொண்டவர்கள் இக்கதையில் குறிப்பிடப்பட்ட தம்பி மாதிரி- இரண்டு அடையாளங்களையும் தம்வசம் முழுமையாகக் கொண்டிருக்கக் கூடியவர்கள்.

பேராசிரியர் எரிக்சனின் மூன்றாவது வகை அடையாளம் கலப்பு அடையாளம் சார்ந்தது (Creol or hybrid identity). இவ்வகை அடையாளம் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்டதோ பண்பாட்டுக்கூறுகளை கலந்து உருவாகும் ஒரு வகையிலான அடையாளம். இத்தகைய கலப்பு அடையாளத்தைக் கொண்டவர்களால் பண்பாடுகளின் தனத்தனிக் கூறுகளைப் பிரித்து அடையாளம் காண முடியாது. பண்பாடுகளின் வேறுபாடுகளையும் தனித்துவங்களையும் பகுத்துப் பார்க்கும் பண்பாட்டு ரீதியிலான ஆற்றலை இவர்கள் இழந்து விட்டிருப்பார்கள்.

பெரும்பாலான புலம்பெயர்ந்தோர் கலப்பு அடையாளத்துக்குள் தம்மை அமிழ்த்திக்கொள்ளவில்லை. தமது தனித்துவமான அடையாளத்துடன்தூய அடையாளத்தை கொண்டவர்களாக அல்லது "ஒட்டு" அடையாளத்தைக் கொண்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இதனால் பண்பாட்டுத் தனித்துவங்களுடன் தத்தமது இன அடையாளங்களுடன் தம்மை வெளிநாடுகளில் ஒழுங்கமைத்துக்கொண்ட சமூகங்கள் தமது தனித்துவங்களைப் பேணிக்கொள்வதில் கூடுதல் கவனம் எடுக்கத் தொடங்கின. முதலாவது தலைமுறைப் புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் இத்தகைய அடையாளங்களைப் பேணும் அக்கறை மிகக் கூடுதலாக இருப்பதும் வெவ்வேறு சமூகங்கள் மத்தியில் அவதானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு நாடுகடந்த சமூகங்கள் தொடர்பான அறிஞர்களில் முன்னணி வகிப்பவர்களில் ஒருவரான



பேராசிரியர் Peggy Levitt - நாடுகடந்த முறையில் வாழ்க்கையினை அமைத்துள்ள குடும்பங்களில் பெற்றோரின் செல்வாக்குப் பிள்ளைகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் - இதனால் அடுத்து தலைமுறையினரும் நாடுகடந்த முறையில் தொடர்புகளைப் பேணி வாழ்பவர்களாக உருவாகியிருக்கின்றனர் என்றும் தனது ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

பிரித்தானியாவிலும் ஏனைய நாடுகளிலும் வாழ்ந்து வரும் வெளிநாட்டுப் பின்னணியினைக் கொண்ட - பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணுவதில் அக்கறை காட்டும் முதலாவது தலைமுறையினரில் பலர்- தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணுவதற்காவும், தமது தாயகத்தில் தாம் பின்பற்றிய பழக்க வழக்கங்களின் தொடர்ச்சியாகவும் தமது சமூக குழுமத்தைப் பாதுகாக்கும் வகையில் இறுக்கமான எல்லைகளைப் பேண (boundary maintenance) முயன்றனர்-முயல்கின்றனர். கூடுதலாக இவ்எல்லையினைப்பாதுகாக்கும் நடைமுறை திருமணங்களின்போது பின்பற்றப்பட்டது. இதனால் பல வெளிநாட்டுப் பின்னணியினைக் கொண்ட சமூகங்கள் மத்தியில் திருமணம் என்று வரும்போது வேற்று இனத்த வருடன் கலப்புத் திருமணம் என்பது இரண்டாம் மூன்றாம் தலைமுறையினரிடையேகூட நாம்பொதுவாகக் கற்பனை பண்ணும் அளவினைவிடக் குறைவாகவே உள்ளது.

நோபல்பரிசு பெற்ற, பண்பாட்டு பன்மைத்துவத்தை ஆதரிக்கும் பேராசிரியரான அமாத்யா சென் (Amartya Sen)- தனது Identity and Violence எனும் நூலில் இந்த இறுக்கமான எல்லைகளைப்பேணும் நடைமுறை பண்பாட்டு பன்மைத்துவத்தின் பாற்பட்டதன்மை அல்ல என்று வாதிடுகிறார். பிரித்தானிய வெள்ளை இனப் பையனைத் தனது மகளின் காதலனாக, எதிர்காலக் கணவனாக ஏற்றுக் கொள்ள மறுக்கும் இந்தியத் தந்தையர் பற்றிக் குறிப்பிட்ட இவர் - இத்தகைய இறுக்கமான எல்லைகளைப் பேணித் தனித் தனிப் பண்பாட்டுக் குழுக்களாக வாழ்வது mulitculturalism அல்ல- இது Plural monoculturalism எனச்சாடுகிறார்.

இறுக்கம் நிறைந்த தனித்தனிப் பண்பாடுகளின் பன்மைத்துவத்தையே நாம் பிரித்தானியாவில் காண்கிறோமேயன்றி உண்மையான பண்பாட்டுப் பன்மைத்துவத்தை காண முடியவில்லை என்றும் இதனை அர்த்தப்படுத்தலாம். பேராசிரியர் சென்னின் பார்வையில் பண்பாடுகளுக்கிடையிலான எல்லைகள் மெல்லியவையாக இருக்க வேண்டும் என்வும் அப்போதுதான் உண்மையான பண்பாட்டுப் பன்மைத்துவம் உருவாக முடியும் என்ற கருத்து வெளிவருகிறது. இதனை எதிர்க்கும் பேராசிரியர்களும் உள்ளனர்.

தமக்குள் தாமே இறுக்கமான தொடர்புகளைப்பேணிக்கொண்டு - பிரதான சமூகத்துடன் ஒடும் புளியம்பழமுமான உறவுகளை பேணிக் கொண்டு - நாடு கடந்த தொடர்புகளைத் தமது தாயகத்துடனும் ஏனைய நாடுகளில் வாழும் தமது சமூகத்தினரோடும் பேணிக் கொண்டு- தனித்தனிச் சமூகக் குழுமங்களாக அருகருகே வாழ்ந்து வரும் வாழ்க்கை முறையினை - சமூகத்தை (society) ஒரு தேசம் என்ற மரபுக்குள்ளால் பார்த்து வந்த பல ஐரோப்பிய அரசியல் தலைவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

*- கலாநிதி சர்வேந்திரா*



# வசந்தமும் திரும்பலாம்!

சிறுகதை

அந்தப் பனைமரங்கள் அடர்ந்த கிராமத்தில் பனை மட்டையால் வேலி அமைத்து வைக்கோலால் கூரை வேய்ந்து சுற்றிவர மண்ணால் சுவரெழுப்பி ஒரு வாசல், அமைத்துக் கட்டிய அழகான குடில் -இல்லை வீடு அதுதான் மணியத்தாரின் வசந்தமாளிகை. அந்த மாளிகையின் முன் செவ்வந்திச்செடி- மஞ்சள், செம்மஞ்சள் என மாறி மாறி நிறங்கள்- பூத்துக்குலுங்கின. முற்றத்தில் ஓரத்தில் ஒருபரண். அதன் மேல் சமையல் பாத்திரங்கள் கழுவி அடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாத்திரத்திரமும் முகம் பார்க்கும் கண்ணாடியாவே இருந்தது. அவ்வளவு பளபளப்பு. அது விமலாவின் கைவண்ணம்.

மணியத்தார், முற்றத்தில் கிடுகுகளைப் பரப்பி அதன் மேல் மிளகாய்ப்பழங்களைக் காய்வதற்காகப் பரப்பிக் கொண்டிருந்தார்.

விமலா, குசினிக்குள் இருந்து தகப்பனுக்குத் தேநீர் ஊற்றி மூக்குப்பேணியில் விட்டுக்கொண்டுவந்தாள். அது ஒரு பித்தளைப் பேணி. புளி போட்டு நன்றாக மினுக்கியிருந்தாள். தங்கப்பேணியோ! என்று நினைக்கத்தோன்றும் அளவிற்கு இருந்தது. ஈஸ்வரன் தோளிலே ஒரு பையுடன் இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு வசலில் நின்றவன் பொறுமை இழந்து "ஐயா!" என்று அழைத்தான்.

மணியத்தாரின் கைகள் வேலையில் ஈடுபட, முகத்தை மட்டும் திருப்பிப் பார்த்தார் வாசல்பக்கமாக. அவருடைய பார்வைக்கு அவன்யார் என இனங்காண முடியவில்லை. கை, வேலையை விட்டுவிட்டது. கண்களுக்கு மேலாக கண்ணுக்கு நிழலாக, கையைப் பிடித்து, "தம்பி ஆரப்பா!" என்று கேட்டார். அப்போதுதான் விமலா திரும்பிப் பார்த்தாள். அவளுடைய கையிலிருந்த மூக்குப்பேணி கை நழுவி நிலத்தில் விழுந்து தண்ணீர் கொட்டியது.

"அப்பா!" என்று அவளது குரல் ஆச்சரியத்தில் உயர்ந்தது. மணியத்தார், எழுந்து நின்று தனது கையைச்சேர்த்துக் கும்பிட்டுக்கொண்டு "தம்பி ஈஸ்வரன் வாங்கோ" என கண்களில் நீர் சொரிய அழைத்தார். "எத்தனை காலம்" எனப் பெருமூச்சு விட்டபடி ஈஸ்வரனின் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றார். விமலா கைகளால் முகத்தைப் பொத்தியவாறு..! அவள், வடித்த கண்ணீர் விரல்களின் இடுக்குகளினூடே பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது.

"தம்பி இருங்கோ" என்று ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு அந்த விறாந்தையில், தான், சுவருடன் சாய்ந்து உட்கார்ந்திருந்தார் மணியத்தார். அவர் கண்கள் குளமாகக் கும்பிட்டபடி "ஏன் தம்பி ஒரு கடதாசியாகிலும் போடாதையுமென் பெட்டை துடித்துப் போனாள். நான் பெட்டையின்ரை வாழ்வு தொலைஞ்சு போய்ச்சுது என்று நினைச்சிட்டன். ஏதோ தன்னை நீர் கைவிட்டுவிட்டீர் எண்டு- ஊரிலே வேண்டாம் அப்பா, நாங்கள் எங்கள் கிளிநொச்சி வயலுக்கே போவம் எண்டு கூறி என்னை இங்கை கூட்டிக் கொண்டு வந்துட்டாள்.

அயலில குடிமனை இருக்குது... பயமில்லை என்ற நம்பிக்கையோடு நானும் ஓம் எண்டு சொல்லி அவளின்ரை மனமும் மாறவேணும் என்ற ஆசையில கூட்டிக்கொண்டு வந்திடன்."

"மாமா...! மாமி.. மச்சான் எல்லாரும் எல்லோரும் எங்கே? ஊரிலையும் காணோம். அவையளை இங்கையும் காணேல்ல. அப்ப அவையள் எங்கே இருக்கினம்?" பெருமூச்சு விட்டவாறு "அதை ஏன் பறைவான் தம்பி. உமக்கும் என்ரை மகள் விமலாவிற்கும் பொருத்தம் பார்த்து திருமணம் நிச்சயமானதும் நீங்கள் எழுதிப்போட்டு வெளிநாட்டுக்குப் போநீங்கள். அதன் பிறகு நீண்ட காலம் நீங்கள் கடிதம் எழுதேல்லை.. டெலிபோனில எண்டாலும் சொல்லுவியள் எண்டா... ஒருதகவலும் இல்லை...

ம்... ! பெத்தமனம் பித்துத் தானே.. தம்பி! தாய் விரதம் ... இருந்தாள்... கந்தசஷ்டி விரத்தைப் பக்குவமாய் பிடிப்பாள்... அதுமட்டுமில்லை... நல்லூர், துர்க்கையம்மன் என்று எல்லாக்கோயிலுக்கும் விரதம் பிடிக்கிறது... தன்ரை மகளுக்கு ஒருநல்ல முடிவு கிடைக்க வேணும் என்று.

போன வருஷமும் கந்தசஷ்டி விரதம் பிடித்தவ... உடம்பைக் கவனிக்கேல்லை. ஒரேதோய்ச்சலும் முழுக்கும்... மழையும் தானே... விரதமும் முடிய, அவவுக்கு குளிர் ஜுரம் வந்தது. அந்தச்சமயத்தில, முதலிலே ஆஸ்பத்திரிக்கு வரமறுத்திட்டா... பிறகு, ஆளுக்கு-கண்கள் மூடிட்டுது.. பேச்சு மூச்சில்லை... அப்பதான், ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனம். வயர் விட்டுத்தான் தண்ணி, வெந்நீர் கொடுத்தவை.

ஆஸ்பத்திரியில தாயோடை.. விமலாதான் நிண்டவ. பாவம் காலைமை, இரவு எண்டு மாறிக்கூட விட ஆளில்லாமல், அங்கேயே இருப்பாள். பிறகு, ஐநூறு ரூபாக்கு ஒராளை- பெரியாஸ்பத்திரியில ஒராளைப் பிடிச்சனாங்கள். அவ மத்தியானத்தில நிப்பா. பிள்ளை, வந்து காலாறிவிட்டுச் சரிஞ்சு படுத்திட்டுப் பின்னேரம் போவா.

ஒரு மாசம் ஆஸ்பத்திரியில இருந்தவ. பிறகு ஒருநாள் டாக்குத்தர் வந்து பாத்திட்டு சுகமாகி வந்திட்டா இனி வீட்டை விடலாம் எண்டு சொன்னவர். அப்ப மகளும் சந்தோசமா வீட்டை வந்திட்டுத் திரும்பிப் போனவ..

திடீரென்று மூச்செடுக்க முடியாமல் கஸ்ரப்படுறா எண்டு அவசர சிகிச்சைக்குக் கொண்டு போட்டினமாம் எண்டு மகள் ரெலிபோனில சொன்னா. நானும் ஓடிப்போனனான். அங்க போக, அவவை மூடிப்போட்டு வெளியில கொண்டுவந்து தந்தினம்.

நான் தம்பி! பரமன்ரை வீட்டில வைச்சுத்தான் காரியங்களை முடிச்சனான்." தனது சால்வையால் கண்களைத் துடைத்துக் கொண்டு, "அதுக்குப் பிறகு நாங்கள் அங்க இருக்க வேண்டாம்...என்று யோசிச்சம். தம்பி விக்கினேசும் நிண்டு கொண்டான். அவனை இங்கை கொண்டுவந்தால் கஷ்டம் எண்டு, யாழ்ப்பாணத்தில ஒராளோட கதைச்சு வைச்சனான். உதவி செய்யச் சொல்லி. விக்கினேசை வெளிநாடு அனுப்பி விடச்சொல்லி. அவர்தான் ஸ்ருடன் விசாவிலை போகினம் அனுப்பப்போறியளோ? எண்டு கேட்டார் தம்பியும் ஓம் எண்டு நாண்டுகொண்டு நிண்டான். தாய் செத்தும் கொஞ்ச நாள் எண்டுகூடப் பார்க்காமல் லண்டனுக்கு அனுப்பிவிட்டன். பிறகால, நானும் மகளும் இங்க வந்திட்டம்.

நீங்கள் எப்படித் தம்பி? உங்கட கதையைக் கேட்காமல் பழஞ்சலிப்புகளை சொல்லிக் கொண்டிருக்கிறன். எந்த நாட்டில தம்பி நிண்டனியள். ஏன் கடிதம் போடேல்லை."

"உங்களுக்கு ஒரு பெரும் கதை இருந்ததைப்போல எனக்கும் ஒரு கதை உண்டு" என்று பெருமூச்சு விட்டபடி கூறினான் ஈஸ்வரன். அதற்கிடையில் "தங்கைச்சி விமலா தம்பிக்குத் தண்ணி கொண்டுவா" என்று மணியத்தார் கூப்பிட்டார். அவளும் கையில் டம்ளரைக் கொண்டுவந்தாள். ஈஸ்வரனின் முகத்தைப் பாராமல் கைகளை நீட்டினாள். அவனும் அதனை வாங்கியவாறு "பெரும்பிழை செய்துவிட்டன் மாமா" என்றான். உடனே விமலா திரும்பி அவனது முகத்தைப் பார்த்தாள்.

"நான் இத்தாலிக்கு எண்டுதான் போனனான். இங்கே இருந்து கொண்டுபோய் ஏதோ ஒரு நாட்டில, ஒரு அறையில பூட்டிப் போட்டினம். ஏஜன்டு ஆள் வந்துதான் கதவைத் திறந்து சாப்பாடு தருவார். வெளியில பேசேலாது. இப்படி ஒரு பத்து நாள் வைத்து இருந்தினம். பிறகு, அவர் வராமலே விட்டிட்டார்.

நாங்கள் இரண்டு நாள் சாப்பாடு தண்ணியில்லாமல் ஏழு பேரும் அதுக்குள்ளையே கிடந்தம். அடுத்தநாள்.. பசி,தாகம் தாங்க முடியாமல்... கதவை உடைச்சுக்கொண்டு, வெளியில வந்தம். வந்து, எங்க போறது எண்டு தெரியாமல் நடந்தம். அப்பதான் அது டுபாய் எண்டு தெரிந்திது. அங்கே ஒரு சாப்பாட்டுக் கடையில சாப்பிட்ட நாங்கள். காசு குடுக்கவும் எங்களிட்டை ஒருசதமும் இல்லாததால, அவன் எங்களைப் பிடித்து பொலிசிலை குடுத்திட்டான். அவங்கடை சிறையிலை தான் இரண்டு வருசம் இருந்தம். பிறகு- ஏமாற்றப்பட்ட நாங்கள் என்ற பேரில எங்களை வெளியில கொண்டு வந்து ஃபிளைற்றில சொந்த நாட்டுக்கு அனுப்பிவிட்டான்.

இஞ்சை வர சிலோன் ஏயார் போட்டிலையும் எங்களைப் பிடித்து ஒரு ஆறுமாதம் விசாரணை என்று இழுத்து அடிச்சுப்போட்டு இப்ப- நாலு நாளைக்கு முன்னம்தான் விட்டினம். அவை, விட்ட பின்னாலை தான் நான், வீட்டுப் பக்கம் போக முடிஞ்சுது. அங்க அம்மாவும் பெரியண்ணையோட கனடாக்குப் போட்டாவாம். வீட்டில ஒருவரும் இல்லை.

நான் எங்களுக்கு எழுத்து நடந்த அந்த பரமு மாமா வீட்டிற்குப் போன இடத்திலதான், நீங்கள் இங்கே இருக்கிறியள் எண்டு தெரிஞ்சு, உடனே வெளிக்கிட்டு இங்க வந்தனான்."

விமலாவால் தாங்க முடியாமல் குமுறிக்குமுறி அழுதாள். மணியத்தார் அவளின்ரை கையைப்பிடித்து "அழாதை மோனை... தம்பி வந்திட்டார் தானே. அவர் எந்தத் தொழிலையும் செய்யத் தெரிஞ்சவர். அவரிட்டைக் கதைப்பம் ஒன்றுக்கும் யோசிக்காதை.." என்று மகளைத் தேற்றினார்.

ஈஸ்வரன், விமலா..! நான் இனி உன்னை விட்டு எங்கையும் போகமாட்டன்... இனி உன்னோடைதான் இருப்பன்... இது உண்மை... சத்தியமாக..!" என்று ஆறுதல் கூறி, "மாமா ஒரு நல்லநாள் பாருங்கோ.. விமாலாவுக்கு தாலியைக் கட்டிப்போட்டு, நானும் உங்களோடு தோட்ட வேலையைச் செய்யிறன்.

நல்ல வருமானத்தை ஈட்டத் தக்க வகையில வயலைச் செய்து நல்லபடியாக வாழலாம். அவையிட்டை இவையிட்டை கைகட்டி வாய் பொத்தி... நிக்காமல்... சுதந்திரமா எங்கடை தொழிலை நாங்கள் செய்வம்..." என்ற அவனது மிடுக்கான கதை கேட்டு மணியத்தார் சந்தோசத்தில் ஆழ்ந்தார்.

விமலாவின் முகத்தில் இப்போதுதான் சிரிப்பு மலர்ந்தது... சூரியனின் பிரகாசத்தைப்போல... ஈஸ்வரனுக்கும் விமலாவைப் பார்க்க வேண்டும்.. பார்க்கவேண்டும் என்று அடிநெஞ்சில் அலை பாய்ந்து கொண்டிருந்த எண்ணம் ஈடேறிய சந்தோசத்தில்... இத்தனை ஆண்டுகளின் பிறகு உண்மையான புன்னகையை உதிர்த்தான்.

அந்த வீட்டுக்குள் மீண்டும் வசந்தம் புகுந்துகொண்டதால் அது இன்றிலிருந்து துளிர்க்கத் தொடங்விட்டது. இனி காய்களுக்கும் கனிகளுக்கும் குறைவில்லை.

ஆஷா

# கிரிக்கெட்டில் களம் இறங்கும் பெண் நடுவர்கள்



கிரிக்கெட்டின் வரலாற்றில் முதல் முறையாக நான்கு பெண் நடுவர்களை நியமித்து ஆச்சரியப்படுத்தியுள்ளது ஐ.சி.சி. நேற்று முதல் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை, தாய்லாந்தில் நடக்கும் மகளிர் இருபது-20 உலகக் கோப்பைக்கான தகுதச்சுற்றுப் போட்டிகளுக்கு, இந்நால்வரும் நடுவர்களாக செயறபடவுள்ளனர்.

உள்ளூர் மகளிர் போட்டிகளில் மட்டும் அதிகப்படியாக பெண் நடுவர்கள் செயற்பட்டு வந்த நிலையில், ஒரு சர்வதேச தொடருக்கு நான்கு பெண் நடுவர்களை ஐ.சி.சி. நியமிப்பது இதுவே முதல் முறையாகும்.

நியூசிலாந்தைச் சேர்ந்த கேத்தி கிராஸ், அவுஸ்திரேலியாவின் க்ளேர் பொலோசக், இங்கிலாந்தின் சுயூ ரெட்ஃபெர்ன் மற்றும் ஜமைக்காவின் ஜாக்குலின் வில்லியம்ஸ் ஆகியோர்தான் ஐ.சி.சி.யின் அதிகாரபூர்வ நடுவர் குழுவிலுள்ள அந்த நால்வர ஆவர். ஆடவருக்கான விளையாட்டு என்றே கருதப்பட்ட கிரிக்கெட்டில் மெல்ல பெண்களும்பங்குபெறத் தொடங்கினர்.

மகளிருக்கும்டெஸ்ட், ஒரு நாள், இருப்து-20 என மூன்று வகையான போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. 1934ஆம்ஆண்டே அதிகாரபூர்வ மாக மகளிர் கிரிக்கெட் தொடங்கினாலும், அப்போட்டிகளின் நடுவர்களாக ஆண்களே இருந்து வந்துள்ளனர். ஒருசில சர்வதேச மகளிர் போட்டிகளில் ஒரு பெண் நடுவர் மட்டும் செயற்பட்டுள்ளார். இந்நிலையில் தான் இவ்விளையாட்டில் பெண்களின் பங்கீட்டையும், பெண்களிடையே இதன் மீதான ஆர்வத்தையும் அதிகரிப்பதற்காக சர்வதேச கிரிக்கெட் குழுவில் இம்முடிவை எடுத்துள்ளது.

### 17 ஆண்டு அனுபவம் கொண்டவர்

இவர்களில் மிகவும் அனுபவம் உடையவரான கிராஸ், 2014 ஆம் ஆண்டில் ஐ.சி.சி நடுவர் குழுவில் இணைக்கப்பட்டுள்ளார். 58 வயதான கிராஸ், 1998 ஆம் ஆண்டு முதல் உள்ளூர் போட்டிகளில் நடுவராக பணியாற்றி வருகிறார். இவர் 2000, 2009, 2013 ஆகிய ஆண்டுகளில் நடந்த மகளிர் உலகக்கோபபை போட்டிகளில் நடுவராக பங்கேற்றுள்ளார்.

ஐ.சி.சி.யின் இந்த முடிவு பற்றி அவர் கூறுகையில், ஒவ்வொரு தொடரும் மகளிர் கிரிக்கெட்டிற்கு புதிதாய் ஏதாவது ஒன்றை கொடுத்த வண்ணம் உள்ளன. ஐ.சி.சி.யின் இம்முடிவு பெண் நடுவர்களின் தரம் உயர்ந்துள்ளதை பறைசாற்றுகிறது.

நான் உலகில் நிறைய இடங்களில் நடுவராக பணியாற்றியுள்ளேன். நான் மட்டுமே பெண் நடுவர் என்பதால் மைதானத்தில் தனியாக நிற்பது போன்ற உணர்வு ஏற்படும். ஆனால், இனி அப்படி இருக்காது. இது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என்று தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தினார்.

அவுஸ்திரேலிய நாட்டவரான க்ளேர் பொலோசக் ஒரு அறிவியல் ஆசிரியை. 27 வயதே ஆன இவர், மிக இளம் வயதில் நடுவராக பணியாற்றியவர் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர். கடந்த ஆண்டு நடந்த அவுஸ்திரேலியாவின் உள்ளூர் தொடரான மெடடோர் கோப்பையில் நடுவராக நின்று, அந்த சாதனையை தன்வசம்கொண்டு வந்தார். இப்போது மேலும் ஒரு புதிய சகாப்தம் படைத்திருக்கும் க்ளேர், நான் நடுவராக முதல் முதலில் நின்றபோது எனக்கு வயது 15. இப்போது அடைந்திருக்கும் உயரத்தை நான் எட்டுவேன் என்று அப் போது நினைத்திருக்கவில்லை. என்னோடு பணியாற்றப் போகும் அனுபவம் வாய்ந்த சீனியர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள ஆசைப்படுகிறேன் என்று கூறுகிறார்.

இங்கிலாந்து அணிக்காக 6 டெஸ்ட் போட்டிகளிலும், 15 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியவர் சுயூ ரெட்ஃபெர்ன். இடதுகை சுழறபந்து வீச்சாளரான சுயூ, தனது 17 வயதில் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினார்.

இந்தியாவுக்கு எதிராக 1995இல் தொடங்கிய இவரது கிரிக்கெட் பயணம், 1999 இல் இந்தியாவுக்கு எதிராகவே நிறைவுற்றது. பின்னர் இரண்டாம் தர கவுன்டிப் போட்டிகளில் நடுவராக பணியாற்றிய இவருக்கு தற்போது சர்வதேச அரங்கில் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

39 வயதான ஜாக்குலின் வில்லியம்ஸ்தான் கரீபியத் தீவுகளிலிருந்து வரும் முதல் பெண் நடுவராவார். ஜமைக்கவைச் சேர்ந்த வில்லியம்ஸ் கூறுகையில், என்னால் இதை நம்பவே முடியவில்லை. மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கடந்த சில மாதங்களாக நான் செய்த கடின உழைப்பிற்குக் கிடைத்த பரிசு இது. இத்தொடரில் என் சிறப்பான பணியைத் தொடர்ந்து செய்வேன் என்றார். கடந்த ஜூன் மாதம் டிரினிடாட்டில் நடந்த நடுவர்களுக்கான பயிற்சி முகாம் இவருக்கு பெரிதும் துணை புரிந்துள்ளது.

இதுகுறித்து முன்னாள் இங்கிலாந்து மகளிர் அணியின் கப்டனும், ஐ.சி.சி மகளிர் குழுவின் செய லருமாகிய க்ளேர் கான்னர் கூறுகையில்,

உலக இருபது - 20 தொடருக்கு நான்கு பெண் நடுவர்களை நியமித்திருப்பது மகளிர் கிரிக்கெட்டை முன்னேற்றுவதற்கான மிகப்பெரிய படி. இதன் மூலம் மகளிர் கிரிக்கெட்டின் அடையாளம் மாறும். கடந்த சில காலமாகவே மகளிர் கிரிக்கெட்டில் மாற்றங்களைப் புகுத்த ஐ.சி.சி முனைந்து வருகிறது. இதை அப்படியே தொடர வேண்டும். பெண் நடுவர்களை நன்கு ஊக்குவிக்க வேண்டும். கண்டிப்பாக பெண்கள் கிரிக்கெட் மிகப்பெரிய உயரத்தை எட்டும் என்று ஐ.சி.சியின் இம் முயற்சியைப் பாரட்டினார்.

மேட்ச் பிக்சிங், ஸ்பாட் பிக்சிங் என பல்வேறு சர்ச்சைகளினால் தனது மதிப்பை இழந்து வந்த **ஜென்டில்மேன்ஸ் கேம்** கிரிக்கெட்டின்இமேஜை சரி செய்ய ஐ.சி.சி பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

அண்மைக் காலங்களாக ரசிகர்களிடையே கிரிக்கெட் மீதான ஈடுபாடு குறைந்து விட்டதால், விளையாட்டில் பல மாற்றங்களை புகுத்தி வருகிறது ஐ.சி.சி. புதிய பவர் பிளே விதிமுறைகள், ஃப்ரீஹிட் எனத் தொடங்கி, நேற்று நடந்த முதல் பகலிரவு போட்டி வரை அண்மையில் மாற்றங்கள் ஏராளம். அவ்வகையில் பெணகளின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஈர்க்க இது ஐ.சி. சி.யின் அடுத்தபடி.

சரி இருக்கட்டும்... மகளிர் மட்டும் படத்தில் ஊர்வசி சொல்வது போல், லேடீஸ பஸ்ல டிரைவரும் லேடீஸாதான் இருக்கணும்? பெண்களும் முன்னேறனும்ல.

மாற்றம்... முன்னேற்றம்... கிரிக்கெட்.

-நன்றி:விகடன்

facebook

# இரவில் மட்டுந்தானா?



பதினைஞ்சு வயசுதான் என் செல்ல மகனுக்கு. அவன நான் எப்படியாச்சும் நல்லா படிக்க வைச்சு இந்த சமுதாயத்துல தல நிமிந்து நடக்க வைப்பேன்.

அவன் கேட்டதெல்லாம் வாங்கிக்கொடுத்து அவன் இஷ்டப்படி அவன வளத்து காட்டுவேன். ஒரு பயல் கூட இப்படி புள்ளய வளக்காத மாதிரி நான் வளப்பேன். அவன் மொகத்துல சோகமே இருக்கக்கூடாது.

அவன்ட கண்களுக்கு கண்ணீரே தெரியக்கூடாது. அவன இந்த நாட்டுலயே பெரிய ஆளா ஆக்குவேன். நான் தான் படிக்காம, குடும்பத்தோட சேந்து வாழாம, தனியா ஓடி வந்து குடி பழக்கத்துக்கு ஆளாகி ஒழுங்கான தொழில் இல் லாம குறைஞ்ச வருமானத் துல கஷ்டப்படுறேன்.

இந்த பாழாப்போன போத்தல் என்ன விடுதில்லையே! அந்த மாதிரி அவன விட்டுட மாட்டேன். டே..ய் மகனே நாளைல இருந்து நீ மெக்கானிக் கடைக்கு வேலைக்கு போகாதடா ஸ்கூலுக்கு போடா!

மொடக் மொடக் மொடக்! என் மகள நல்லா பாதுகாப்பேன். வெளிய விடவே மாட்டேன். ஊருல ஒருத்தன் என் மகளப் பத்தி பேச விடமாட்டேன். அவ அழுகுக்கும் அறிவுக்கும் ஏத்த மாதிரி மாப்பிள்ளய வெளியூர்ல தேடிப்பிடிப்பேன். அடுப்படி பக்கமே அவள விடமாட்டேன். ஒரு துணி கூட கழுவ விடமாட்டேன்.

ஏம்மா.. என்ட ராசாத்தி நாளைல இருந்து நீ வீடா வீடா போய்ட்டு வேல செய்றத நிறுத்தும்மா. வீட்ல இரு. அப்பா நான் இருக் கேன். ஒனக்கு என்ன வேணும்னு சொல்லு நான் வாங்கி தர்றேன்.

நாளைக்கு பாரேன் ஒன்ன ஒருத்தன் கைல புடிச்சு கொடுக்கும் போது சீதனமா என்ன என்ன கொடுக்குறேன்னு. இந்த குடிய இன்னையோட விட்டுட்டுட்டு மொடக் மொடக் மொடக்! அடியே என் தர்ம பத்தினி... என் செல்லமே... இது வரைக்கும் உன்ன சந்தோசமா வைச்சிருந் தேனான்னு தெரியல. ஆனா இனிமே நீ கவலயா இருக்கவேமாட்ட. ஒனக்கு ஒரு துணிமணி, நகநட்டு எதுவுமே வாங்கி தர்ல. கோயில் குளம், சினிமா, ட்ராமா எங்கயுமே கூட்டிப் போனதில்ல. நல்ல சாப்பாடு கொடுத்தேன்னான்னு தெரியல. ஆனா நீ பத்து பேருக்கு சமச்சு கொடுத்து என்னையும் காப்பத்துற. நாள்ளைல இருந்து பாரு... நீ எந்த வேலயும் செய்யத் தேவயில்ல. நான் குடிக்க நீ காச தர தேவயில்ல. நானு இனி ஒன்ட காச திருடமாட்டேன். இன்னையோட இந்த சாராய பிசாசுக்கு குட்டு பாய் சொல்லிடுறேன்.

மொடக்... மொடக் மொடக்!


இத்தனையும் என்னயவே பாத்துக்கிட்டு இருக்குற அந்த நிலா மேல சத்தியம். நட்சத்திரங்கள் மேல சத்தியம். இந்த இருட்டு மேல சத்தியம். ஊர காக்குர கறுப்பு மேல சத்தியம். என் மேல சத்தியம்.

திண்ணயில சரிஞ்சு கிடந்தவன, தூக்கி வீட்டுக்குள்ள இழுத்து போட்டுவிட்டு, எத்தனையோ இரவுச் சத்தியங்கள் விடிஞ்சதும் முடிஞ்சதை நினைத்துப் பார்த்துவிட்டு, அவனது சத்தியங்கள் வாழ்வது இரவில் மட்டுந்தானா.:? என்ற விடை தெரிந்த வினாவோடு மூவரும் வழமை போலவே தரையில சுருண்டு படுத்துக்கொண்டனர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 559

Search for people, places and things | Nagendram | Home

லோலிபப் விதுஷ்




கோபிகிருஷ்ணா




சானு சந்





கஜயரூபன்




தளபதி ரசிகன் பிரியன்



நிருஜன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: யாருக்காக இது யாருக்காக
பாடகர்: ரி.எம். சௌந்தரராஜன்
வரிகள்: கண்ணதாசன்
இசை: கே.வி.மகாதேவன்
திரைப்படம்: வசந்த மாளிகை



யாருக்காக இது யாருக்காக
இந்த மாளிகை வசந்த மாளிகை
காதல் ஓவியம் கலைந்த மாளிகை
யாருக்காக இது யாருக்காக
காதலே போ போ
சாதலே வா வா வா
மரணம் என்னும் தூது வந்தது
அது மங்கை என்னும் வடிவில் வந்தது
சொர்க்கமாக நான் நினைத்தது
இன்று நரகமாக மாறிவிட்டது
யாருக்காக இது யாருக்காக
மலரை தானே நான் பறித்தது
கை முள்ளின் மீது ஏன் விழுந்தது உறவை
தானே நான் நினைத்தது என்னை பிரிவு
வந்து ஏன் அழைத்தது எழுதுங்கள் என்
கல்லறையில்
அவள் இரக்கமில்லாதவள் என்று
பாடுங்கள் என் கல்லறையில்
இவன் பைத்தியக்காரன் என்று
ஹ ஹ ஹ ...............
கண்கள் தீட்டும் காதல் என்பது
அது கண்ணில் நீரை வரவழைப்பது
பெண்கள் காட்டும் அன்பு என்பது நம்மை
பித்தனாக்கி அலைய வைப்பது
யாருக்காக ...............
எங்கிருந்து சொந்தம் வந்தது
இன்று எங்கிருந்து நஞ்சு வந்தது
அங்கிருந்து ஆட்டுகின்றவன்
தினம் ஆடுகின்ற நாடகம் இது
யாருக்காக இது யாருக்காக
இந்த மாளிகை வசந்த மாளிகை காதல்
ஓவியம் கலைந்த மாளிகை
யாருக்காக இது யாருக்காக
யாருக்காக இது யாருக்காக

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

**பாஸ்கரன், கிருஷ்ணா, பிரசன்னா, தர்சனன், ஐஸ்மன், அசோக்- வல்வெட்டித்துறை, விமலாதரன்- சுன்னாகம், பாக்கியலட்சுமி, தினேஷ்- உடுப்பிட்டி, சிவன், ரதி, ரேணு- உடுப்பிட்டி.**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.


# ஈழத்து சினிமா

## குரும்பை-குறும்பட விமர்சனம்

விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் நெருக்கடிகளையும் அச்சமூகத்தைச் சார்ந்த சிறுவர்களின் உளவியல் பிரச்சினையையும் முன்வைக்கும் குறும்படம் குரும்பை. இக்குறும்படத்தை எழுதி இயக்கியுள்ளார் பீ.சே.கலீஸ்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவனின் பார்வையில் குறும்படம் முழுவதும் நகர்கின்றது. பல வகையான குறும்படங்கள் இலங்கை தமிழ்ச்சூழலில் வெளிவந்திருந்தாலும் அழகியல் நுட்பத்துடன் வெளிவந்த குறும்படங்கள் மிகசொற்பமானவை. குரும்பை அழகியல் தன்மையுடன் இதுவரை வெளிவந்த குறும்படங்களில் முக்கியமான ஒன்றாகக்கருதலாம். கதையினை கட்டியவிதத்தில் இருந்து காட்சியூடகத்தின் ஊடக திரையில் கதையினை பிரதிபலிக்கும் நுட்பம்வரை குறும்படம் தரமாகத் தன்னை மேமபடுத்துகின்றது.வழமையான குடும்பப்பிரச்சனையை முன்வைத்திருந்தாலும் குறும்படத்தில் அதனைக் காட்சிக் கோர்வையாக சொல்லும் சந்தர்ப்பத்தில் வழமையான இயல்புத்திறனில் இருந்து மீறி தன்னை வித்தியாசப்படுத்துகின்றது. இயல்பான நடிப்பும் சரியான வசனங்களும் குறும்படத்தினை இன்னுமோர் தளத்துக்கு இழுத்துச்செலகின்றது.

விறகுவெட்டி பொருளாதாரத்தேவைகளை பூர்த்தி செய்யும் அம்மா, எந்தவித குடும்பபொறுப்பையும் எதிர்கொள்ளாமல் மதுவுக்கு அடிமையாகிய தந்தை,



குரும்பை

இவர்களுக்கு ஒரேயொரு மகன். அவனின் பார்வையில் குறும்படத்தின் கதை நகர்கின்றது. தினமும் குடித்துவிட்டுவரும் தந்தை அம்மாவைப்போட்டு அடிக்கின்றார் என்ற கவலை அவனை வாட்டுகின்றது. தந்தையின்மதுப் போத்தலை மறைத்துவைக்கும் சிறுவன் தந்தையின் தாக்குதலுக்கு ஆளாக நேர்கின்றது. கடும்வெயிலில் தென்னை மரத்தின்கீழ் கட்டிவைக்கிறார். தலையில் குரும்பைகள் விழுகின்றது. அவனின் நிலையினை எண்ணி கவலையுடன் தாயின்முகம். இதனை படம்பிடிக்கும் கமரா சில நொடிகளில் உணர்ச்சிகளை மையப்படுத்தி உள்வாங்கிவிடுகின்றது. உள்வாங்கப்பட்ட உணர்வுகள் கச்சிதமாக ஒலிக்கும் இசையுடன் பார்வையாளர்களை சோகத்தில் திளைக்கவைகின்றது.

சிறுவனுக்கு ஆடுகள் பிடிக்கும். அதனுடன் விளையாடுவான், தனிமையில் சைக்கிள் சில்லினை உருட்டி விளையாடப்பிடிக்கும். தாயின் பாசம் அவனை ஒருவிதத்தில் இறுக்கமாக பிணைத்திருந்தாலும் இடைவிடாத சோகம் எப்போதும் அவனை விரட்டுகின்றது. அதனை விளக்கும் படக்காட்சிகள் நெருக்கமாக பதிவாகியிருக்கின்றது. அயல்வீட்டில் தன்பிள்ளைகளுக்கு உணவூட்டும் தாயினை காணும்போது அந்தபாசத்துக்கு ஏங்கும் அவன் தன்தாயிடம் தனக்கு உணவூட்டச் சொல்லும்போது வேலைநிமிர்த்தம் அதனை தாய் தவிர்க்கும்போது அவன் கடுமையான மனச்சோர்வடைகின்றான். ஆசையோடு திரும்பவும் அயல்வீட்டு தாயினை அணுகும்போது அத்தாய் உணவூட்டுகின்றார். அவனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிகின்றது. பாசத்துக்கு ஏங்கும் அவ்னின் ஏக்கங்கள் ஒருவிதத்தில் அங்கே சமன்செய்யப்படுகின்றது. இதனை குளோசபில் படம்பிடிக்கும் கமரா சொல்லிவிட்டுபோகும் உணர்ச்சித்தருணங்கள் மகத்துவமானவை.

மதுவின் கோரப்பிடியில் சிக்கித்தவிக்கும் தந்தையின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் அவனின் ஆசைகள் ஏதோவொரு வடிவில் நிராசையாகப்படுகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் அம்மாவினை கடுமையாக தாக்கும் தந்தையின் செயற்பாட்டில் கடுமையாக விரத்தியடைகின்றான். அவனின் உணர்வுகள் கொந்தளிக்கின்றன. குடும்பப்புகைப்படத்தில் தந்தையின் புகைப்படத்தினை பிரித்தெடுத்து குழிதோண்டிப் புதைத்துவிடுகின்றான். அக்காட்சிகள் சொல்லிவிட்டுப்போகும் உணர்ச்சித்தருணங்கள். மிகுந்த மனவெழுச்சியினைத் தருகின்றன.

இயல்பான வட்டாரவழக்கு பேச்சுமொழியும், திறமையான நடிகர்களும் நடித்து குறும்படத்தினை யதார்த்தமாக வைத்திருக்க முயன்று அதில் பெருவாரியான வெற்றியையும் கைக்கொண்டிருகின்றார்கள்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## ஒரு யூத நண்பனுக்கு

சாத்திய மற்றதை
என்னிடம் கேளாதே
நட்சத்திரங்களைக் கொண்டு வரும்படி
சூரியனிடம் நடந்து செல்லும்படி
என்னிடம் கேளாதே!
கடலை வற்றவைக்கும்படி
பகலொளியைத் துடைத்து விடும்படி
என்னைக் கேளாதே
எனது கண்களை,
எனது காதலை
எனது இளமை நினைவுகளை
அழித்து விடும்படி என்னைக் கேளாதே
நான் ஒரு வெறும் மனிதன்

ஓர் ஒலிவ் மரத்தின்கீழ்
நான் வளர்ந்தேன்
எனது தோட்டத்துக் கனிகளை
நான் புசித்தேன்
திராட்சை வனங்களில்
வைனை நான் குடித்தேன்
பள்ளத்தாக்குகளில்
கள்ளிப் பழங்களை
அதிகம் அதிகம் நான் ருசிபார்த்தேன்.
எனது செவிகளில்
வானம் பாடிகள் பாடல் இசைத்தன
நகரங்களிலும் வயல் வெளிகளிலும்
வீசிச் சென்ற சுதந்திரக் காற்று
எப்போதும் என்னைச் சிலிப்படைவித்தது.
எனது நண்பனே
எனது சொந்த நாட்டினை விட்டுப் போகுமாறு
நீ என்னைக் கேட்க முடியாது.

## ஏனெனில் நான் ஓர் அராபியன்

நான் தடுப்புக்காவலில் இருக்கின்றேன்
ஐயா அதற்குக் காரணம்
நான் ஓர் அராபியன் என்பதே
தன் ஆன்மாவை விற்க மறுத்த
ஓர் அராபியன்
ஐயா, விடுதலைக்காக முயன்ற ஓர் அராபியன்
தனது மக்களின் துயர்களை
எதிர்த்து ஓர் அராபியன்
நீதியான சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவன்
ஒவ்வொரு மூலையிலும்
மரணத்தை எதிர்த்துப் பேசியவன்
ஒரு சகோதரத்துவ வாழ்வைக் கோரி
அதற்காக வாழ்ந்தவன்
ஆகவேதான்
நான் தடுப்புக் காவலில் இருக்கின்றேன்.
ஏனெனில்
நான் போராடத் துணிந்தவன்
மேலும் ஏனெனில்
நான் ஓர் அராபியன்

எம்.ஏ.நுஃமான்

1980 பங்குனி வெளிவந்த
அக்கினி குஞ்சு இதழில் இருந்து

# இஞ்சி இடுப்பழகி

## திரை விமர்சனம்

குண்டுப்பெண் சந்திக்கும் பிரச்சினைகள்தான் கதையே" என இந்தப்படத்தின் எல்லா ப்ரோமோசனிலும் சத்தியம் பண்ணி சொன்னார்கள், முக்கியமா "தி மோஸ்ட் பிட்டஸ்ட்" ஹீரோயின் கம் யோகா டீச்சரான அனுஷ்கா 25 கிலோ எடையை கூட்டி நடிக்கிறார் என்பது பெரிய எதிர்பார்ப்பைக் கிளப்பியிருந்தது. சரி படம் எப்படி! பத்து வயசில அப்பாவை இழந்த "பப்ளி" பொண்ணு அனுஷ்கா.

அம்மா, தம்பி, தாத்தான்னு மிடில்கிளாஸ் வாழ்க்கை. கல்யாண வயசாகியும் ஒரு மாப்பிளையும் செட் ஆகலை. வர்ற மாப்பிள்ளை எல்லாம் அனுஷ்கா சைஸாலே, "தெறிக்க"விடுறாங்க. ஒரு கட்டத்தில கல்யாணத்து மேலேயே வெறுப்பா இருக்கிற சமயம் ஆர்யா மாப்ளையா வர்றாரு. டாகுமெண்ட் ப்லிம் டைரக்டராகணுங்கிற லட்சியத்தில இருக்கிற ஆர்யாவும், கல்யாண வெறுப்பில இருக்கும் அனுஷ்காவும் தனியே பேசி திருமணத்தில் இருந்து தப்பிக்கிறார்கள்.

அதன் பிறகும் இருவரும் நண்பர்களாகத் தொடர்கிறார்கள். ஒரு கட்டத்தில் ஆர்யா மீது




அனுஷ்காவிற்கு காதல் வரும் போது கல்யாணம் நிச்சயமாகி விடுகிறது. ஆர்யாவின் லண்டன் தோழியும் அவருக்கு ப்ரோப்போஸ் செய்ய சேர்ந்தார்களா இல்லையா என்பதே க்ளைமாக்ஸ் .இது ஒரு கதை. இன்னொரு கதை, பிரகாஷ்ராஜ் வைத்திருக்கும் உடனடி எடைக்குறைப்பு நிறுவனத்தில் அனுஷ்கா உடல் எடையைக் குறைக்கப் பணம் கட்டி சேர்கிறார். அங்கு ஏற்கனவே அழகிப்போட்டியில் பங்கேற்பதற்காக எடை குறைக்கப் பயிற்சி எடுக்கும் அனுஷ்காவின் தோழிக்கு கிட்னி பெயிலியர் ஆக, அனுஷ்கா தட்டிக்கேட்கிறார்.

அவருக்கு நீதி கிடைத்ததா, அந்தப் போலி நிறுவனம் என்னவாயிற்று? என்பது கிளைமாக்ஸ்க்கு முந்திய க்ளைமாக்ஸ். அனுஷ்கா, ஆர்யா, பெர்ப்பாமென்ஸ் பின்னியெடுக்கும் ஊர்வசி என எல்லோரையும் வைத்துக்கொண்டும் உருட்டு உருட்டென உருட்டியிருக்கிறார் இயக்குநர். பன்மொழிப் படங்களில் கையாளப்படும் சாதாரண விதிகள் கூட மீறப்படுவதால் தெலுங்கு டப்பிங் படம் பார்க்கும் பீல் வந்துவிடுகிறது.

உடல் பருமன் என்பது அவமான விடயமில்லை, அதற்காக தவறான வழிகளில் உங்கள் உடல்நலத்தை அடகு வைக்க வேண்டாம் என்பது ஒரு ஒன்லைன். "நீங்கள் எப்படி இருந்தாலும் உங்களை விரும்பும் நபர் தேடி வருவார்" இது இன்னொரு ஒன்லைன். இந்த ரெண்டுக்கும் நடுவில் நாம் கொஞ்சம் அலைக்கழிந்துதான் போய்விடுகிறோம். உத்தமபுத்திரன் படத்தில் "குட்டிப்புலி"யாக வந்த குண்டுப்பையன் பரத் இதில் ஸ்லிம்மான அனுஷ்கா தம்பியாக வந்து "அட" சொல்ல வைக்கிறார்.



"அடியே நான் உத்தமவில்லி" மாதிரியான டயலாக்கில் அங்கங்கே ஊர்வசி ரிலாக்ஸாக வைக்கிறார். சில ஷாட்களில் ஒளிப்பதிவாளர் நீரவ் ஷா நானும் இருக்கிறேன்னு சொல்கிறார். ஒரே ஆறுதல் அனுஷ்கா மட்டுமே குண்டானாலும் அழகு போகாது எனப் புரிய வைத்திருக்கிறார்.




# மழை நிவாரணத்துக்காக 25 இலட்சம் கொடுத்த சூர்யா

அண்மையில் கனமழை காரணமாக தமிழகத்தில் ஏற்பட்ட துயரங்களைத் துடைக்க நடிகர்கசங்கம்சார்பில் பெரியஅளவில் நிதி திரட்ட முடிவு செய்திருக்கிறார்களாம்.

நிதி திரட்டி அரசிடம் அளிப்பது அவர்களுடைய திட்டம்.

சிவகுமார், சூர்யா, கார்த்தி ஆகியோர் இணைந்து அவர்கள் குடும்பம் சார்பாக 25 இலட்சம் நிதி அளிக்கப் பட்டிருக்கிறதாம். இதற்கான காசோலையை நடிகர் சங்கத்தலைவர் நாசரிடம் கொடுத்திருக்கிறார்களாம். இவர்களைத் தொடர்ந்து நடிகர் விஷால் சார்பில் பத்து இலட்சம் நிதி அளிக்கப் பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

இவர்களைத் தொடர்ந்து மற்ற நடிகர்களும் கொடுக்க விருக்கிறார்கள் என்றும் அனைத்தையும் திரட்டி அரசாங்கத்திடம் கொடுக்கவிருப்பதாகவும் சொல்கிறார்கள்.



# உயிர்ப்பறிப்பு உய்யவிடாது!

இலங்கையில் இடம்பெற்ற போரில் தமிழினத்துக்கு எதிரான அட்டூழியங்களை தடுக்கத் தவறியவர்களின் பட்டியல் இன்னும் முற்றுப்பெறாது நீணடு கொண்டே செல்கிறது.

அரச பயங்கரவாதத்துக்கு உலகளவில் அளிக்கப்பட்ட ஆதரவும் ஒத்துழைப்புக்களும் இந்தப பட்டியல் நீண்டு செல்லக் காரணமாக அமைந்துள்ளது.

இறுதிக்கட்டப் போரில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் எனற தகவல் இன்னும் முழுமையாக வெளியிடப்படாத நிலையில் அது தொடர்பான நம்பகமான விசாரணைகள, தரவுகள் தரப்படாத காரணத்தால் மக்கள் உயிரிழப்புக்கு காரணமானவர்கள் பட்டியல் நீண்டுகொண்டு செல்வதையும் கட்டுப்படுத்த முடியாது.

இறுதிப் போரில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை இந்தியா நினைத்திருந்தால் தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்றும் அவ்வாறு செய்ய இந்திய அரசு தவறிவிட்டது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆணையாளர், நீதியரசர் திருமதி நவநீதம பிள்ளை அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டு பெரும் புயலைக் கிளப்பிவிட்ட நிலையில் மற்றுமொரு முன்னாள் நீதியரசரின் குற்றச்சாட்டும் இறுதிப் போரைச் சார்ந்து முன்வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் கொல்லப்படுவதை தடுக்கும் பணிகளை தொண்டு நிறுவனங்கள் இலங்கையிலும் ஆற்றியிருந்தன.

ஆனால் இந்தப் பணியை இறுதி யுத்தகாலப் பகுதியில் இடையில் நிறுத்தியிருந்தன. எக்காலப் பகுதியில் அவற்றின் பணிகள் அதிகளவில் தேவைப்பட்டதோ அந்தக் காலப் பகுதியில் பணியாற்றத் தவறிமை அதிகளவில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

தொண்டு நிறுவனங்கள் மீதான சந்தேகம் தற்போது பாரிய குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது.

தொண்டு நிறுவனங்கள் மீது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வைத்திருக்கும் குற்றச்சாட்டு சாதாரணமான குற்றச்சாட்டல்ல.

அரச பயங்கரவாதத்துக்கு துணை புரிந்து தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்படுவதற்கு தடையற்ற தக்கதருணத்தை ஏற்படுத்தி கொடுத்ததாக அந்தக் குற்றச்சாட்டு அமைந்துள்ளது.

மக்கள் தம்மைக் காத்துப் பாதுகாக்கும் என்று பூரணமாக நம்பிக்கை வைத்து, நம்பிக் கெட்டவர்களாக கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்படுவதற்கும அனுசரணை வழங்கியவரகள் போன்று செயற்பட்ட தொண்டு நிறுவனங்கள் மீது வைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்கள் மறுதலிக்க முடியாதவையாகவுள்ளன.

சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களை வெளியேறுமாறு மகிந்த அரசு உத்தரவிட்ட சந்தர்ப்பத்தில் மக்களை அந்தரிக்க விட்டு வெளியேறிய பணியாளர்கள் மனிதாபி மானத்தை இழந்தவர்களாகவே கருதப்பட வேண்டியவர்கள்.

மக்களோடு மக்களாக நின்று சேவை செய்யும் தொண்டு நிறுவனங்களுக்கு மத்தியில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை காக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் காக்கத் தவறியுள்ளன இந்த தொண்டு நிறுவனங்கள்.

உண்மைகளை மூடி மறைக்கும் முயற்சிகளில் மகிந்த அரசுக்கு துணை புரிந்த தொண்டு நிறுவனங்கள் மக்களின் கண்ணீரைக் கண்டுகொள்ளவில்லை. அவர்களின கதறல்களுக்கும் செவிசாய்க்கவில்லை.

மகிந்த அரசின் உத்தரவிற்காய் நீண்டநாட்கள் காத்திருந்தவர்கள் போன்று இறுதி யுத்த வலயத்திற்குள் மக்களை அவல நிலையில் விட்டுவிட்டு வெளியேறியிருந்தன.

கொலைக் களத்தில் ஏற்றப்பட்டமாடுகள் போன்று கொன்றொழிக்க தடைகள் ஏதும் இல்லாத சூழ்நிலையை அரசுக்கு ஏறபடுத்தி கொடுக்கவும் தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் மக்கள் உயிரைக் காக்கும் கவசமாக மாறியிருப்பின் இத்தனை பேரழிவை தமிழினம் எதிர்கொண்டிருக்காது.

மக்களைக் காக்கும் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு தமது உயிரைக் காக்கும் சுயநல நோக்கோடு யுத்த பூமியை விட்டு வெளியேறி கொடும் பாவங்களுக்கு துணை புரிந்தனர்.

இதன் விளைவாகவே பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உயிர் தடையின்றி பறிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டை தொண்டு நிறுவனங்கள்மறுக்க முடியாது. ஆனால் இலங்கை அரசைப் போன்று நியாயப்படுத்த முற்படலாம். இருபபினும் உயிர்ப் பறிப்பை எந்தக் காரணம் கூறியும் நியாயப்படுத்த முடியாது.

இனி வருங் காலங்களில் எத்தனை நாடுகளுக்குச் சென்று எத்தகைய மனிதாபிமான பணிகளை முன்னெடுத்தாலும் இறுதிப் போரில் தமிழ் மக்களை அந்தரிக்கவிட்டு அவலச் சாவுக்கு அடித்தளமிட்ட தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கு வாழ்க்கையில் நிம்மதி கிடைக்க மார்க்கமே இல்லை.

தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச விசாரணை ஊடாக நீதியைப் பெற்றுத் தரும.

போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள என்று நம்பியிருந்தபோதும் அதைக்கூட நிறைவேற்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் முன்வரவில்லை.

மாறாக மீறப்பட்ட மனித உரிமைகளை நீங்களே விசாரியுங்கள். நீதியை குழிதோண்டிப் புதையுங்கள் உங்களை கேட்பதற்கு இங்கு யார் உள்ளனர் என்று உள்ளக விசாரணைக்கு ஊக்கமளித்துள்ளனர்.

சரவதேச பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டால் ஒருவேளை தொண்டு நிறுவனப் பணியாளர்கள் வெளியேறிமை குறித்து கேள்வியெழுப்பப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் உள்ளக விசாரணைக்கு அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு ஒத்தாசை வழங்கும் ஐக்கிய நாடுகள் சபை இணங்கியதா? என்ற சந்தேகத்துடன் கூடிய கேள்வி எழுகின்றது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதாக வெளிவேசம போட்டுக் கொண்டும் மாநாடுகளைக் கூட்டியும் மக்களை வதைக்கும் அரசுகளுக்கு ஆதரவாக செயறபடும் தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கு தமிழ் மக்களின் வேதனை புரிவதற்கு வாய்ப்பில்லை.

மருத்துவ உதவிகள் இன்றி மண்ணிலே மரணிக்கும் நிலையில் படுகாயங்களுடன் கிடந்தவர்களை மருத்துவமனைகள் என்றுகூட பார்க்காமலும் மக்களை கொன்றொழிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட ஆட்சியாளர்களின் ஏவலாளர்களாகக் விண்ணிலே வட்டமிட்ட விமானங்கள் வீசிய குண்டுகள் மழையாக சொரிந்த காலப்பகுதியில் மனிதாபிமானத்தை சிறிதளவேனும் சிந்திக்காமல் வெளியேறிவர்களிடம் இவற்றை எதிர்பார்ப்பது மடமைத்தனம்.

மனிதத் தவறால் நடந்தவை என்று அறிக்கையிட்டும் போரில அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்படுவது சாதாரணமானது என்றும் அலட்சியப் போக்குடன் அறிக்கை வெளியிடும் அதிகாரிகளிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்ப்பது ஏமாற்றத்தையே தரும்.

இருப்பினும் மக்கள் கொல்லப்படுவதை தடுக்க பலவழிகள் இருந்தும் தமக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வழியைப் பயனபடுத்தி சொகுசு வாகனங்களில் வெளியேறிய தொண்டு நிறுவனப் பணியாளர்கள் முள்ளிவாய்க்காலில் கொத்துக் குண்டுகளுக்கு இரையான ஆத்மாக்கள் மன்னிக்காது. அவர்களை தொடரும் பிணியாகும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரபபட்ட பின்னர் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மாவீரர் நாள் நிகழ்வுகளை துணிச்சலுடன் நடத்தியவர்கள்.

இதனால் பலர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். பலர் குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி தற்போதும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் 2015 ஆம் ஆண்டிலும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் தாயகமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் செனனை உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிகழவுகளனைத்தும் ஒன்றை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.


இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் இனவிடுதலைக்காக போராடிய மறவர்களை தமிழர்கள் மறக்கமாட்டார்கள்.

அரசு பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தி அடக்குமுறைகளைப் பிரயோகிக்க எத்தணித்த போதும் மாவீரர் நாள் நிகழ்வுகளை தடுக்க முடியவில்லை.

ஈழத்தமிழர்கள், மாவீரர்களை எளிதில் மறக்க மாட்டார்கள் என்பது எவ்வளவு உண்மையோ அதேபோன்று மன்னிக்க முடியாத பாரிய குற்றத்தை இழைத்து இனப் படுகொலைக்கு ஆதரவளித்த தொண்டு நிறுவனப் பணியாளர்களையும் மன்னிக்கவும் மாட்டார்கள் மறக்கவும் மாட்டார்கள்.

**காண்டீபன்**

**ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நிறுவனங்களும் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் கூட, தலையாட்டி பொம்மைகளாக மகிந்த அரசாங்கத்திற்கு இசைந்து சென்றன. இது மகிந்த அரசுக்கு மேலும் வலுவூட்டியதுடன் அவர்களது மனித உரிமை மீறல்களின் உச்சச் செயற்பாடுகளைக் கவனிப்பார் அற்றுச் செய்து முடிக்க உதவி புரிந்தன. (சி.வி.விக்னேஸ்வரன்)**





# தகிப்பில் உழலும் வாழ்வு



இலங்கையிலிருந்து இந்தியாவிற் குப் புலம்பெயர்ந்தவர்களின் வரத்து நான்கு கட்டங்களாகத் தீவிரத்தோடு நிகழ்ந்துள்ளது. உதிரி உதிரியாக வருபவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந் நான்கு கட்டப் புலப்பெயர்வுகளும் பாரிய பிரச்சினை களுக்குட்பட்டவை. இலங்கையில் இனப்பிரச்சினை தீவிரத்தை அடையும் போதெல்லாம் அகதிகளின் முதல் தேர்வு ஐரோப்பிய நாடுகளாகவும் அடுத்த தேர்வு இந்தியாவாகவுமே இருந்துவந்துள்ளது. இத்தேர்வு பொருளாதார அடிப்படையி. லானதென்பது கவனிக்கத்தகுந்தது. இந்தியாவில் தஞ்சமடையும் அகதிகள் தமிழ்நாட் டிலிருக்கும் அகதிமுகாம்களில் அடைக் கப்பட்டார்கள். இவ்வாறு அடைக் கப்படுகிறவர்கள் தங்களின் அடிப்படை உரிமைகளை அடகுவைத்துவிட்டே கண்காணிப்புக் கூடாரத்தில் வாழ ஆரம்பித்தார்கள். இந்தியா 'டிஜிட்டல் இந்தியா'வாகவும் மாறிவிட்டது. ஆனால், இன்றும் முகாமில் எந்த மாற்றங்களும் நிகழவில்லை.

அகதி முகாம்களில் தஞ்சமடையும் மக்கள் பல்வேறான சூழல்களில் தங்க வைக்கப்பட்டார்கள். அதற்கு ஒரு சிறிய உதாரணம், கன்னியாகுமரி முகாம். அது ஒரு பழைய நெற்களஞ் சியம். சீட்டுகளையும் தகரங்களையும் வைத்து அடைத்து, அதுவே இன்று அகதிமுகாமாக அறியப்படுகிறது. இதேபோல் கோழிப்பண்ணை, மில் ஆகியவையும் முகாம்களாகி இருக் கலாம்.

அகதிகளின் முதல் பிரச்சினை அவர்கள் நிரந்தரமற்றவர்கள் என்பது. அகதிகள் வெவ்வேறு நிலங்களில் இருக்கும் முகாம்களில் இந்தியச் சமூகத்தோடு ஒட்டக்கூடிய அளவில் இருந்தாலும், நிரந்தரமான ஒரு வாழ்வை அவர்களால் வாழ முடிவ தில்லை. நடைமுறைச் சிக்கல்களே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம். வாழிடம், சமூக உறவுகள் என எதுவும் அவர்களுக்கு ஆரோக்கியமானதாய் இல்லை. நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்துவிட்ட சூழலில் அகதிகள் பற்றிய பரிந்துரைகளை அரசு கவனத்தில் கொள்கிறதா என்பது பதிலற்ற கேள்விதான்.

பலவீனமானவர்களை உற்பத்தி செய்தலும் வளர்த்தெடுத்தலும்தான் அரசின் நோக்கமாக உள்ளது. பெண்கள், மாற்றுப் பாலினத்தவர்கள், ஆண்கள் என்று எந்த வரைமுறையையும் உருவாக்கிக்கொண்டு அரசு செயல்படுவதில்லை என்பது மட்டும்தான் ஆறுதலான செய்தி. உண்மையில் முகாம்களில் இருக்கிற மக்கள்தொகை பற்றியே சரியான தகவல் கிடைப்பதில்லை. முகாம்களிலிருந்து தப்பித்து வெளியேறியவர்கள் குறித்த தகவல்களே இன்னும் சீராக்கப்பட வில்லை.

பொதுவாக சமூக அமைப்பு குடும்பத்தை மையமாக வைத்தே இயக்கப்படுகிறது. பெண்ணின் கடப்பாடுகள் சமூகக் கட்டமைப்பில் முக்கியப் பொறுப்பிலிருப்பதாக, கற்பிக்கப்படுகிற ஆணுக்கு பணிவிடை செய்வது என்ற அ்பத்தமான சிந்தனை முறையால் வடிவமைக்கப்பட்டவை. இலங்கைத் தமிழ்ச் சமூகமும் அதிலிருந்து விடுபட்டதில்லை. மற்றபடி அகதிகள், அரசுக்கும் க்யூபிராஞ்சுக்கும் முகாமிலிருக்கும் அனைவரும் பிண்டங்களே. பெண்கள் என்றால் கொஞ்சம் விசேசமான பிண்டங்கள். அவ்வளவே.

க்யூபிராஞ்சுக்காரர்களை இந்தியர்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ தமிழ்நாட்டின் இலங்கை அகதிகளுக்கு நன்றாகவே தெரியும். ஒரு நாளைக்குப் பத்து தடவை 'க்யூபிராஞ்சுக்காரர்' என்று உச்சரிக்காவிடில் அவர்களுக்கு நாள் விடியாது. திருச்சி, திருவண்ணாமலை, கன்னியாகுமரி, ஈரோடு போன்ற இடங்களில் இருக்கக்கூடிய ஏழு முகாம்களில் பார்த்த நேரிடையான அனுபவம்தான் இது. அங்கிருக்கும் பெண்கள் தங்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் முகாம், ஈழ விவகாரம், தங்கள்மீது நடத்தப்படும் வன்முறைகள் எவற்றைக் குறித்தும் அக்கறையற்று இருப்பவர்களாக முதல் பார்வையில் தெரிந்தனர். ஆனால், அடுத்தடுத்த சந்திப்புகளில் அந்தப் பெண்கள், பேசும் வலிமை கொண்ட வர்கள், அவர்களால் பகிர்ந்துகொள்ளவும் அதற்காகப் போராடவும் முடியும் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. பொது வெளியில் அரசு மேற்கொள்ளும் வன்முறையைக் காட்டிலும் க்யூபிராஞ்சுக் காரர்கள், முகாம் ஆண்களால் அன் றாடம் நிகழ்த்தப்படும் உடல், உளரீதியி லான பிரச்சினைகள் அவர்களைச் சோர்வடையச் செய்கிறது. யாரிடம் எதற்காகப் பேச வேண்டும் என்பது கூடச் சமூக ஆண்களாலேயே தீர்மானம் செய்யப்படுகிறது.

இலங்கையில் இருந்தபோதாவது அவர்களின் வாழ்பரப்பு கொஞ்சம் அதிகமாக விருந்தது. ஆனால் முகாம் களில் பெண்கள் அறைகளில், துண்டு பட்ட பாதுகாக்கப்பட்ட வெளியேற முடியாத ஒரு வெளிக்குள் கட்டுப்படுத்தப் படிருக்கின்றனர். ஆண்கள் மறைந்தோ அல்லது அரசிடம் முறையான அனுமதி வாங்கியோ வெளியிடங்களுக்குச் செல்ல லாம். பெண்களுக்கு அதுகூடச் சாத்திய மில்லாததுதான். வெளியிடங்களில் பணியில் இருக்கும் பெண்கள் பெரும்பாலும் தாங்கள் தமிழ் அகதி என்பதை எங்கும் தெரிவிப்பதில்லை. முகாம் அமைந்திருக்கும் பகுதிகளிலிருக்கக் கூடிய அகதிகளுக்குப் பெரும்பாலும் இந்தியர்களோடு நல்ல உறவுநிலை கிடையாது. 'கேம்புக்காரர்' என்ற சொல் இழிசொல்லாகவே பார்க்கப்படுகிறது. அதனாலேயே அவர்கள் தாங்கள் யார் என்பதை மறைத்துப் பணிபுரிகிறார்கள். பெண்கள் தங்களை, முகாமைச் சேர்ந்த வர்கள் என எங்கும் தெரியப்படுத்த விரும்புவதில்லை. பணியிடங்களில் மேற்கொள்ளப்படும் பாலியல் தொந்தரவு களும் இளக்காரப் பேச்சுகளும் அவர் களைத் தங்களை மறைத்து வாழ நிர்ப்பந்திக்கிறது.

வீட்டிலும் பொதுவெளியிலும் நிகழ்த்தப்பட்டது இந்த நேர்காணல். முகாமின் பெயர்களும் பெண்களின் பெயர்களும் வயதும் மாற்றப்பட்டிருக்கிறது. அதே போல் இங்கு நேர்காணல் செய்யப்பட்ட இரு பெண்களின் பிரச்சினைகள் வேறு வேறாக இருக்கிறது. பிரச்சினையைச் சொல்லும போது அவர்கள் குடும்பம் என்கிற சிந்தனையூடாகவே அவர்களால் உரையாட முடிநதது. உடல்வழி நிகழ்த்தப்படுகிற வன்முறைகள் பற்றி இருவரும் கவனப்படுத்துகின்றனர். இரு நேர்காணல்களின் அடிப்படையும் இதுதான்.

**மேலும் முகாமின் இறுக்கம் பற்றிய சிறு புரிதலுக்காக:**

முகாம்: -திருவண்ணாமலை

க்யூபிராஞ்சுக்காரங்கள் விடமாட் டாங்கள். அவங்களுக்கு என்ன நடந்தா லும் தெரிஞ்சு போயிரும். சனம் சொல்லிக் குடுதத்துடுங்கள்.

முகாம்: பவானி

க்யூபிராஞ்ச் வருவான். அவன் வந்தானெண்டால் கேள்விகேட்டே கொண்டு போடுவான். இன்னொன்று, அவங்கள் (க்யூ) எங்களுக்கு எல்லாமே செஞ்சு தாராங்கள். பிறகென்ன, இங்கயிருக்கிற நிறையப் பெடியங்கள் அவங்களுக்கு நல்ல சப்போட். இப்ப நான் எதாச்சும் கதைச்சு, அது பேப்பர்ல வந்துச்செண்டால் க்யூகாரங்கள் ஒண்டும் சொல்லமாட்டாங்கள்தான். ஆனாலும் நாளைக்கு அவங்கள் வந்து 'உங்கள நல்லாத்தானே வச்சிருக்கிறம். பிறகு ஏன் பத்திரிகைக்குப் பேட்டி யெல்லாம் குடுக்கிறீங்க எண்டு கேட்டால் நான் என்ன சொல்லுறது, சொல்லுங்கோ. நாளைக்கு எதுவுமெண்டால் அவங்கதானே வந்து நிப்பாங்கள். நாங்களும் அவங்களிட்டதான் போய் நிக்கோனும். பயம் இல்லை, அவங்களுக்கு விசுவாசமா இருக்கத்தானே வேணும். எங்கள்ளை வச்சு பாக்கிறாங்கள் எல்லோ.

முகாம்: மாவீரன்,

இங்க 39 குடும்பங்கள் இருக்குது. யார், யாரைத் தேடி வாராங்கெண்டு எல்லாருக்கும் தெரியும். எல்லாருக்கும் தெரியிற நேரத்தில அவங்களுக்கு (க்யூ) மட்டும் தெரியாதா? எங்கள அவங்கள் எப்பவும் கன்றோல்ல வச்சுக்கொள்றதுதான் அவங்கட வேல. மற்றப்படி நான் எதுவும் கதைச்சால் அவனுகள் நினைச்சால் என்ன வேண்டு மெண்டாலும் செய்யலாம். ஏன் பெரிய கதையள், நீங்கள் எப்பவாது பத்திரி கைல இந்த முகாமில, இந்த பொலிஸ் ஸ்டேசன்ல தமிழ் அகதி தற்கொலையெண்டு எந்தச் செய்தியை யாவது பாத்திருக்கிறீங்களா? ஆனா, இங்கை யும் லாக்அப் சாவுகள் நடக்கிறது.

. .இவற்றை இங்கு குறிப்பிட்டுவதற் குக் காரணம், அவர்கள் பயப்படுவது விசுவாசத்தின் அடிப்படையில். விசுவாசதிற்கு மூல காரணம் அச்சம். மிகவும் பலவீனமான மனிதர்கள் முகாம்களுக்குள் இருக்கிறார்கள். பலமானவர்கள் எனக் கருதப்படும் அகதிகள் சிறப்பு முகாம்களுக்குள் அடைக்கப்பட்டு பலவீனமான, அதிகா ரத்துக்குக் கட்டுப்பட்ட மனிதர்களாக உருவாக்கப்படுகிறார்கள். முகாம் பெண்களின் வாழ்வுச் சிக்கல்கள் பொதுப்பரப்பில் மிக அரிதாகவே பேசப்பட்டிருக்கிறது. அதற்கான கவனஈர்ப்பு முயற்சிகளும் மிகக் குறைவே. கவனப்படுத்தலின் தொடர்ச்சியாகவே இந்த அனுபவப் பகிர்வுகளும் இடம் பெறுகின்றன.

**இளஞ்சேரல்**



இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழரது அகதி முகாம் ஒன்று

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 09

## மருத்துவ பிரார்த்தனை

அன்புமயமான ஆண்டவனே! நோய், துயரம், வேதனை, இழப்பு என்பவற்றுடன் அல்லலுறும் மக்களை சந்திப்பதே எமது அன்றாட கடமையும் வாழ்க்கையும் ஆகிவிட்ட எமக்கு அவர்களை ஆதரவுடன் பராமரிப்பதற்கு உமது அன்புமயமான இதயத்தை தந்தருளுவீர்களாக. நாம் களைப்புற்றிருக்கும் பொழுதும் சலிப்படையாது துன்பப்படும் மனிதர்களின் துயர் துடைக்கும் மனவலிமையை தங்களிடம் தானமாக வேண்டி நிற்கின்றோம். நோய், துயரம் காரணமாக தெரிந்தோ தெரியாமலோ நோயுற்றவர்கள் செய்யும் தவறுகளையும் வன்சொற்களையும் மன்னித்து அவர்கள் மீது அன்பு செலுத்தும் மனப்பக்குவத்தை தந்தருளும்.

நாம் கற்ற,பெற்ற அறிவுகள் அனைத்தையும் நோய், துன்பம், இழப்புகள் போன்றவற்றை குறைப்பதற்கும் தடுப்பதற்கும் பயன்படுத்திக்கொள்ளும் சக்தியை எமக்கு கொடும்.

உமது அன்புமயமான ஆட்சியில் இருக்கும் அனைவரையும் சமமாகக்கருதி அனைவருக்கும் ஒரேவகையான கவனிப்பை வழங்கும் பரந்த இதயத்தை எமக்கு தந்தருள்வீர்களாக.

– யாழ். மருத்துவக்குழு–

## நீங்கள் இன்சுலின் பாவிப்பவரா ?

### இன்சுலினை யார் பாவிக்கிறார்கள்?


- நீரிழிவுநோய்வகை 1 நோயாளிகள்(இவர்களுக்கு இன்சுலின் சுரப்பதில்லை)
- நீரிழிவுநோய்வகை 2 நோயாளிகள் (மருந்து வில்லைகளுக்கு கட்டுப்படாவிட்டால்)
- நீரிழிவு நோயாளர்களின் குருதியில் வெல்லத்தின் அளவு சரியான கட்டுப்பாட்டில் இருக்கவேண்டிய தேவை ஏற்படின் (நோய் தொற்றுக்கள் ஏற்படும் போது)
- நீரிழிவு நோய்க்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு பக்கவிளைவுகள் ஏற்படின்.

### எவ்வாறு வைத்தியர்கள் இன்சுலினுக்கு மாற்றுவர்?

- இதற்காக நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவீர்கள்.
- வைத்தியசாலையில் இன்சுலின் ஊசி போடப்பட்டு உங்கள் குருதி வெல்லம் சரிபார்க்கப்படும்.
- உங்கள் குருதிவெல்லம் கட்டுப்பாட்டுக்கு வந்தபின் வைத்தியர் உங்களை அதேபிரமாண இன்சுலினுடன் வீட்டுக்கு அனுப்புவர்.
- பின்பு மீண்டும் ஒருகிழமையின் பின் குருதி வெல்லம் சரிபார்க்கப்பட்டு இன்சுலினின் அளவு மாற்றப்படும்.

### நான் எவ்வாறு இன்சுலின் மருந்தை பாதுகாப்பது?


- இன்சுலின் மருந்தை வீட்டு குளிர்சாதனப்பெட்டியின் நடுப்பாகத்தில் வைக்கவேண்டும். ஒருபோதும் அதிகுளிரான பகுதியில் வைக்கக்கூடாது.
- இன்சுலினை ஒரு குடுவையில் போட்டு குளிர் சாதனப்பெட்டியின் கதவில் வைக்கவேண்டும். வீட்டில் குளிர்சாதனப்பெட்டி இல்லாவிடில்,
- கீழ் காட்டியவாறு மண்பானையில் இட்டு சூரிய ஒளி படாத பகுதியில் வைக்கவேண்டும்.




- சூரியஒளி படவிடவேண்டாம். குளிர்பிரதேசத்தில் வாழ்பவராயின் அறைவெப்பநிலையிலேயே வைக்கலாம்.
- இன்சுலின் பேனா பாவிப்பதாயின் குளிர்சாதனப் பெட்டி தேவையில்லை

### நான் பிரயாணிக்கும்போது இன்சுலினை எப்படி கொண்டு செல்வது?

கீழ் காட்டியவாறு ஐஸ்கட்டி உள்ள பாத்திரத்தில் கொண்டு செல்லுங்கள். ஒருபோதும் ஐஸ்கட்டியுடனோ அல்லது தண்ணீருடனோ இன்சுலின் தொடுகையுறக் கூடாது.




### இன்சுலின் ஊசியை எவ்வாறு தெரிவுசெய்வது?

நீங்கள் 1 ml கொள்ளக் கூடிய **syringe** ஐ பாவிக்கலாம். இதில் 100 வரை அலகுகள் பிரிக்கப்பட்டிருக்கும். ஊசி **29G** உள்ள ஊசி ஐ பாவிக்கலாம்.



### புது ஊசியை எப்போது மாற்ற வேண்டும்?

ஊசியின்முனை மழுங்காவிடிலோ, இரத்தம் படாவிடிலோ, அழுக்கு படியாவிடிலோ அதை ஒரு கிழமைக்கு பாவிக்கலாம்.

### ஊசியில் இன்சுலின் மருந்தை எவ்வாறு எடுப்பது?


1 ml **syringe** 100 அலகுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். அதேபோல் 1 ml இன்சுலினில் 100u காணப்படுகிறது. இதனால் 20u இன்சுலின் தேவையின் syringe இல் 20 அலகுகள் எடுத்தால் போதும்.

### இன்சுலின் ஏற்ற முதல் நான் என்ன செய்ய வேண்டும்?

- குளிர்சாதனப்பெட்டியிலிருந்து இன்சுலினை எடுத்து 10-15 நிமிடம் அறைவெப்பநிலையில் வைக்க வேண்டும்.
- கைகளை சவர்க்காரத்தால் கழுவவேண்டும்.
- இன்சுலின் போடுமிடத்தையும் சவர்க்காரத்தால் கழுவவேண்டும்.
- இன்சுலின் எடுக்க முதல் இன்சுலின் மருந்துக் குப்பின் மூடியை தொற்றுநீக்கியால் துடைக்க வேண்டும்.
- கைகளின் இடையில் வைத்து மருந்துக்குப்பியை உருட்டவேண்டும். மேலும் கீழுமாக குலுக்கக் கூடாது.

### நான் உடம்பின் எந்தெந்த பகுதிகளில் இன்சுலின் ஐ ஏற்றலாம்?

- கையின் மேற்புற தோள்பட்டை பகுதி
- வயிற்றில் தொப்புளை சுற்றிய பகுதி
- தொடையின் மேற்பகுதி



### நான் எவ்வாறு இன்சுலினை உடலில் ஏற்றுவது?

- இன்சுலினை $45^{\circ}$ இல் ஏற்றவேண்டும்.
- தோலில் மடிப்பை ஏற்படுத்தினால் $90^{\circ}$ இல் ஏற்றலாம்.
- ஊசி மடிந்திருந்தாலோ அல்லது இரத்தம் பட்டிருந்தாலோ பாவித்த ஊசியை திரும்பப்பாவிக்க வேண்டாம்.

### இன்சுலினை தொடர்ந்து ஏற்றுவதால் தோலில் ஏதும் பாதிப்புகள் ஏற்படுமா?

சிலவேளைகளில் தோலில் திரட்டுகள் தோன்றும். ஆனால் இப்போது தயாரிக்கப்படும் இன்சுலினால் இப்பாதிப்பு ஏற்படுவதில்லை.

### நான் இன்று காலையில் சப்பிடவில்லையெனில் இன்சுலினை போடலாமா?

இல்லை. இன்சுலினை, சாப்பிடும் போது அல்லது சப்பிட்ட பின்போ போட வேண்டும். சாப்பிடாமல் போடக் கூடாது.

### இன்சுலின் போட்டபின் சிலர் தலைச்சுற்று வருகிறது என்கின்றனர். அது ஏன்?

சிலருக்கு இன்சுலினால் குருதியில் வெல்லம் சாதாரண அளவைவிட குறையும் போது தலைச்சுற்று, தலைவலி, நெஞ்சு படபடப்பு, சோர்வுத்தன்மை, உடல் வியர்த்தல் போன்றன ஏற்படுகின்றன.

### இவ்வாறு வந்தால் என்ன செய்வது?

- வீட்டில் குருதிவெல்லம் அளக்கும் கருவியிருப்பின் அதன்மூலம் குருதிவெல்லம் குறைந்துள்ளதை உறுதிப்படுத்தலாம். அதன் பின் கொஞ்ச வெல்லத்தை எடுத்து மெல்லலாம்.
- வீட்டில் கருவி இல்லாதிருப்பின், கொஞ்ச வெல்லத்தை எடுத்து மெல்லுங்கள். பின் உங்கள் வைத்தியரிடம் அறிவியுங்கள்.
- இதனால் நீங்கள் வெளியே செல்லும்போது எப்போதும் இனிப்பு பொருளை கொண்டு செல்லுங்கள்.

Dr.க.சிவசுகந்தன்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.